Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஒக்ரோபர் 11 - 17, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 983

## ஆட்டம் காண்கிறது அத்திவாரமற்ற கூட்டமைப்பு!



### அதிகரிக்கிறது அதிகாரச் சண்டை

### கற்றுக் கொண்ட பாடங்கள் மக்களைச் சென்றடையுமா?

## 'திவி நெகும' ஒரு தேசியத் திட்டம்

# நவராத்திரி விரதம்

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் சக்தியை குறித்து நோற்கப்படும் நோன்பாகும். உத்தராயணத்தில் வசந்த நவராத்திரியும் தட்சணாயன காலத்தில் சாரதா நவராத்திரியும் தேவியைப் பூசிக்கச் சிறந்த காலமாகும்.

நவராத்திரியில் முதல் மூன்று நாளும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிக் காலம். இதில் இறைவன் உலகத்தை வாழ்விக்க விரும்புகின்றான். நடுவில் உள்ள மூன்று நாட்களும் ஞானசக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களைக் கொடுக்கும் முறையை அறிகின்றான்.

இறுதி மூன்று நாட்களும் கிரியா சக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் முன் அறிந்தவாறு அருள் வழங்குகின்றான் என்பது சிவாகமத்தின் உள்ளுறையாகும்.

ஆலயங்களிலும் இல்லங்களிலும் பிம்பம் (உருவம்) கும்பம் இவைகளால் ஒன்பது நாட்களிலும் வழிபடுபவர்கள். ஒன்பதாவது நாளாகிய மகாநவமி அன்று உபவாசம் இருந்து மறுநாள் விஜயதசமியன்று காலை ஒன்பது மணிக்குமுன் பாரணை செய்தல் வேண்டும். விஜயதசமி அன்று காலையில் சுவையுள்ள உணவுகள் செய்து சக்திக்கு நிவேதித்து நவமி யில் வைத்துள்ள புத்தகம் இசைக்கருவிகளைப் பராயணம் செய்து குடும்ப அங்கத்தவர்களுடன் பாரணையைப் பூர்த்தி செய்யலாம்.

எம். தட்சாயினி, யாழ்ப்பாணம்.

ஆன்மீகம்

# அனைத்தும் செய்யும் ஆண்டவர்

"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்" (சங்.138:8) என்ற வசனத்தை வாசித்திருப்பீர்கள். ஆம்.. அவரால் எதையும் செய்ய முடியும் என்பதற்குரிய சாட்சியைப் பாருங்கள்.

ஒரு இளம்பெண்ணுக்கு திருமணமாக மிகவும் தாமதமானது. அவளுக்கு திருமணம் நடத்த முயற்சி எடுக்க ஒருவரும் இல்லை. இதனால், அவள் அழுதபடியே ஒரு போதகரிடம் முறையிட்டு அழுதாள். போதகர் அவளிடம், மேற்கண்ட வசனத்தை வாசித்துக் காட்டியதுடன், "எனக்காக யாவையும் செய்து முடிக்கும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று தினமும் நூறு முறை சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்து," என்றார்.

மூன்று மாதங்கள் கழிந்தன. அவள் திருமண அழைப்பிதழுடன் போதகரைக்காண வந்தாள். போதகரே! எனக்காக கர்த்தர் உண்மையாகவே யாவையும் செய்து முடித்தார், என்று மகிழ்ச்சியுடன் கூறினாள். ஆதாம், ஏவாளை தோட்டத்தில் வைக்கும் முன்னர், கர்த்தர் அவர்களுக்காக சூரியன், சந்திரன், காற்று, உணவு, தண்ணீர் பறவைகள், மிருகங்கள், கனிவகைகள் எல்லாவற்றையும் சிருஷ்டித்து முடித்திருந்தார். இதனால் ஆதாமின் உள்ளம் நன்றி சொன்னது. அதுபோலவே, கர்த்தர் நமக்காக எல்லாவற்றையும் சிலுவையில் செய்து, முடிந்தது என்றார். பாவமன்னிப்பு உண்டாக்கினார்.

ம.மரீனா, குருநகர்.

# "ஹஜ்" ஜ்ச் செய்தல் பர்ளு

அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகின்றான். எவர்கள் அங்கு (மக்காவுக்கு) யாத்திரை செல்ல சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக அங்கு சென்று அவ்வாலயத்தை ஹஜ்ஜ்ச் செய்வது கடமையாகும்.

அல்குர்ஆன் : 3:97.

ஆம், இஸ்லாம் மார்க்கம் பூரணப்படுத்தப்படும் இறுதிக் கடமைதான் 'ஹஜ்' இதனை நிறைவேற்றுவதற்காக முஸ்லிம்கள் இப்போது மக்கா நோக்கி வெளிக்கிளம்பிவிட்டார்கள்.

ஹஜ் செய்யச் சொல்வோரின் அழைப்பு நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் அழைப்பாக இருக்கவேண்டும். அது ஷெய்த்தானுடைய அழைப்பாக அமையக்கூடாது.

அப்போதுதான் அல்லாஹ்வின் அன்பையும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முஹப்பத்தையும், உறுதியான பாவ மன்னிப்பையும் ஷபா அத்தையும் பெற்று பாவம் யாவும் நீங்கி அல்லாஹ்வால் அது ஒப்புக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக அன்று பிறந்த குழந்தை போல் ஹஜ்ஜாஜிகள் வர முடியும். உடல் பலமும், பணப்பலமும் உள்ளவர்களுக்கு 'ஹஜ்' ஜ்ச் செய்தல் பர்ளு.

எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 980



பாராட்டுக்குரியது

### வெற்றி

இழப்புக்கள் தந்த
வெறுப்புக்கள் எல்லாம்
சூரியனைக் கண்ட
பனியாகிப் போச்சு!
வெற்றியின் எல்லையை
தொட்ட மகிழ்விலே
தாய் மண்ணுக்கு
நன்றியைப் பகிர்கையில்...

கே.பரசுராம்,
கொழும்பு-06

### கதை புதிது

'கீழே விழுந்தாலும்
மீசையில் மண்
ஒட்டவில்லை'
என்பது பழைய கதை
கீழே விழுந்தே
என் தாய் மண்ணை
முத்தமிட்டு வணங்க
என்பது புதிய கதை.

அ.சந்தியாகோ,
கண்டி.

## கவிதைப் போட்டி இல 983



### வெற்றி உனக்கு!

முகம் நெஞ்சு
அடிபட - நீ
வீழ்ந்தாலும்
தோல்வியைக் கண்டு
கலங்கிவிடாதே -அன்பா,
எழுந்து நில்,
துணிந்து நில்-நாளை
வெற்றி உனக்கு.

வீ.அருள்ராஜா,
கொம்மாந்துறை.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.10.2012

கவிதைப் போட்டி இல. 983 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### எழுந்திடு!

சாதனை
படைக்கப் பிறந்தவன் நீ
இப்படி
சரிந்து போய்க் கிடக்கலாமா
துணிவுடன்
துள்ளி யெழு
உன் பேரையும் புகழையும்
இப்பவே
அள்ளி எடு.

ஏ.ஆர்.நவாஸ்,
கிண்ணியா.



### மனவுறுதி

ஊனமென்று
மூலையிலே
கிடந்தால்
ஊரெல்லாம் போற்றிடும்
உதாரணமாக
புருஷராய்
மிளிரலாமோ?
தாய் மண்ணுக்குத்தான்
அன்பு முத்தம் பகிரலாமோ?

க.வேணுஜன்,
அராலி.

### அவமானம்

முடவன் என்று
முணங்கியோர்
எல்லாம்
முகங்கவிந்து
நிற்கின்றனர்
வெற்றிக் களிப்பில்
-அவன்
தாய் மண்ணை
முத்தமிட்டு
நிற்கையிலே...

எஸ்.கோதா,
கல்வியங்காடு.

# உங்கள் பக்கம்

## தங்குமிட வசதிகள் வேண்டும்

வன்னிப் பிரதேசத்தில் காணப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு பின்தங்கிய பிரதேசமாக வரையறுக்கப்பட்டுள்ள வன்னியில் நீண்டகாலமாகப் பணிபுரிந்த ஆசிரியர்களின் இடமாற்றக் கோரிக்கையைக் கவனத்தில் எடுத்தும் கடந்த ஆண்டு பெரும்தொகையான வெளிமாவட்ட ஆசிரியர்கள் வன்னிப் பிரதேசத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

நீண்டதூரங்களில் இருந்து தினமும் பயணம் செய்கின்ற . இவ் ஆசிரியர்கள் அடிப்படை வசதிகள்கூட இன்றி பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வன்னிப் பிரதேசத்தில் தமது சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வாறே, யாழ்ப்பாணம், வவுனியா வீதியில் அமைந்துள்ள கனகராயன் குளம் மகா வித்தியாலயத்திற்குத் தூர இடங்களில் இருந்துவரும் ஆசிரியர்களுக்கு விடுதி வசதி கடந்த மூன்று வருடங்களாக செய்து கொடுக்கப்படவில்லை. பதினைந்துக்கும் மேற்பட்ட ஆசியர்கள் தினமும் பிரயாணம் செய்ய முடியாததினால் வகுப்பறைகளில் தங்கியிருந்து பணியாற்றுகின்றனர். இதேபோன்று வன்னியின் உட்பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் அவதியுறுகின்றனர். இவர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்ட தங்குமிடங்களையாவது உடனடியாக அமைத்துக் கொடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கே.தர்மவேணி, கனகராயன்குளம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
·தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:-
0212220188




சிறப்பு

முரசின் நீண்ட நாள் வாசகனாய் இருக்கின்றேன். எல்லாவற்றையும் நாசூக்காகவும், தெளிவடையக் கூடிய விதத்திலும் வாசகர்கள் மத்தியில் உலா வரும் முரசே! எனது பல நாள் கனவை நிறைவேற்றி இருக்கின்றாய். என்னுடைய கவிதையை பிரசுரித்தமைக்கு நன்றி.

பாப்பா முரசு, லேடிஸ் ஸ்பெஷல் என்பவை பிரமாதமாக உள்ளது. குறுக்கெழுத்து அறிவுக்குத் தீனி போடுகிறது. 19ஆம் பக்கத்தில் இடம்பெறும் வரலாற்று நாயகர்களின் கட்டுரைகளுக்கு வாழ்த்துக்கள். இவ்வாறு புரட்சி நாயகர்களை பற்றி தந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

ம.தனபாலசிங்கம் - காலி.

## வாசகர் சாலை

### அவலங்கள் அலைபாயுதே!

முரசே! நீ பல்வேறு முகங்களில் மக்களை சென்றடைவது வித்தியாசமாக இருக்கின்றது. சென்ற வாரம் வெளியான முரசில் கேப்பாப்புலவில் கேட்கும் அவலக்குரல்கள், அர்த்தபூர்வமான மீள்குடியேற்றம் அவசியம் எனும் கட்டுரை சிறப்பாக உள்ளது. கேப்பாப்புலவு மக்கள் படும் துன்பங்களை தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார் கட்டுரையாளர் மதியுகி. அவலங்களை தெளிவாகக் கூறியுள்ளீர்கள். வாழ்த்துக்கள்.

திருமதி ம.வாணி,
முள்ளியவளை.

### எனது ஆதங்கம்!

வாசக நெஞ்சங்களை அறிவியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இன்னபிற அனைத்து விடயங்களிலும் தினமுரசு வாசக நெஞ்சங்களை திருப்திப்படுத்துகின்றது. முரசின் அனைத்து விடயங்களும் திருப்திகரமானவை. இருந்தாலும் சில விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கல்வி சார்ந்த விடயங்கள், யாழ்ப்பாண வரலாற்று விடயங்கள், நேர்காணல்கள் என்பவற்றை சேர்த்துக் கொள்ளலாமே! முக்கியமானவற்றை முரசு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதே எனது தனிப்பட்ட ஆதங்கமாகும்.

எஸ்.பைரவீ, திருநெல்வேலி.

# நாடாளுமன்றில் முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமூலம்

வரவு செலவு திட்டம் தொடர்பான முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த ஆண்டிற்காக அரசாங்கத்தின் மொத்த செலவீனம் 2 ஆயிரத்து 520 பில்லியன்களாகும். அதுபோல் மொத்த வருமானம் ஆயிரத்து 280 பில்லியன்களாகும். இதன்படி துண்டுவிழும் தொகை ஆயிரத்து 240 பில்லியன் ரூபாய் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. இதன் மீதான இரண்டாம் வாசிப்பு நவம்பர் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# சுத்தமான நீருக்காக சவப்பெட்டி மீது கையெழுத்து

நீர் வடிகால் சபையின் மூலம் ஹாலிஹெல நகருக்கு வழங்கப்படும் குடிநீர் மனித பாவனைக்கு உகந்ததல்லவென்பதை சுட்டிக்காட்டி பொது மக்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கை ஹாலிஹெல பிரதேச செயலாளர் பிரிவிற்கு முன்னால் நடைபெற்றது.

இவ்விடயம் தொடர்பில் ஏற்கெனவே சுகாதாரப் பிரிவு அறிவித்திருந்த போதும் நீர் வடிகால் அதிகார சபை தொடர்ந்தும் பிரதேசத்திற்கும் வரும் குடிநீரை சுத்திகரிக்காமல் மக்கள் பாவனைக்கு வழங்குவதனால் பல்வேறு சுகாதாரசீர்கேடுகள் இடம்பெற்று வருகின்றமையை சுட்டிக்காட்டி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதற்காக ஹாலிஹெல பொதுமக்கள் இயக்கம் கையெழுத்திடும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது. இதன்போது, கையொப்பமிடுவதற்காக வைக்கப்பட்டிருந்த சவப்பெட்டியின் மீது நூற்றுக்கணக்கானோர் கையொப்பமிட்டமை குறிப்பிடத்தக்கது.

# குதிரையின் விலை 2.7 மில்லியன் ரூபாய்?

பொலிஸ் திணைக்களத்தின் குதிரைப்படைப் பிரிவுக்கு 18 குதிரைகளைக் கொள்வனவு செய்ய அத்திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதற்காக 50 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ள நிலையில், அதற்காக அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிடம் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கொள்வனவு செய்யப்படவுள்ள விசேட ரகத்தைச் சேர்ந்த குதிரைகளுக்காக தலா 2.7 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்வதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது. பொலிஸ் குதிரைப்படைப் பிரிவானது நாட்டின் மிகவும் மரியாதைமிக்க விழாப் படையணியாகத் திகழ்கின்றது. இந்நிலையில், தற்போது மேற்படி பிரிவில் 40 குதிரைகள் காணப்படுகின்ற போதிலும் அவை தீவிரமாக கடமையாற்றும் வயதைக் கடந்துள்ளன. இவை அதிகளவான மக்கள் கூட்டத்தைக் கலைப்பதற்காகவும், தேசிய சம்பிரதாயபூர்வ நிகழ்ச்சிகளின்போதும் பயன்படுத்தப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் நிலங்கள் அந்த மக்களுக்கே உரியது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சந்திரகுமார் எம்.பி

**இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனைவரும் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. மக்களின் நிலங்கள் அந்த மக்களுக்கே உரியது என்ற நிலைப்பாட்டிலும் நாம் உறுதியாகவே இருக்கின்றோம். இதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கணிசமான முன்னேற்றங்களையும் கண்டுள்ளோம். படையினர் வசமுள்ள தனியார் வீடுகள் அந்தந்த மக்களிடம் ஒப்படைக்கப்படுமென படைத்தரப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என அண்மையில் யாழ்.செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர எம்.சந்திரகுமார் தெரிவித்திருந்தார்.**



இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது தலைமையுரையின் போது தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு கட்சி பேதங்களுக்கப்பால் சகல தரப்பினரும் ஒன்றி ணைந்த பங்களிப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். யாழ். மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட இக் கூட்டத்தொடரில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பிரதேசச் செயலாளர்கள் உட்பட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

ராஜூ



## ஆட்டம் காண்கிறது

# அத்திவாரமற்ற கூட்டமைப்பு!

## அதிகரிக்கிறது அதிகாரச் சண்டை

**நீண்ட** காலமாக புகைந்து கொண்டிருந்த கூட்டமைப்பின் உள் முரண்பாடுகள் இன்று சந்திக்கு வந்திருக்கின்றது. ஒருவர் மேல் ஒருவர் மாறிமாறி சேறு பூசிக்கொண்டிருக்கின்றார்கள்.

கூட்டமைப்புக்குள் உருவாகியிருக்கின்ற இந்த முரண்பாட்டின் மூலம் இதுவரை காலமும் மக்களுக்கு அவர் கூறிவந்த கதைகள் வாய்ச்சவாடல்கள் எல்லாம் வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது.

கூட்டமைப்பின் இன்றைய நிலைமை பற்றி ஆராய்வதற்கு முன்னர் அதன் ஆரம்பம் பற்றி மேலோட்டமாகப் பார்த்துவிட்டு வருவது பொருத்தமாக இருக்கும்.

கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் இக்கூட்டில் இணைந்திருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுத்த வண்ணமிருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரைப் பொறுத்தவரையில் ஜோசப் பரராஜசிங்கம் போன்ற ஒருசிலரைத் தவிர ஏனையவர்களின் கருத்துக்களும் செயற்பாடுகளும் அப்போது பலமான நிலையிலிருந்த புலிகளுக்கு விரும்பத்தகாதவையாகவே இருந்தன.

அதேபோன்று ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ போன்ற அமைப்புக்கள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் அரசாங்கத்துடன் கொண்டிருந்த உறவுகள் புலிகளுக்கு எரிச்சலூட்டும் வகையில் அமைந்திருந்தன. இதனால், இவர்கள் எல்லோரையும் புலிகள் தமது பாசையில் துரோகிகளாகவே அப்போது கணித்துக் கொண்டிருந்தனர்.

அதனால் மக்கள் மத்தியிலும் செல்வாக்குச் செலுத்தக் கூடிய சூழல் காணப்படவில்லை. புலிகளுக்கு எதிர்த்துக் கொண்டு மக்கள் மத்தியில் செல்லும் தில் இவர்களுக்கு இருக்கவில்லை. இதனால் மக்கள் ஆதரவு என்பது பூச்சியமாகவே காணப்பட்டது.

இவ்வாறான நிலையிலே தேர்தல் காலங்கள் நெருங்கிக் கொண்டிருந்தமையால் தேர்தல்களைச் சந்திக்கும் தந்திரோபாயமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் பெற்றிருந்தது.

இதனால் இந்தக் கட்சிகளுக்கிடையே இருந்த கருத்து வேறுபாடுகள், ஈகோப் பிரச்சினைகள், எல்லாம் அப்போது பெரிதுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

அத்தோடு அரசியல் வேலைத்திட்டம், அரசியல் இலக்கு எதுவுமே கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கூட்டமைப்புத் தான் சந்தித்த முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் மக்களின் மனநிலைகளை நாடிபிடித்தறிந்து வாக்குகளைக் கவரும் நோக்கில் தனது கருத்துக்களை வெளிப்படுத்தியதே அன்றி, மக்களுக்கான அரசியல் தலைமைத்துவத்தை, அரசியல் வழிகாட்டலை வழங்க வேண்டும் என்ற எண்ணம் காணப்படவில்லை.

இதனாலேயே தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள், அவர்களுடன்தான் அரசாங்கம் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்று கூறி மக்களிடம் வாக்குக் கேட்டனர்.

கூட்டமைப்பினர் இவ்வாறு கூறிய போதிலும், புலிகள் வெளிப்படையாக இவர்களை ஆதரிக்குமாறு எச்சந்தர்ப்பத்திலும் கூறியிருக்கவில்லை. அதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் முடியவில்லை. தேர்தலுக்கு ஒருசில தினங்கள் இருக்கும்போது அன்ரன் பாலசிங்கம் பட்டும்படாமல் சில கருத்துக்களைக் கூறியிருந்தார்.

அதுதான் புலிகளுக்கும். கூட்டமைப்புக்கும் இருந்த அப்போதைய உறவு.

குறித்த தேர்தலில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் 13 ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட நிலையில் அப்போதைய சர்வதேச அரங்கில் மாறிவந்த அரசியல் சூழலைக் கருத்திற்கொண்டு கூட்டமைப்பை பயன்படுத்திக் கொள்வது என்ற தீர்மானத்தை புலிகள் மேற்கொண்டிருந்தனர்.

அதன்பின்னர் இறுதிவரை புலிகளின் கைப்பிள்ளைகளாகவே கூட்டமைப்பு நடாத்தப்பட்டிருந்தது. இவரகளுக்கென்று தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களோ, தீமானங்களையோ வெளிப்படுத்துவதற்கான உரிமையைப் புலிகள் வழங்கியிருக்கவில்லை.

இதனால் கூட்டமைப்புக்குள் இருந்தவர்களுக்கு கருத்து வேறுபாடுகள் உருவாகுவதற்கும் வாய்ப்புக்கள் உருவாகவில்லை.

ஆனால், புலிகளின் அழிவுக்குப்பின்னர் தமிழ் மக்களே பெரும்பாலான வாக்குகளைப்பெற்ற கடசி என்ற வகையில் கூட்டமைப்பு நோக்கப்பட்ட போது உட்கட்சி முரண்பாடுகளும் தலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டது.

ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே கூட்டணி போன்ற மிதவாதக் கட்சிகள் போராட்ட அமைப்புக்களை ஏளனமாகவே நோக்கின. 'கல்வியறிவற்ற சின்னப் பையன்கள், விவேகமற்றவர்கள்' என்றெல்லாம் எள்ளிந்கையாடப்பட்டன.

எனினும் இவர்களின் கைகளில் இருந்த ஆயுதங்கள் அடக்கி வாசிக்க செய்திருந்தன.

இவ்வாறான கருத்துக்களின் தொடர்ச்சி கூட்டமைப்புக்குள்ளும் புத்துயிர் பெற்றுக்கொண்டது.

கூட்டமைப்புக்கு இருக்கின்ற வாக்கு என்பது தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்துக்கும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகளினது புத்திக் கூர்மைக்குமே கிடைக்கின்றது என்று கூட்டமைப்பின் ஒருசாரார் எண்ணிக் கொள்கின்றனர்.

எனவே கூட்டமைப்பில் இணைந்திருக்கின்றவர்களை ஓரங்கட்டி விட்டால் தங்களுக்கும் பதவி அந்தஸ்து கிடைக்கும் எனத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இரண்டாம் மட்ட தலைவர்கள் கருதினர்.

இந்த கபடநோக்கத்தை ஏனைய கட்சிகளும் நன்கு உணர்ந்து கொண்டன. கூட்டமைப்பை நம்பி தமது கட்சிக் கட்டமைப்புக்களை கண்டுகொள்ளாமல் விட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகியவற்றின் தலைமைகளுக்கு இது பேரிடியாக அமைந்தது.

எனவே, கூட்டமைப்பு என்ற கட்டமைப்புக்குள் தமது நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கூட்டமைப்பு ஒரு கட்சியாக பதிவுசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

**(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்...)**

வாரமலர்
தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

## வாசகர்களுக்கு வணக்கம்!

# தோல்வியும் தெளிவும்

விரிவுரையாளர்களின் போராட்டங்கள் விஸ்வரூபம் பெற்றிருந்த போதும், வீதித் தடைகளால் தலைநகர் உட்பட பிரதான நகரங்கள் பல தடவைகள் ஸ்தம்பித நிலையை அடைந்தபோதும் அவை எல்லாவற்றையும் மேவி நின்றது இருபது இருபது கிரிக்கெட் போட்டிகள் மீதான பரபரப்புதான்.

கிரிக்கெட் போட்டிகள் இலங்கை அணியின் வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது இடையில் இரவோடு இரவாக அமுலுக்கு வந்த விலையுயர்வுகளையும் எவரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

இறுதிப்போட்டியில் இலங்கை அணியும், மேற்கிந்திய அணியும் மோதிய போது முழு இலங்கையரின் கவனமும் போட்டிகளிலேயே இருந் தது. ரிக்கெட் கிடைக்கவில்லையே என்று தலையை பிய்த்துக் கொண்டு திரிந்த இளைஞர்களின் நிலையைப் பார்த்த எவருக்கும் பைத்தியமே பிடித்திருக்கும்.

முதலில் மேற்கு இந்திய அணி துடுப்பெடுத்து ஆடியபோது, ஓட்டங்களைப் பெறுவதற்கு முன்னதாகவே விக்கெட்டுக்களை இழந்தபோதும், தடுமாறியபோதும் இலங்கை ரசிகர்கள் பூரித்துப் போனார்கள். அந்த நிமிடத்தில் சுனாமியே வந்திருந்தாலும் யாரும் பயந்து ஓடியிருக்க மாட்டார்கள். அந்தளவுக்கு கிரிக்கெட் மோகம் நாட்டைச் சூழ்ந்திருந்தது.

இதற்குக் காரணம் உலகக் கோப்பைக்கான போட்டி ஒன்று இலங்கை மண்ணில் அதுவும் இலங்கை அணி இறுதிப் போட்டியில் ஆடுகின்ற போட்டியாக இந்தப் போட்டி அமைந்திருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று அமைவதாக இருப்பது அரிதாகவே அமையக்கூடும் என்பதாகும். இன்னொரு காரணம் தற்போது இலங்கை அணியில் தற்போதுள்ள நட்சத்திர நாயகர்களாக இருக்கும் மஹேல, சங்கக்கார, மலிங்க போன்றவர்கள் மீண்டுமொரு சுற்றில் இலங்கையில் உலக கோப்பைக்கான இறுதிப்போட்டியைச் சந்திக்கும் சூழல் அமையுமா என்பது கேள்விக்குரியதுதான்.

இலங்கை கிரிக்கெட் இரசிகர்களின் இவ்வாறான ஊகங்கள், எதிர்வு கூறல்கள் ஒரு புறமிருந்தபோது அரசியல் குத்துவெட்டுக்களை எவரும் கவனம் செலுத்தவில்லை. இலங்கை அணி தோல்வியடைந்து ரசிகர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. ஏமாற்றம், தாங்க முடியாமல் இதுவரை மூவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விளையாட்டை விளையாட்டாக எடுத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இவ்வாறான விபரீதங்களே நடந்தேறும். வெற்றி, தோல்விகளை ஏற்றுக் கொள்கின்ற பக்குவம் பிள்ளைகளிடத்தில் வளர்க்கப்படுவது அவசியமாகும். பெற்றோர், ஆசிரியர்கள் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் எடுத்துச் செயற்படுத்த வேண்டும்.

கிரிக்கெட் போட்டிகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில் நாட்டில் அடங்கிக் கிடந்த எதிர்ப்புப் போராட்டங்கள் மீண்டும் புத்துணர்ச்சி பெறக்கூடும். பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பதிலாக, மக்களின் கவனத்தை திசை திருப்புகின்ற திட்டங்களைத் தேடுவது பலன் தராது. இன்னொரு கிரிக்கெட் போட்டியை தேடவும் முடியாது.

விரிவுரையாளர்களின் போராட்டங்கள், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகள், பள்ளிவாசல் மற்றும் கோயில்களில் அநாவசியத் தலையீடுகளால் ஏற்படுத்தப் படுகின்ற குழப்பங்கள் என்பன பூதாகரமடைய விடுவது நல்லதல்ல. எல்லாவற்றையும் சர்வதேசங்களின் சதி என்றும் புறமொதிக்கிவிட முடியாது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ‘திவி நெகும’ ஒரு தேசியத் திட்டம்

நாளாந்தம் நாளாந்தம் அதிகரிக்கும் பொருள் விலையேற்றங்களை சமாளிக்கமுடியாமல் மக்கள் தவிக்கின்றனர். விவசாயம் செய்கின்ற மக்களும், விலைகொடுத்து வாங்குபவர்களும் இதே நிலைமையிலேயே வாழ்கின்றனர்.

எதிர்காலமானது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் அளவில் வேறுபட்டிருந்தாலும் ஏதோவொன்றை உற்பத்தி செய்வதனூடாகவே பொருளாதாரச் சவாலை எதிர்கொள்ளமுடியும் என்ற நிலையிலேயே வாழ்க்கை மாறிக் கொண்டிருக்கின்றது.

‘திவிநெகும’ எனும் திட்டம் விமர்சனங்களுக்கு அப்பால் நாட்டுக்கு நன்மையானது. என்கின்றனர் இதுவரை பயனடைந்த மக்கள். வாழ்வெழுச்சித் ‘திவிநெகும’ திட்டமானது 2011ஆண்டு பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் மகிந்த சிந்தனையின் வேலைத்திட்டத்திலிருந்து முன்மொழியப்பட்டது. சுய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவது, அவர்களுக்கு உதவுவது, அவர்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது என்பன இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகவுள்ளது.

இதுதவிர, குடிசைக் கைத்தொழிலை ஊக்குவிப்பது, வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிப்பது, பயன்தரும் மரங்களை நாடுபூராகவும் நடுகை செய்வது, கால்நடைகளை வளர்ப்பது என்பன திவிநெகுமவின் முக்கிய நோக்கமாகவுள்ளது.

பொதுவாகவே திட்டங்களும், சிந்தனைகளும் வரவேற்புக்குரியதாகவும், சிறப்பானதாகவும் இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்துகின்ற விதத்திலும், அதிகாரிகளின் அணுகுமுறைகளிலும், பயனா ளிகளைத் தெரிவு செய்வதிலும் முறைகேடுகளும், துஷ்பிரயோகங்களும் இடம்பெறுவதால் திட்டங்கள் நோக்கத்தை சிதைத்து விடுகின்றன.

திவிநெகும திட்டத்திலும் பயனாளிகளைத் தெரிவுசெய்வதிலும், நடைமுறைப் படுத்துவதிலும், சிலர் தவறைச் செய்திருக்கலாம், அரசியல் தலையீடுகள் தேவையற்ற குறுக்கீடுகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் திட்டம் நாட்டுக்கு உபயோகமானது.

திவிநெகும திட்டம் ஒரு தேசிய வேலைத்திட்டமாக முன்னெடுக்கப்படவேண்டும். இதை மத்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதா? மாகாண அரசுகள் நடைமுறைப்படுத்துவதா? என்பதைப் பற்றி மக்களுக்கு அக்கறையில்லை. மத்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்துமாக இருந்தால் நாடு பூராகவும் ஒரே மாதிரியாக முன்னெடுக்கப்படவும், நிதியும், வளமும் மாகாணங்களுக்கு சீரான பகிர்ந்தளிப்பாகவும் இருப்பதோடு, பொதுவான கண்காணிப்பையும் செய்ய முடியும் என்கின்றனர் அவதானிப்பாளர்கள்.

இதுவே மாகாண சபைகள் முன்னெடுக்குமானால் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டவகையிலும், வேறுபட்ட திட்டவடிவத்தோடும் முன்னெடுக்கப்படும் என்ற அச்சங்களும் உண்டு.

திவிநெகும திட்டம் மாகாண சபைகளின் அதிகாரத்தைப் பறிக்கும். அல்லது மாகாண சபைகளை மதிக்காமல் கட்டுப்படாமல் மத்திய அரசு மாகாணங்களில் நேரடியாக அதிகாரம் செலுத்துவதாக அமையும் என்ற அச்சங்கள் அல்லது சந்தேகங்களும் இருக்கவே செய்கின்றன.

இதற்கிடையே நாட்டில் கொண்டுவரப்படுகின்ற எந்தவொரு திட்டமும், யுத்தத்தால் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அனைத்துவிதமான பாதிப்புக்களுக்கும் முகம் கொடுத்துள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஷேடமாக ஏற்பாட்டோடு அமுல் படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும், விருப்பங்களும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

அதற்காக தொடர்ந்தும் விஷேட கவனிப்புகளையே எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கமுடியாது. திட்டங்கள் தேசிய வடிவமெடுத்து முன்வைக்கப்படுகின்றபோது அதன் பங்காளிகளாவும், பயனாளிகளாகவும் நாம் எவ்வாறு இணைந்து கொள்வது என்பதையே சிந்திக்கவேண்டும்.

ஏனைய மாகாணங்களுக்கு என்னவோ அதுதான் எமக்கும் என்ற மனோநிலை வளர்க்கப்படவேண்டும். மாகாண சபைகளின் அதிகாரத்தை பறிக்கும் முயற்சி என்பதை ஏற்கமுடியாது. மக்கள் மனங்களையும், மக்களின் அரசியல் அதிகாரங்களையும் முடக்கிப்போடும் எவரும் மக்களுக்கு நன்மையான திட்டங்களை விமர்சிக்கமுடியாது.

> பொதுவாகவே திட்டங்களும், சிந்தனைகளும் வரவேற்புக்குரியதாகவும், சிறப்பானதாகவும் இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்துகின்ற விதத்திலும், அதிகாரிகளின் அணுகுமுறைகளிலும், பயனாளிகளைத் தெரிவுசெய்வதிலும் முறைகேடுகளும், துஷ்பிரயோகங்களும் இடம்பெறுவதால் திட்டங்கள் நோக்கத்தை சிதைத்து விடுகின்றன. திவி நெகும திட்டத்திலும் பயனாளிகளைத் தெரிவுசெய்வதிலும், நடைமுறைப் படுத்துவதிலும், சிலர் தவறைச் செய்திருக்கலாம், அரசியல் தலையீடுகள் தேவையற்ற குறுக்கீடுகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் திட்டம் நாட்டுக்கு உபயோகமானது.

மாகாணங்களுக்கு அதிகாரங்களில்லை. மாகாண சபைகளுடாக எதையும் சாதிக்கமுடியாது என்று கூறியோர், திவிநெகும திட்டம் மாகாண சபைகளின் அதிகாரத்தை பறிக்கப்போவதாக கூறுகின்றனர். இது "ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை" என்ற கதையாகவே இருக்கின்றது.

திவிநெகும சட்டமானது அவசர சட்டமூலமாக இல்லாமல் சாதாரண சட்டமூலமாக சமர்ப்பிப்பதாக சபாநாயகர் அண்மையில் அறிவித்தார். அதன்பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தார். இந்த நிலையிலேயே ஜனாதிபதி குறித்த சட்டமூலத்தை மாகாண சபைகளுக்கு அனுப்பி மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாவிடின் அதனை சட்டமாக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அண்மையில் அறிவித்தது. அதன் பிரகாரம் ஒவ்வொரு மாகாண-சபைகளிலும் இச்சட்டமூலத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ஆனால் வடமாகாண சபை இன்னும் இயங்காத நிலையில் அதன் ஆளுநர் வட மாகாண சபை சார்பில் அங்கீகாரத்தை வழங்கலாமா என்ற வாதப்பிரசாதங்கள் இடம்பெற்றன.

இதுதொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பு, திவிநெகும சட்டமூலத்திற்கு ஆளுநரால் அங்கீகாரம் அளிக்க முடியாது. மக்களால் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்படுகின்றவர்களாலேயே அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். எனவே இதற்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறும், அந்த சட்டமூலத்திற்கு எதிராகவும் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தது.

அந்த மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது, இருதரப்பும் அரசியலமைப்பை கேள்விக் குட்படுத்தியுள்ளதால் இந்த மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதி மன்றத்திற்கு நகர்த்தியுள்ளது.

நீதிமன்றின் விசாரணையில் இருக்கும் விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்த முடியுமே தவிர கருத்துச் சொல்வது பொருத்தமாக இருக்காது.

நீதிமன்றம் என்ன தீர்ப்பைத் தரப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எது எப்படியாக இருந்தாலும், எதிர்காலமானது பொருளாதாரச் சவால் நிறைந்ததாகும். அதை எதிர்கொள்ளவேண்டுமாக இருந்தால் நமக்குத் தேவையானவற்றில் குறைந்தது ஒன்றையாவது நாமே உற்பத்தி செய்து கொள்ளவும், பிறறோடு பண்டமாற்றுச் செய்து கொள். வதைப்போல் பகிர்ந்து வாழவும் தயாராக வேண்டும்.

அவ்வாறில்லாமல் வெறும் இறக்குமதிகளில் மட்டும் நம்பி நாம் இருந்துவிடுவோமானால் வாழ்க்கையில் தோற்றுப்போய்விடுவோம். வளம் நிறைந்த நம் நாட்டில் நாமே உற்பத்தியாளர்களாக வேண்டும். குடிசைக் கைத் தொழிலும், விவசாயமுமே வளர்ச்சிப்பாதையின் படிக்கற்களாக இருக்கின்றன. இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டு நாம் பயணிக்க வேண்டும்.

இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கும், அதிகார வெறிக்கும் இடமளித்துவிட முடியாது. நுகர்வோராக இருக்கும் முதலாளித்துவங்களுக்கு உற்பத்தியாளர்களின் வாழ்வு நிலை பற்றி எப்போதுமே அக்கறை இருந்ததில்லை.

எனவே உற்பத்தியாளர்களினதும், அக்கறையாளர்களினதும் கருத்துக்களும் இவ்விவகாரம் தொடர்பில் அறிந்து கொள்ளப்படுமாக இருந்தால் பிரயோசனமாக இருக்கும்.

சிவன்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



# புலிகளின் வீழ்ச்சி!

## இறுதி நாட்கள்...

**ரிஷி**

**12**

அது முடிந்தபின் புலிகளின் தளபதிகள் அனைவரையும் அழைத்த பிரபாகரன், "இந்த வெற்றியில் உங்கள் அனைவரின் பங்களிப்பும் உள்ளது. மிகப் பெரிய பங்களிப்பு, யுத்தத்துக்கு தேவையான ஆயுதங்களை கே.பி. உரிய நேரத்தில் சாதுர்யமாக இங்கே கொண்டுவந்து சேர்த்தது தான். கே.பி. அனுப்பிய ஆயுதங்களே இந்த வெற்றியை உறுதிப் படுத்தின" என்று அறிவித்தார். அந்த வெற்றிக்குப் பின்னரே பல வெளிநாடுகள் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டன.

2002ஆம் ஆண்டுவரை வெளியே இருந்து அந்த ஆயுத சப்ளையை செய்து கொடுத்தது கே.பி. என்ற ஒருவர்தான் என்று பலராலும் கூறப்பட்டது.

2002ஆம் ஆண்டு நிலைமை மாறியது. 'பணம் இருந்தால் ஆயுதங்கள் வாங்கலாம். கப்பல் இருந்தால் அவற்றை ஏற்றி வந்து இறக்கலாம். இதில் பெரிதாக சூட்சுமம் ஏதும் கிடையாது' என்ற கண்டுபிடிப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டது. கே.பி.யிடமிருந்து ஆயுத சப்ளை புதியவர்களிடம் கைமாற்றப்பட்டது. கே.பி.-யின் ஆயுத சப்ளை காலத்தில், புலிகளின் 'ஈழப்போர் 1,2,3ஆம் கட்டம்' என்று நடந்தது. புதியவர்களின் புண்ணியத்தில், 'ஈழப்போர் இறுதிக் கட்டம்' நடந்து முடிந்தது என்ற விமர்சனமும் பலரால் முன்வைக்கப்படுகின்றது.

அதுபற்றி பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம். கே.பி. தமது அனுபவங்களை வைத்து, நோர்வே மற்றும் இலங்கை அரசின் உதவி இல்லாமலேயே கப்பல் மூலம் கரைக்குச் சென்று பிரபாகரனைச் சந்திப்பது எந்தளவுக்கு சாத்தியம் என்று மற்றையவர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். புலிகளால் கடலில் வெற்றிகரமாக செய்யப்பட்ட பல போக்குவரத்துகளும் இருந்தன. கப்பல்கள் அடிபட்ட சம்பவங்களும் இருந்தன. முக்கியமானவர்கள் உயிரிழந்த சம்பவங்களும் இருந்தன.

இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் கே.பி.யின் பயணம் உயிரைப் பணயம் வைத்து செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதால், கடந்த காலத்தில் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் இலங்கை நோக்கி கப்பலில் செல்லும்போது உயிரிழந்த சம்பவத்தில், விடப்பட்ட தவறுகள் தொடர்பாக இவர்கள் அலசினார்கள்.

அந்த சம்பவம், புலிகளின் முக்கியஸ்தர் கிட்டு இலங்கைக்கு வரும் வழியில் இந்தியக் கடலில் உயிரிழந்த சம்பவம். இது தொடர்பாக அதிக தகவல்களை புலிகள் வெளியிடவில்லை. இரகசியம் காக்கப் படுவதற்காக அவர்கள் அப்படி செய்திருக்கலாம். இதனால் அநேகருக்கு என்ன நடந்தது என்பது மேலோட்டமாகதான் தெரியும். இதோ கிட்டு உயிரிழந்த பின்னணியை முழுமையாக தெரிந்து கொள்ளுங்கள்.

கிட்டு தனது காலை இழந்து இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தபோது, அவரை தன்னுடன் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல பிரபாகரனிடம் அனுமதி கேட்டு பெற்றவர் கே.பி. தான். அப்போது புலிகளின் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கு கே.பி. பொறுப்பாக இருந்த காரணத்தால், தன்னுடன் நன்கு பரிச்சயமான கிட்டு, தமக்கு உதவிகரமாக இருப்பார் என்று கூறியே அனுமதி பெற்றிருந்தார்.

கிட்டு லண்டனில் தங்கியிருந்து புலிகளின் ஐரோப்பிய விவகாரங்களை கவனிக்கத் தொடங்கிய நிலையில், சில இராஜதந்திர முறுகல்கள் ஏற்பட்டன. கிட்டு தொடர்ந்தும் பிரிட்டனில் தங்கியிருப்பது தமக்கு சில சங்கடங்களை ஏற்படுத்துவதாக ஹோம் மினிஸ்ட்ரி தெரிவித்தது. ஒரு கட்டத்தில் கிட்டு பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்படலாம் என்ற நிலையும் ஏற்பட்டது. நிலைமை இறுகுவதைப் புரிந்துகொண்ட கே.பி., கிட்டுவை பிரிட்டனில் இருந்து சுவிட்சலாந்துக்கு நகர்த்தினார்.

அங்கே சிறிதுகாலம் கிட்டு தங்கியிருந்த .நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்புடன் அதிகாரபூர்வமற்ற முறையில் சில விஷயங்களை விவாதிக்க விரும்பியது அமெரிக்க அரசின் முக்கிய டிப்பார்ட்மென்ட் ஒன்று. அமெரிக்க ஸ்டேட் டிப்பார்ட்மென்ட் இதில் சம்மந்தப்படவில்லை. இதனால், வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்களை இதில்



தொடர்புபடுத்த அவர்கள் விரும்பவில்லை. இதில், தூதரக அழைப்போ, அஃபிஷியல் விசாவோ கிடையாது.

அமெரிக்காவுக்குள் வைத்து பேசவும் அவர்கள் விரும்பவில்லை. அத்துடன் மற்றைய நாட்டு உளவுத் துறைகள் அதிகளவில் செயற்படும் ஐரோப்பிய நகரங்களையும் தவிர்க்க விரும்பினார்கள்.

இப்படியான சூழ்நிலையில் பெருத்தமான இடம், அமெரிக்காவுடன் தரை எல்லை வழியாக இணைக்கப் பட்டுள்ள நாடான மெக்சிக்கோதான்.

மெக்சிக்கோவில் வைத்து பேசலாம் என்ற சிக்னல் கொடுக்கப்பட்டது. கே.பி.யின் அனுமதியுடன், சுவிஸில் இருந்து மெக்சிகோ அனுப்பிவைக்கப் பட்டார் கிட்டு. அங்கு சிறிது காலம் இருந்தபின், மீண்டும் ஐரோப்பா திரும்புவதில் விசா தொடர்பான சிக்கல்கள் எழுந்தன. பெரிய ஆசிய நாடு ஒன்று, கிட்டுவுக்கு எந்த ஐரோப்பிய நாட்டிலும் விசா கிடைக்காதபடி பார்த்துக் கொண்டது. அந்த நாடு' இந்தியா!

இதில் இந்தியாவின் கோணத்தில், அவர்களை குறைசொல்ல முடியாது. காரணம் கிட்டு, காலை இழந்தபின் இந்தியாவில் தங்கியிருந்தபோதும், அதன் பின் லண்டனில் தங்கியிருந்த போதும், இந்திய உளவுத்துறை ஒன்றுக்கு தணிப்பட்ட முறையில் கொஞ்சம் 'விளையாட்டு' காட்டியிருந்தார்.

இவரை, அவர்கள் தமது இன்ஃபார்மர் என்று நீண்ட காலமாக நம்பியிருந்தனர். கிட்டு லண்டனில் இருந்த காலத்தில்கூட அவர்களது தொடர்பில் இருந்தார். குறிப்பிட்ட உளவுத்துறையின் ஒரு உயரதிகாரி, இவரை முற்றுமுழுதாக நம்பியிருந்தார். ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட போது கிட்டு லண்டனில் இருந்தார். அந்தக் கொலைக்கும் புலிகளுக்கும் தொடர்பு ஏதும் கிடையாது என்று இந்திய உளவுத்துறைக்கு கூறியவரும் கிட்டுதான்.

அதன்பின் விஷயங்கள் யு-டர்ன் அடிக்க, கிட்டு தம்மை சுற்றலில் விட்டிருந்ததை இந்திய உளவுத் துறை ஹார்டு-வேயில் புரிந்து கொண்டது.

தம்மை ஏமாற்றிய கிட்டுவை லேசில் விடுவதில்லை என்று முடிவெடுத்து வேலை செய்தார் அந்த உயரதிகாரி. உளவுத்துறையும் அதே நிலைப்பாட்டையே எடுத்திருந்தது. கிட்டுவை ஆரம்பத்தில் லண்டனில் இருந்து கிளப்பியதிலும் அவர்களது பங்கு இருந்தது.

இங்கு மற்றொரு விஷயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்திய உளவுத்துறை ஐரோப்பாவில் கிட்டுமீது கை வைக்கவில்லை. இதுவே சி.ஐ.ஏ.யாக இருந்திருந்தால் ஆளையே தூக்குவதுதான் அவர்களது நடைமுறை. பல தடவைகள் அப்படி செய்தும் உள்ளார்கள், சில ரஷ்ய இராஜ தந்திரிகளின் மர்ம மரணங்கள் உட்பட!

மொத்தத்தில் கிட்டு இந்திய உளவுத்துறையுடன் விளையாடிய விளையாட்டு, அவருக்கே வினையாகி, ஐரோப்பிய நாடுகள் எதிலும் அவருக்கு விசா கிடைக்க முடியாத நிலையை ஏற்படுத்தியது.

நிலைமையின் தீவிரத்தைப் புரிந்துகொண்ட கே.பி., கிட்டுவை மெக்சிக்கோவில் இருந்து உக்ரேன் நாட்டுக்குள் கொண்டுவந்தார். சிறிது காலம் அங்கு தங்கியிருந்த பின் அதுவும் சரிவராத காரணத்தால், கிட்டுவை போலந்து நாட்டுக்கு நகர்த்தினார் கே.பி.

போலந்தில் தங்கியிருந்த கிட்டு, தன்னை வந்து சந்திக்குமாறு அவசர தகவல் ஒன்றை கே.பி.க்கு அனுப்பினார். அப்போது தாய்லாந்தில் இருந்த கே.பி., போலந்து சென்று, கிட்டு தங்கியிருந்த வீட்டுக்கு சென்றார்.

அப்போது அங்கே கே.பி. கண்ட காட்சி, அவரை அதிர வைத்தது. அந்தக் காட்சிதான் கிட்டு கப்பல் மூலம் இலங்கை திரும்பவும் காரணமாக இருந்தது.

**(தொடரும்...)**

# வீரப்பனை மடக்கியது எப்படி?



**தமிழகம், கேரளம், கர்நாடக மாநிலங்களுக்கு சவால் விட்டு வந்த சந்தனக் காட்டு வீரப்பனை சதி செய்து பொலிஸ் கொலை செய்த கதையை உளவாளியாக செயல்பட்டு, தற்போது கோவை மாவட்டம் எஸ்.பி. அலுவலகத்தில் இளநிலை பணியாளராக பணிபுரியும் திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டையைச் சேர்ந்த ஷையத் சுஷானா வாஸ் என்பவர் இது தொடர்பாக ஜீனியர் விகடன் இதழ் மூலமாக ஒப்புதல் வாக்குமூலமாக கொடுத்திருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகள்..**

நான் 10ஆம் வகுப்பு முடித்த உடன் எங்கள் பகுதி பொலிஸ் நண்பனாக இருந்தேன். உடுமலைப் பேட்டையில் பணிபுரிந்த பொலிசார் வின்செண்ட், வீரப்பன் வேட்டைக்காக அதிரடிப்படைக்கு மாற்றப்பட்டார். அவருடன் நான் தொடர்பில் இருந்தேன். கோவை சிறையில் இருந்த வீரப்பனின் அண்ணன் மாதையனை சந்திக்க அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கனகராஜ் என்பவர் அடிக்கடி வந்து செல்வார்.

இவ்வாறு கோவைச் சிறைக்கு வந்தபோது அவரிடம் ஒரு கடிதத்தை பொலிஸ் கைப்பற்றியது. அக்கடிதத்தில் சிறையில் உள்ள முஸ்லிம் அமைப்பினர் மூலம் ஆயுதங்களைத் திரட்டுமாறு மாதையனுக்கு வீரப்பன் கோரியிருந்தார். இந்தக் கடிதம்தான் வீரப்பன் உயிருக்கே உலை வைத்தது. இந்தக் கடிதம் அதிரடிப் படை எஸ்.பி.யாக இருந்த செந்தாமரைக் கண்ணனிடம் ஒப்படைக்கப்பட்டது.

வீரப்பன் தெரிவித்திருந்த யோசனைப்படி 4 முஸ்லிம் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டோம். நான், கன்னியா குமரியைச் சேர்ந்த அனஸ்கான், உபயத்துல்லா, உடுமலைப் பேட்டையை சேர்ந்த ஜியாவுல் ஹக் ஆகியோர் இந்த உளவுவேலைக்கு தேர்வானவர்கள். எங்களுக்கு 3 மாதங்கள் ஆயுதப் பயிற்சி கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் வீரப்பனிடம் போய் தீவிரவாதிகளாக நடந்து கொண்டு தகவல்களை சேகரிக்கச் சொன்னார்கள். நான் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒரு காவல்துறை உயர் அதிகாரியிடம் அறிமுகப்படுத்தப்பட்டேன். உளவு வேலையை சரியாக செய்தால் ரூ50 லட்சம் தருவதாக சொன்னார்கள்.

பின்னர் வீரப்பன் உறவினரான கனகராஜிடம் விவரத்தை சொல்லி வீரப்பனிடம் கொண்டு சேர்க்கக் கூறினார். ஆனால் அவர் மறுத்து விட்டார். இதனால் வீரப்பன் மகனை பிணையாக வைத்துக்கொண்டு எங்களை வீரப்பனிடம் சேர்க்காவிட்டால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டி ஒப்புக்கொள்ள வைத்தார்.

2003ஆம் ஆண்டு கனகராஜ் மூலம் வீரப்பனிடம் சேர்ந்தோம். மொத்தம் 20 நாட்கள் வீரப்பனிடம் தீவிரவாதிகளாக நடித்தே உளவு பார்த்தோம். வீரப்பனின் பலவீனங்கள், திட்டங்களை பொலிஸிடம் சொன்னோம். நாங்கள் சொன்ன தகவலை வைத்துத் தான் சிலர் பொடா சட்டத்தில் சிக்கினர். இந்த ஒப்ரேஷனுக்குப் பெயர் ககூன் (பட்டுக்கூடு).

இந்த ஒப்ரேஷனை வைத்தே வீரப்பன் கொலை செய்யப்பட்டார்.

கடந்த 2004ஆம் ஆண்டு எங்களது பெயரை சொல்லாமல் ஜுனியர் விகடனுக்கு எஸ்.பி.யாக இருந்த செந்தாமரைக் கண்ணன் கூறியும் இருந்தார். தங்களுக்குச்சேர வேண்டிய தொகை கிடைக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

இதுபற்றி காவல்துறை அதிகாரி செந்தாமரைக் கண்ணன் கூறுகையில், "நாங்கள் நால்வரையும் பயன்படுத்தியது உண்மைதான். ஆனால், 50 லட்சம் ரூபாய் தருகிறோம் என்று எப்போதும் வாக்குறுதி கொடுக்கவில்லை. வேலைவாய்ப்புக்கு உறுதிகொடுத்திருந்தோம். அதைசெய்து கொடுத்திருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்.

# நிலமெல்லாம் இரத்தம் 22




பா.ராகவன்



செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி திங்கட்கிழமை ஒரு மனிதர் ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு இடம்பெயர்ந்தார்.

அவ்வளவுதான். ஒட்டுமொத்த அராபியர்களும் மதம் பெயர்வதற்குத் தயாராகிவிட்டார்கள்.

அவர் பெயர் முஹம்மது. இயேசுவுக்குப் பிறகு இறைவன் அனுப்பியதாக நம்பப்படும்



இறைதூதர் (நபி) இறுதித்தூதரும் அவரேதான்.

முஹம்மது என்கிற மனிதரின் பிறப்பு, அவர் ஓர் இறைதூதர் என்று அறியப்பட்ட தருணம். இந்த இரண்டுமே அராபியர்களின் சரித்திரத்தில் மிக முக்கியமான அம்சங்கள்.

ஒரு மனிதரின் பிறப்பே எப்படி முக்கிய தருணமாகும் என்கிற கேள்வி எழலாம். மற்ற இறைதூதர்களைப் பற்றிய தகவல்களுக்கு நாம் புராணக் கதைகளையே ஆதாரங்களாகக் கொள்ள வேண்டியிருக்கிற நிலையில், இவர் ஒருவரைக் குறித்த விவரங்களை மட்டும்தான் கதைகளிலிருந்து அல்லாமல், சரித்திரத்தின் பக்கங்களிலிருந்தே நாம் பெற முடிகிறது. காலத்தால் நமக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது மட்டுமே இதற்குக் காரணமல்ல. அவரது காலத்தில் வாழ்ந்தவர்கள், அவருடன் நேரில் பழகியவர்கள், அவரது பிரசங்கங்களை, போதனைகளைக் கேட்டறிந்தவர்கள் எழுதி வைத்த குறிப்புகள் ஏராளமாக இருக்கின்றன.

முஹம்மது குறித்த ஒவ்வொரு தகவலும் பல்வேறு நிலைகளில் சரி பார்க்கப்பட்டு, ஒப்புநோக்கப்பட்டு, அவருடன் நேரடியாகப் பழகியவர்கள் விவரித்துள்ளவற்றுடன் பொருந்தினால் மட்டுமே அச்சேறின. இதனால், முஹம்மது குறித்த விவரங்களின் நம்பகத்தன்மை பற்றிய அத்தனை கேள்விகளும் அடிபட்டுப் போய்விடுகின்றன. ஆதாரம் இல்லாத ஒரு குட்டிக்கதை, கதையின் ஒரு வரி – ஒரு சொல் கூடக்கிடையாது.

இவற்றின் அடிப்படையில்தான் இப்படியொரு முடிவுக்கு வரவேண்டி இருக்கிறது.

**யூதர்களாகவும்** இல்லாமல், கிருத்தவர்களாகவும் இல்லாமல் பாலஸ்தீன மண்ணின் பழங்குடி இனத்தவர்கள் என்கிற ஒரே அடையாளமுடன் எவ்வித கலாசார வளர்ச்சியும் அற்று வெறும் மனிதர்களாக வாழ்ந்துகொண்டிருந்த அராபியர்களின் வாழ்க்கையில் அப்போதுதான் முதல்முறையாக ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. ரோமானியர்கள் ஆண்டாலும், கிரேக்கர்கள் ஆண்டாலும் வேறு யார் ஆண்டாலும் அதுவரை அவர்கள் வெறும் சுண்டைக்காயாகவே இருந்தார்கள். ஆள்பவர்கள் அவர்களைப் பொருட்படுத்தமாட்டார்கள். யூதர்கள் அவர்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள். கிருத்தவர்களோ, மதம் மாற்றமுடியுமா என்கின்ற நோக்கில் மட்டுமே அவ்களைப் பார்ப்பார்கள். இத்தனைக்கும் அவர்கள்தாம் அங்கு பெரும்பான்மை மக்கள்!

யூதமதமும் கிருத்தவ மதமும் பண்பட்ட மதங்கள் என்றும், சிறுதெய்வ வழிபாடுகளில் மூழ்கியிருந்த அராபியர்களின் நம்பிக்கைகள் எதுவுமே பொருட்படுத்தத்தக்கவையல்ல என்றும் ஒரு கருத்து அங்கே ஆழமாக வேரூன்றியிருந்தது.

அரேபிய மண்ணில் ஆதிவாசிகளான அவர்களுக்குக் கல்விகூடக் கிடையாது. உழைப்பது, சாப்பிடுவது, சந்ததிபெருக்குவது என்கின்ற மூன்று காரியங்களைத் தவிர வேறு எதற்குமே லாயக்கற்றவர்கள் என்று கருதப்பட்டார்கள். அப்படிப்பட்ட இனத்தில் முதல்முதலாக ஓர் எழுச்சி கி.பி 7ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது.

எழுச்சி என்றால், வெறும் சொல்லில் அடங்கிவிடக்கூடிய எழுச்சியல்ல அது. உலக சரித்திரத்தில் வேறு எங்கும், எப்போதும், எந்தக் காலத்திலும் இன்றுவரையிலும்கூட அதற்கு நிகரான எழுச்சி நடந்ததில்லை. ஒட்டுமொத்த அராபியர்களில் வாழ்க்கையையும் புரட்டிப்போட்டு எழுச்சி அது.

அது கி.பி 622ஆம் வருடம்,

முஹம்மது பிறக்கும் முன்னரே அவரது தந்தை இறந்துவிட்டார். பிறந்த சில காலத்துக்குள்ளாகவே தாயையும் இழந்தவர் அவர். ஏழை வியாபாரியான அபூதாலிப் என்கிற தமது பெரியப்பாவின் அரவணைப்பில் தான் அவர் வளர்ந்தார்.

இந்தப் பின்னணியை ஒரு காரணமாகக் கருதிவிட முடியாது என்றாலும், மிக இளம் வயதிலேயே கேளிக்கைகளையும் விளையாட்டுப் பேச்சுக்களையும் அறவே தவிர்க்கக் கூடியவராக இருந்திருக்கிறார். இளம் வயதென்றால் பத்துப் பன்னிரண்டு வயதுகளிலேயே.

அபூதாலிப்பால் முஹம்மதுவுக்குச் சரியான பள்ளிப் படிப்பைத்தர இயலவில்லை. அவரது ஏழ்மை அதற்குப் பெரும் தடையாக இருந்தது. அன்றைய அரேபியாவின் பெரும்பான்மை மக்களின் நிலைமை இதுதான். வளம் என்பது மிகச் சிலருக்கே உரிய விஷயமாக இருந்திருக்கிறது. கல்வியும் அத்தகையவர்களுக்கே உரித்தானதாக இருந்திருக்கிறது. படிப்பில் ஈடுபடாத அரபுக் குழந்தைகள், இளம் வயதிலேயே முரட்டு விளையாட்டுக்களில் ஈடுபடுவதும், வாலிப வயதில் வாளேந்துவதும் சர்வசாதாரணமாக இருந்திருக்கிறது.

முஹம்மதுவின் வயதில் இருந்த அத்தனை பிள்ளைகளும் வீதியில் ஆடிப்பாடி, அடித்துப்பிடித்து விளையாடிக்கொண்டிருந்த காலத்தில், முஹம்மது மட்டும் தனியே எதையே சிந்தித்தபடி அமர்ந்திருப்பவராக இருந்திருக்கிறார். அதைப் பார்த்து கேலி செய்யும் பிள்ளைகளிடம், "பிறவி எடுத்ததன் நோக்கம் இந்தக் கேளிக்கைகளில் இருப்பதாக நான் கருதவில்லை" என்று சொல்லக் கூடியவராக இருந்திருக்கிறார். அவரது தனிமை விரும்பும் சுபாவத்தையும், எப்போதும் சிந்தித்தபடி இருக்கும் இயல்பையும் மிகச் சிறிய வயதிலிருந்தே மற்றவர்கள் கவனித்து வந்திருந்தாலும், அதை ஆன்மீகத்துடன் தொடர்புபடுத்தி அப்போதே யாரும் யோசித்ததில்லை.

அன்றைய அராபியர்களின் இயல்புக்குச் சற்றும் நெருக்கமில்லாதது அது. அவர்கள் பக்திமான்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். இப்ராஹிம் (ஆபிரகாம்) நபி கட்டுவித்த க' அபா என்கிற பல நூற்றாண்டுகள் புராதனமான வணக்கஸ்தலத்தைப் பயபக்தியுடன் வலம்வந்து வணங்குபவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். எங்கெங்கிருந்தோ முந்நூற்று அறுபது இறை உருவங்களை எடுத்துவந்து அங்கே பிரதிஷ்டை செய்து தினமொரு கடவுளை பிரார்த்திப்பவர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த பக்திப்பாதை, முஹம்மதுவின் ஆன்மீகப் பாதைக்குச் சற்றும் சம்பந்தமில்லாததாக இருந்தது. துளியும் படிப்பறிவில்லாதவராக இருந்த முஹம்மது, தமக்குள் ஒடுங்கி, அதன்மூலம் பெற்றிருந்த ஆன்மீகத் தேர்ச்சியை அநேகமாக யாராலும் உணர இயலவில்லை. ஆனால் அவர்மீது அனைவருக்குமே ஒரு மரியாதை இருந்தது. பண்பான இளைஞர், பக்திமிக்க இளைஞர் என்கிற அளவில் ஏற்பட்டிருந்த மரியாதை, ஏழைகளுக்கு வலிந்து போய் உதவக்கூடியவராக இருக்கும் இளைஞர் என்பதால் உண்டாக்கியிருந்த மரியாதை.

தாம் ஓர் இறைதூதர் என்பதை அவர் அறிவதற்கெல்லாம் பல்லாண்டுகள் முன்பே உருவாகியிருந்த மரியாதை அது. என்ன வித்தியாசம் என்றால், அராபியர்களிடம் அன்று பக்தி உண்டே தவிர 'ஆன்மீகம்' என்பது அவர்களுக்கு அந்நியமானதொன்று. தமது குழுச் சண்டைகளுக்கும் இனப்போர்களுக்கும் கடவுளர்களைத் துணைநிற்கச் சொல்லி வேண்டுவார்களே தவிர, உள்ளார்ந்த அன்பை விதைத்து, சகோதரத்துவம் பயிரிடும் உத்தேசம் யாருக்குக் கிடையாது.

இந்தக் காரணத்தினால்தான் அராபியர்களிடையே சுலபமான கிருத்தவம் ஊடுருவ முடிந்தது. இதே காரணத்தினால்தான் யூதர்களுக்கும் கிருத்தவர்களுக்கும் அடுத்தபடியாகவே அவர்கள் பொருட்படுத்தப்பட்டார்கள். இதனாலேயேதான் 'காட்டரபிகள்' என்றும் அவர்கள் அன்று வர்ணிக்கப் பட்டார்கள்.

(தொடரும்...)


# பேபால் என்றால் என்ன?




இது ஒரு இணையத்தள வங்கி. இத்தளத்தின் மூலம் பணத்தை எடுக்கலாம். பணத்தை மற்றவர் கணக்குகளில் போடலாம். ஒரு வங்கிக் கணக்கிலிருந்து மற்றொரு வங்கிக் கணக்கிற்கு பணத்தை பரிமாற்றம் செய்யலாம். இணையத்தளங்களின் மூலம் வாங்கும் பொருட்களுக்குரிய பணத்தை இத்தளத்தின் மூலம் செலுத்தலாம்.

நீங்கள் இணையத்தின் மூலம் ஒரு பொருளை விற்கக்கூட இந்த கணக்கை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். முந்தைய கால Chequ, Demand draft, Money order போன்ற முறைகளுக்கு ஒரு மாற்றாக இணையத்தில் அமைந்த ஒரு Digital முறையில் பணப்பட்டுவாடா செய்ய பயன்படும் E-commerce நிறுவனமே paypal.

## Paypal நிறுவனத்தின் தொடக்கம்



Paypal நிறுவனம் 2000ஆம் ஆண்டில்தான் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் 2002ஆம் வருடம் E-Bay நிறுவனத்தின் துணை நிறுவனமாக Subsidiary மாறிற்று. இணைய மோசடிகளை Inter net Frauds தடுக்கும் வகையில் 2008ஆம் ஆண்டு ப்ராடு சயன்சஸ் என்னும் நிறுவனத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டு பலம் பெற்றது. இன்றுவரை பேபால் நிறுவனம் 15 இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து 200 இற்கும் மேற்பட்ட சந்தைகளில் இணைந்து தன்னுடைய வர்த்தகத்தை தொடர்ந்து பாதுகாப்பாக செய்துவருகிறது.

200 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைப் பெற்றுள்ளது. Paypal பத்தொன்பதுக்கும் மேற்பட்ட currency யில் கணக்கை வைத்துக்கொள்ளும் வசதியை கொண்டிருக்கிறது.

ஒரு நாட்டு கரன்சி மதிப்பிலிருந்து மற்றொரு நாட்டிற்கான கரன்சி மதிப்பிற்கு மாற்றி பணத்தை நமது கணக்கில் பணத்தைச் சேர்க்கும் வசதியைப் பெற்றிருப்பதே பேபாலின் முக்கியமான பயனாகும். மிகச் சிறப்பான பாதுகாப்பு வசதியை இது அளிக்கிறது. இந் நிறுவனத்தில் Security key இதற்கு ஒரு சரியான உதாரணம் ஆகும்.

விரைவாக, மிக எளிமையாகவும் பணத்தை இணையத்தளம் வழியாக பணம் பரிவர்த்தனை அல்லது பணப்பரிமாற்றம் செய்வதில் இத்தளம் முதலிடம் வகிக்கிறது. தற்போது சில தளங்கள் இணைய பணபரிவர்த்தனை வசதிகளைக் கொடுத்தாலும், Paypal நிறுவனத்திற்கு ஈடாக எதுவும் இன்னும் வரவில்லை. துல்லியம், பாதுகாப்பு, பயன்பாட்டில் எளிமை ஆகிய விஷயங்களில் Pay pal-க்கு Paypal தான். இந்நிறுவனம் தனது சேவைக்காக பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த Paypal நிறுவனம் கலிபோர்னியா மாகாணத்தில் அமைந்துள்ளது.

## Paypal மூலம் பணத்தை செலுத்தும் முறை:




பேபால் மூலம் நீங்கள் பணத்தைச் செலுத்த உங்களிடம் கிரடிட் கார்ட், Internet banking வசதி கொண்ட வங்கிக் கணக்கு, டெபிட் கார்ட்(Debit Card) போன்ற ஏதேனும் ஒன்று இருக்கவேண்டும். இதன் மூலம் நீங்கள் பேபால் கணக்கில் பணத்தைச் செலுத்தமுடியும். சில நாடுகளிலிருந்து வங்கி காசோலை மூலம்கூட பேபால் மூலம் பணத்தை செலுத்த முடியும்.

## Paypal மூலம் பணத்தை பெறும் முறை




Paypal மூலம் பணத்தை உங்கள் வங்கிக்கணக்கிற்கு மாற்றவும் முடியும். உங்களுக்கு பேபால் வழியாக உங்கள் வாடிக்கையாளரோ, உறவினரோ, நண்பரோ வெளிநாட்டிலிருந்து பணத்தை பரிமாறிக் கொள்ள முடியும். உங்கள் பேபால் கணக்கில் பணம் சேர்ந்தவுடன் அதை உங்கள் வங்கிக்கணக்கிற்கு மாற்றி நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

இவ்வாறு பணப்பரிமாற்றம், பணப்பரிவர்த்தனைகளுக்கு பேபால் நிறுவனம் ஒரு சிறுதொகையை கொமிஷனாக பெற்றுக்கொள்கிறது.

(தொடரும்...)

# அவலங்களை மூலதனமாக்கும் அநாகரிக அரசியல்

**தமிழ்த்** தேசியக் கூட்டமைப்பில் மேலாதிக்கம் செலுத்திவரும் தமிழரசுக் கட்சிக்கு எதிராகக் கூட்டமைப்பின் மற்றைய நான்கு கட்சிகளும் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன. கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழரசுத் தலைமை வழக்கம் போலத் தட்டிக் கழித்தால் கூட்டமைப்பு உடைவதைத் தவிர்க்க முடியாது என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். எப்படியாவது சரிக்கட்டி உடைவைத் தவிர்த்துவிடுவார்கள் என்ற அபிப்பிராயமும் நிலவுகின்றது. இந்தக் கருத்தைக் கூறுபவர்கள் அடிப்படையில் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களே.

தமிழ் மக்களுக்குப் பழக்கப்பட்டுப் போனதான வீட்டுச்சின்னத்துக்கு எதிராக புதிய சின்னம் ஒன்றுடன் தேர்தலுக்கு முகங்கொடுப்பது வெற்றிக்கு உத்தரவாதமில்லை என்பதால் போர்க்கொடி தூக்குபவர்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறமாட்டார்கள் என்று இவர்கள் கூறுகின்றனர். சுரேஷ் அணியில் இருக்கும் ஆனந்தசங்கரியின் உதயசூரியன் சின்னமும் தமிழ் மக்களுக்குப் பழக்கப் பட்டதுதான் என்பதை இவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவு படுமா இல்லையா என்பது பற்றி எதிர்வு கூறுவதைத் தவிர்த்துக்கொண்டு, இலங்கைத் தமிழ் அரசியல் வரலாற்றில் கூட்டமைப்பு வகிக்கின்ற பாத்திரம் எத்தகையது எனப்பார்ப்போம். இது ஒரு வெறுமைப் பாத்திரம். கொள்கையில் என்றாலென்ன, இப்போது பிளவுபடுவதற்கான காரணத்தில் என்றாலென்ன மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் ஒப்பிடுகையில் கூட்டமைப்பு ஒரு வெறுமைப் பாத்திரம்.

சுதந்திர இலங்கையில் தமிழ் அரசியல் அரங்கில் ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொரு கட்சி தலைமை வகித்தது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற வரிசையில் கடைசியாக அரங்குக்கு வந்தது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. தமிழ்க் காங்கிரசைத் தவிர மற்றைய மூன்று கட்சிகளும் வெவ்வேறு பெயர்களைக் கொண்டிருந்த போதிலும் ஒரே தலைமைப் பாரம்பரியமே தொடர்ந்தது. தமிழரசுக் கட்சியில் செல்வநாயகம், வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் சம்பந்தன், மாவை சேனாதிராசா.

தலைமைத் தொடர்ச்சி உள்ளபோதிலும் ஒரு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றைய கட்சிகளிலும் பார்க்க மாறுபட்டு நிற்கின்றது. மற்றைய கட்சிகள் ஏதோவொரு கொள்கையைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி அரசியல் செய்தன. தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கொள்கையைப் பிரகடனப்படுத்தியது. தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கொள்கையுடன் அரங்குக்கு வந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கையாக இன்றுவரை எதையும் பிரகடனப் படுத்தவில்லை.

தமிழ்த் அரசியலில் கூட்டமைப்பு ஒரு தற்செயல் உருவாக்கம் என்பதால் எந்தக் கொள்கையும் இல்லாமலே அரங்குக்கு வந்தது. ஒற்றையாட்சியை நீக்கிப் பிர தேச சுயாட்சிக்குச் சமமான அரசியல் தீர்வை வழங்குவனவாகச் சந்திரிகாவின் அரசாங்கம் முன்வைத்த அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளைப் புலிகளின் ஆணையை ஏற்றுத் தோற்கடித்தவர்களின் கூட்டுச் சேர்க்கையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

ஒற்றையாட்சியை நீக்குவதையும் அதிகாரப் பகிர்வையும் எதிர்த்ததுதான் இவர்கள் பகிரங்கப்படுத்திய ஒரேயொரு கொள்கை. அதன்பின்னர் எந்தக் கொள்கையையும் கூட்டமைப்பு பிரகடனப்படுத்தவில்லை. புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதோடு, புலிகளின் நிகழ்ச்சி நிரலை முழுமையாக ஏற்றுச் செயற்பட்டார்கள்.

முள்ளிவாய்க்காலில் புலிகள் தோல்வியைத் தழுவியதும் விவேகமற்றவர்களின் முடிவு என்று சம்பந்தன் கூறினார். கொஞ்சக் காலம் அந்த விவேகமற்றவர்களின் கீழ் குப்பை கொட்டியது ஏன் என்பது பற்றி எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

விவேகமற்றவர்கள் போன பின்னராவது சொந்தமாக ஒரு கொள்கையை வெளியிடலாமே. அதையும் செய்யவில்லை. இனிமேல் தான் இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளின் தீர்வுக்கு ஒரு கொள்கையைத் தீர்மானிக்க வேண்டும். கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் ஆகிய நால்வரும் சம்பந்தனுக்கு அனுப்பிய கடிதம் இதை அம்பலப்படுத்துகின்றது. கூட்டமைப்பைப் பதிவு செய்தால் வெறும் பொதுவான தீர்வுத்திட்டத்தை முன்னெடுக்க ஏதுவாக இருக்கும் என்று அவர்கள் அக்கடிதத்தில் கூறியிருப்பது இதுவரையில் தீர்வுத்திட்டம் எதுவும் இல்லை என்பதையே குறிக்கின்றது.

எந்தக் கொள்கையும் இல்லாமல் எப்படி அரசியல் செய்கின்றார்கள் என்ற கேள்வி எழலாம். அதற்கு வருவதற்கு முன் இன்னொரு விடயத்தைப் பார்ப்போம்.

முன்னரும் தமிழ்க் கட்சிகள் பிளவு பட்டிருக்கின்றன. அப்பிளவுகள் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே இடம்பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் இணையும் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எஸ்.ஜே.வி. செல்வநாயம், கு.வன்னியசிங்கம் ஆகியோர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி, தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். தமிழரசுக் கட்சியிலிருந்து ஊர்காவற்றுறை நவரத்தினம் வெளியேற்றப்பட்டதற்கும் கொள்கைப் பிரச்சினையே காரணம். அவரது தனிநாட்டுக் கொள்கையைத் தமிழரசுக் கட்சித் தலைமை அங்கீகரிக்கவில்லை. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபடும் நிலைக்கு வந்திருப்பதற்குக் கொள்கை காரணமாக இல்லை. கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதா இல்லையா என்பதே இன்றைய முரண்பாட்டுக்குக் காரணம்.

இனப்பிரச்சினையின் தீர்வுக்காக எந்தக் கொள்கையும் இல்லாமல் எப்படித் தேர்தல்களில் வெல்கின்றார்கள் என்ற கேள்விக்கு வருவோம்.

இனப்பிரச்சினை தீர்வின்றித் தொடர்வதால் அதையொட்டியபல உடனடிப் பிரச்சினைகளுக்குத் தமிழ்மக்கள் முகங்கொடுக்கின்றார்கள். நில அபகரிப்பு, சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாமை, போதுமான் வசதிகள் இல்லாத மீள்குடியேற்றம் எனப்பல பிரச்சினைகளுக்குத் தமிழ் மக்கள் முகங்கொடுக்க நேர்கின்றது. இவற்றை மக்களின் அவலங்கள் எனக் கூறலாம். இந்த அவலங்கள் பற்றிப் பேசிப் பேசிமக்களின் வாக்குகளைப் பெறுகின்றார்கள். உடனடி அவலங்கள் மாத்திரமின்றிச் சில வருடங்களுக்கு முன் தமிழ் மக்களுக்கு நேர்ந்த அனர்த்தங்களையும் எல்லாத் தேர்தல்களிலும் இவர்கள் மூலதனமாக்கி வாக்குப் பெறுகின்றார்கள். இனப்பிரச்சினைக்கு இதோ இந்தக் கொள்கையின் அடிப்படையில் தீர்வு காண்போம் என்று எந்தத் தேர்தலிலும் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுவதில்லை. கொள்கை இல்லாதது மாத்திரம் காரணமல்ல. இனப்பிரச்சினை தீரவேண்டும் என்பதிலும் இவர்களுக்கு நாட்டமில்லை.

இனப்பிரச்சினை தீர்ந்தால் அரசியல் செய்வதற்கு இவர்களுக்கு வேறு எந்த விடயமும் இல்லை. இனப்பிரச்சினை தீராமலிருந்தால் ஏதோவொரு உடனடிப் பிரச்சினை வந்துகொண்டே இருக்கும். அந்த அவலத்தை மூலதனமாக்கி அரசியல் செய்துகொண்டிருக்கலாம்.

> **"இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று மக்கள் கேள்வி எழுப்புவார்கள் என்பதால் சர்வதேச சமூகம் பற்றிப்பேசுகின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதோடு இனப்பிரச்சினை தொடர்பான தங்கள் பொறுப்பு முடிந்துவிட்டது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் நினைக்கின்றார்கள். இறுதியில் இதுவே தங்களுக்கு ஆபத்தாக முடியும் என்பதை இவர்கள் உணரவில்லை."**

—சங்கர சிவன்

இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று மக்கள் கேள்வி எழுப்புவார்கள் என்பதால் சர்வதேச சமூகம் பற்றிப்பேசுகின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதோடு இனப்பிரச்சினை தொடர்பான தங்கள் பொறுப்பு முடிந்துவிட்டது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் நினைக்கின்றார்கள். இறுதியில் இதுவே தங்களுக்கு ஆபத்தாக முடியும் என்பதை இவர்கள் உணரவில்லை.

சர்வதேச சமூகம் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்ற விசாரணை ஆகிய இரண்டு விடயங்களில் மாத்திரம் அக்கறை செலுத்துகின்றது. இலங்கை அரசாங்கத்துடனான உறவு சில விடயங்களில் சீரடைந்து வருவதால் அந்த அக்கறை கூடக் குறையத் தொடங்கியிருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வில் சர்வதேச சமூகம் பெரிதாக அக்கறை செலுத்தவில்லை. இலங்கை அராசாங்கமும் தமிழ்த்தலைமையும் பேசித் தீர்க்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் போலியான நம்பிக்கையை வளர்த்தார்கள் என்பது மக்களுக்குத் தெரிய வரும்போது மக்களின் ஆத்திரம் கூட்டமைப்பை நோக்கியே திரும்பும்.

# பல்கலைக்கழக ஆசிரியர்களின் போராட்டம் அது தொடர்பான எதிர்வினைகளும்

பிரகஸ்பதி

**இலங்கையில்,** பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளத்தினர் நடத்திவருகின்ற நாட்டின் கல்விக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் தொடங்கி அவர்களது சம்பள உயர்வு வரையில் பல கோரிக்கைகளை முன்வைத்து நடத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டம் நான்கு மாதமாகியும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முன்னெடுத்து வரும் போராட்டத்தை, அரசாங்கம் வெறும் சம்பள உயர்வுக்கான போராட்டம் என்ற வகையில் திசைதிருப்பவே இப்போதும் முயன்று வருகிறது என்பது விரிவுரையாளர்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது. பல முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்ட போதும், அது பலிக்காத நிலயில் தொடரும் போராட்டம் குறித்து இந்த வாரம் ஆராயலாம்.

பல தடவைகள் போராட்டம் நடத்தி முடிவு கிடைக்காத நிலையில் தாம் தற்போது தமது போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாக தெரிவித்திருக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தமது கோரிக்கைகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் வரை தொடரும் என்றே இதுவரையில் தெரிவித்து வருகின்றது.

இலங்கையின் கல்விக்கான நிதியொதுக்கீட்டை அதிகரிக்கவேண்டும்! தேசிய கல்விக்கொள்கையை உடன் அமுல் படுத்த வேண்டும், பல்கலைக்கழகங்களில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது.

வெளிநாட்டவர்களுக்கான புலமைப்பரிசில்களுக்காக ஒதுக்கப்படும் அதிகளவான நிதியினை எமது நாட்டு மாணவர்களுக்குப் பயன்படுத்தலாம், பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் சம்பள அதிகரிப்புகள் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து எங்களது தொழில் சங்கப் போராட்டம் கடந்த 74 நாட்களாக நடைபெற்று வருகிறது.

மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்தல், சம்பளப் பிரச்சினைகளை தீர்த்தல் உட்பட எமது முக்கிய கோரிக்கைகள் உள்ளிட்டவை அவற்றில் முக்கியமானவைகளாகக் காணப்படுகின்றன. 2011ஆம் ஆண்டின் இடைக்கால தீர்வின் படி எமது கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் தமது தொழிற்சங்க நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது என எமது பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இந்த ஒழுங்கில் நாங்கள் எங்களது போராட்டத்தினை முன்கொண்டு சென்று கொண்டிருக்கிறோம்.

ஒரு கொள்கை மட்டத்திலான ஆவணத்திலான தீர்வினைவிடவும், சம்மேளனத்தின் கோரிக்கைகளுக்கான உறுதியான தீர்வு கிடைக்கவேண்டும் என்றே எதிர்பார்க்கிறோம். கல்வியியலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 8 தீர்மானங்கள் அடங் கிய அமைச்சரவைப்பத்திரம் சம்மேளனத்திற்கு கிடைத்தது எனவும் இப்பெறுபேறு குறித்து, சம்மேளம் ஏமாற்றமடைந்துள்ளது என்றும் சங்கத்தினர் தெரிவித்துவருகின்றனர்.

இதேநேரம், பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக மத்தியஸ்தம் வகிப்பதற்கு மத்தியஸ்தர் ஒருவரை நியமிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைய்ய மறுதலிகப்பட வேண்டியது ஏனெனில் கொள்கைரீதியான பிரச்சினைகளுக்கு மத்தியஸ்தர் நியமிப்பது பொருத்தப்பாடற்றதாக இருக்கும். நாங்கள் கல்வியாளர்கள் என்ற அடிப்படையிலும் தொழிற்சங்க ரீதியிலுமே எமது போராட்டத்தினை நடத்திவருகிறோம் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் அரசாங்கம் பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிரச்சினையை வெறும் சம்பள உயர்வுக்கான போராட்டமாக மாத்திரமே பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றமை அவர்களுடைய போராட்டத்தினை வெறும் ஒரு சில விடயங்களுக்கானதாக காண்பித்து மக்கள் மத்தியில் இது சார்ந்த தவறான புரிதலை ஏற்படுத்திவிட முயற்சிப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

(22ஆம் பக்கம் தொடர்ச்சி.....)

# கற்றுக்கொண்ட பாடங்கள் மக்களைச் சென்றடையுமா?

**“எல்.எல்.ஆர்.சி** தனது எல்லையை மீறிச் சென்றுவிட்டது என்று சிங்கள மக்கள் நினைக்கிறார்கள். அதேவேளை எல்.எல்.ஆர்.சி சரியான விவரங்களைப் பதிவு செய்யவில்லை என்று தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். இந்த அறிக்கை முஸ்லிம்களின் உள்ளக் குமுறல்களைக் கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டது என்று அவர்களும் குறைகூறுகின்றார்கள்.” இவ்வாறு தெரிவித்தார் தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா.

நாட்டில் வாழும் பல தரப்பட்ட சமூகங்களுக்கிடையில் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும் அவற்றில் எது தங்கள் பிரதேசத்திற்குப் பொருந்தும் எனக் கலந்துரையாடுவதற்குமான செயலமர்வுகளை தேசிய சமாதானப் பேரவையும் சமாதானமும் சமூகப் பணிக்குமான அமைப்பு உள்ளிட்ட இன்னும் சில நிறுவனங்கள் இணைந்து கூட்டாக நடாத்தி வருகின்றன.

இந்த அமைப்புக்கள் ஏற்பாடு செய்த இரண்டாவது செயலமர்வு கடந்த வாரம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இது நாடு முழுவதிலும் தொடர்ச்சியாக இடம்பெறப்போகும் நிகழ்வின் ஒரு பகுதியாகும். அங்கு செயலமர்வில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த கலாநிதி ஜெஹான் பெரேரா,

“இத்தகைய கருத்தரங்குகள் அரசுக்கு எதிராகவும் இல்லை. அரசை எதிர்ப்பவர்களுக்கு எதிராகவும் இல்லை. இது மக்களுக்கு விழிப்பூட்டும் ஒரு நாடு தழுவிய முயற்சிதான். இருக்கும் அரசை மாற்றிவிட்டு இன்னொரு அரசைக் கொண்டு வருவது சிவில் சமூகத்தின் நோக்கமல்ல.

எல்.எல்.ஆர்.சி அறிக்கை கறுப்பு வெள்ளையாகத்தான் இருக்கின்றது. அப்படியொரு நிலைமையில்தான் நாமும் இருக்கின்றோம். தற்போது தென்பகுதி மக்கள் தாங்கள் நிம்மதியாக இருப்பதாகச் சொல்கின்றார்கள்.



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நாட்டின் யுத்தத்திற்குள்ளான பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெறுகின்றன.

விமான நிலையம், துறைமுகம், வீதி நிர்மாணம், வர்த்தக கைத் தொழில் விருத்திகள் இடம்பெறுகின்றன. பாரியளவில் பாலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. கட்டடங்கள் பெரியளவில் கட்டப்படுகின்றன. இதற்கூடாக மக்கள் அபிவிருத்தியை நோக்கிச் செல்கின்றார்கள். இத்தகைய துரித அபிவிருத்திகளால் மக்களின் வாழ்க்கை துரித கதியில் மேம்படும் என்று அரசு கூறுகின்றது.

அதே சமயம் சமூகத்தில் இன்னொரு சாரார் எந்தவகையான பாரிய அபிவிருத்திகள் இடம்பெற்றாலும் தமது வாழ்க்கைத் தரம் இருந்ததைவிடக் கீழ் நிலைக்குச் சென்றுவிட்டது. இது ஒரு பாதக நிலை என்று சாடுகின்றார்கள்.

ஆனால், நேர்மையாகப் பார்த்தால் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விட இப்பொழுது இருக்கின்ற வாழ்க்கை நிலை மேம்பட்டிருப்பபை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

தற்பொழுது ஒவ்வொரு ஐந்து தினங்களுக்குப் பிறகு ஒருத்தர் காணாமல் போகின்ற நிலை இருந்து வருகின்றது. கடந்த எட்டு மாதங்களில் 50 பேர் காணாமல் போயிருக்கின்றார்கள். அதேவேளை கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை அவ்வாறல்ல. ஒரு நாளில் ஐவர் காணாமல் போயிருந்தார்கள். ஒப்பீட்டளவில் இது பாரிய முன்னேற்றம்தான். இருந்த போதிலும் இந்த நிலைமையிலிருந்தும் மேம்பட்டு ஒருவரும் ஒருபோதும் காணாமல் போகாதிருக்கும் நிலை நாட்டில் உருவாக வேண்டும்.

நாட்டை இராணுவப் பலத்தால் மீட்டெடுத்து ஒன்றாக்கி பாலங்களையும் இன்னும் பல நவீன கட்டடங்களையும் கட்டிக் கொண்டிருக்கின்றோம். கடுகதி மற்றும் நவீன நெடுஞ்சாலைகளை அமைக்கின்றோம். ஆனால், இன்னமும் அரசியலாலும் மனங்களாலும் பிளவுபட்டுக் கிடக்கின்ற நமது நாட்டை மீள் இணைப்பதற்கான பாலங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை.

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் 375 பக்கங்கள் கொண்ட அறிக்கையிலே 186 பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 83 பரிந்துரைகளுக்கு மாத்திரம்தான் அரசு செயற்திட்டத்தை வகுத்துள்ளதாகக் கூறுகின்றது. ஏனையவற்றுக்கு அரசு என்ன பதில் அளிக்கப்போகின்றது என்ற எந்தத் தகவலும் இல்லை.

காணாமல் போனோர் சம்பந்தமாக விசாரிப்பதற்காகத்தான் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக் குழு அதிக காலத்தைச் செலவிட்டார்கள். தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தி சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசு சமர்ப்பித்துள்ள செயற்திட்டத்தில் அது தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

பழைய உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் விடயமாகக் கவனஞ் செலுத்தப்பட வேண்டும், காணி தொடர்பான விடயங்களில் இராணுவம் தலையிடக் கூடாது, நடந்த தவறுகளுக்காக நாட்டுத் தலைவர்கள் பொது மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்ற விடயத்தையும் எல்.எல்.ஆர்.சி சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டின் நன்மைக்காக எதனையும் செய்ய இந்தப் பிராந்தியத்திலே மக்கள் ஆணையைப் பெற்ற சக்தி மிக்க அரசான தற்போதைய அரசால் முடியும். நாட்டின் தற்போதைய அரசியல் தலைவர்கள் நினைத்தால் எதனையும் சாதிக்கலாம். ஆனால், சிவில் சமூகம் என்ன நினைக்கிறது என்பது பற்றி அரச தலைவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஆனால், எல்.எல்.ஆர்.சி சிவில் சமூகத்தைப் பற்றித் தான் அக்கறை கொண்டுள்ளது.

[22 தொடர்ச்சி ஆம் பக்கம்]

# நோர்வேயின் தீர்மானத்தால் வீதிக்கு இறங்கிய பெற்றோர்

**இலங்கையில்** போருக்கு ஆள்பிடிக்கும் நடவடிக்கையிலிருந்தும் மற்றும் ஆயுத வன்முறைகளிலிருந்தும் தமது குழந்தைகளின் எதிர்காலத்தைக் காப்பாற்றிவிடலாம் பெருத்த கனவுடன் பிரயாசைப்பட்டு நோர்வே சென்றவர்களுக்கு ஒரு பேரிடி விழுந்த மாதிரி அங்கு நடக்கும் நிகழ்வுகள் ஆகிவிட்டிருக்கின்றன.

நோர்வேயில் அந்த நாட்டு அரசின் குழந்தைகள் பராமரிப்புத் துறையின் பராமரிப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் இலங்கை வம்சாவளிக் குழந்தைகளை மீட்டுத் தருமாறு கோரி வீதிக்கு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தக் கூடியளவுக்கு நிலைமைகள் சென்றிருக்கின்றன.

கடந்த 29ஆம் திகதி கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்பாகக் கூடிய நோர்வேயில் வசிக்கும் இலங்கையர்களின் உறவினர்கள் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தும் நோர்வே தமது குழந்தைகளைப் பெற்றோரிடமிருந்து பிரித்து கொடுமைப்படுத்துவதாகவும் கூறி வீதிக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்த அதே காலப்பகுதியில் குழந்தைகளை தமது பெற்றோரின் பாசப் பிணைப்பிலிருந்து பிரித்தெடுக்கும் நோர்வே அரசின் ஈவிரக்கமற்ற நடவடிக்கைக்கு எதிராக நோர்வே நாட்டிலும் கவன ஈர்ப்பு உண்ணாவிரதமும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

நோர்வே நாட்டில் இலங்கையைச் சேர்ந்த பல குடும்பங்களின் பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்க்ப்பட்டு அந்த நாட்டிலுள்ள சிறுவர்கள் பரராமரிப்புத் துறையின் பொறுப்பில் பராமரிக்கப்பட்டு வருவதால் தாம் உணர்வு ரீதியாகவும் உளரீதியாகவும் மன ரீதியாகவும் பெருத்த பாதிப்புக்களைச் சந்தித்திருப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

தமது குழந்தைகளைக் கொஞ்சி மகிழ்ந்து கையால் உணவூட்டுவது, கட்டிப்பிடித்து முத்தமிடுவது, எந்நேரமும் நெஞ்சோடு அரவணைத்து உறங்க வைப்பது, படுக்கை அறையில் பெற்றோர் குழந்தைகளோடு உறங்குவது போன்றவற்றைக் கண்டால் நோர்வே அதிகாரிகள் லபக்கென்று வந்து பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்து பறித்துச் சென்றுவிடுவார்கள் என்று பெற்றோர் துயரம் வெளியிடுகின்றனர்.

அதேவேளை அங்குள்ள சிறுவர் பராமரிப்புத்துறை தமது சிறுவர்களைக் கொடுமைப்படுத்துவதாகவும் பெற்றோரும் உறவினர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆனால் ஒரு குழந்தை வளர்வதற்கு சுதந்திரமான சூழல் வீட்டில் இல்லை என்றாலோ அல்லது குழந்தைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக ஆவணப்படுத்தப்பட்டாலோதான் அத்தகைய நிலைமையுள்ள குழந்தைகள் அவர்களது வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு நோர்வே அரசின் குழந்தைகள் பராமரிப்புத் துறையின் பராமரிப்பின் கீழ் எடுத்துச் செல்லப்படுவதாக நோர்வே அதிகாரிகள் விளக்கமளிக்கின்றனர்.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பல குடும்பங்கள் தமது குழந்தைகள் இரக்கமற்ற முறையில் நோர்வே அதிகாரிகளால் பிரித்தெடுக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டுகின்றனர்.





வாகரை வாணி

இந்த விவகாரம் நோர்வே அரசின் நீதி மன்றங்கள் வரை சென்று பல குழந்தைகள் நோர்வே அரசின் சிறார் பாதுகாப்புத் துறையின் பாதுகாப்பின் கீழேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றன.

குழந்தைகளைப் பராமரிக்கும் விதம் தொடர்பில் எழுந்த கருத்து முரண்பாடுகளை அடுத்து நோர்வே அரசின் பொறுப்பில் எடுக்கப்பட்ட இரண்டு இந்தியக் குழந்தைகள் தொடர்பான பிரச்சினை இந்தியா மற்றும் நோர்வே நாடுகளுக்கிடையில் பெரும் கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தியிருந்தன. இரு நாட்டு வெளியுறவுத் துறை அதிகாரிகளின் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் குழந்தைகள் இந்தியாவிலுள்ள அவர்களது உறவினர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தன.

குழந்தைகள் பெற்றோரின் பொறுப்பில் இல்லாமல் வேறு தரப்பினரின் பராமரிப்பில் உள்ளபோது அந்தக் குழந்தைகளின் எதிர்காலம் பாழ்பட்டுப் போய்விடும் என்று பாதிக்கப்பட்டுள்ள பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இதேவேளை “பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் இருவரும் கூட்டாகப் பொறுப்பேற்றல் வேண்டும். பெற்றோர் இதனை நிறைவேற்றுவதற்கு அரசு ஆதரவளிக்க வேண்டும்” “பிள்ளையின் பரிணாம வளர்ச்சித் திறனுக்கு ஏற்றவாறான நெறிமுறைகளைப் புகட்டுவதில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் உள்ள உரிமைகளையும் பொறுப்புக்களையும் அரசாங்கம் மதித்தல் வேண்டும்.”, “சிறுபான்மைச் சமூகங்கள், ஆதிவாசிகள், ஆகியோரின் பிள்ளைகள் தம் சொந்தப் பண்பாட்டினை அனுபவிப்பதற்கும் தம் சொந்த மதம், மொழி ஆகியவற்றை பின்பற்றுவதற்கும் உரிமையுடையவர்களாவர்” என சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் மனித உரிமைகள் பிரகடனம் வலியுறுத்துகின்றது.

“பிள்ளைகளை அவர்களின் சிறந்த நலனை முன்னிட்டு அல்லாமல் புறக்கணிப்பு துஷ்பிரயோகம் போன்ற காரணங்களால் அல்லாமல் மற்றும்படி பெற்றோரிடமிருந்து பிரித்தல் ஆகாது” என்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தில் வலியுறுத்தித் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஆனால், இந்த விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டதா என்ற கேள்விகள் தமக்கு உள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் குரல் எழுப்புகின்றனர். எண்ணெய்ச் சட்டிக்குள் இருந்து தப்பி மீன் எரியும் அடுப்புக்குள் விழுந்துவிட்ட கதை போல ஆகிவிட்டது தமது நிலை என்று நோர்வேயிலுள்ள நம் நாட்டவரும் இன்ன பிற ஆசிய நாட்டவரும் கவலைப்படும் நிலை உருவாகியிருக்கின்றது.

மனித உரிமைகள், நாகரிகம் என்று மேற்கு நாட்டவர் பெரிதாகக் கொக்கரித்தாலும் கூட்டுக்குடும்ப விழுமியங்கள், கலாசாரப் பண்பாடுகள், விருந்தோம்பும் பண்புகள், சீரழிவில்லாத வாழ்க்கைமுறை என்பவற்றால் ஆசிய நாட்டவர்கள் மேம்பட்டு நிற்கின்றார்கள் என்று நம்மவர்கள் ஆதங்கப்படுகின்றார்கள். சொர்க்கமே என்றாலும் சொந்த ஊரைப்போல வருமா என்று ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகளுக்கு சொகுசு வாழ்க்கை தேடிப் போனவர்களின் புலம்பலும் காதுகளில் ஒலிக்கத்தான் செய்கின்றது.

இதேவேளை வளர்ப்புப் பெற்றோரிடம் கையளிக்கப்படும் குழந்தைகள் தமது தாய் மொழியைக் கற்கவும் கலாசாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளவும் தேவையான சூழல் தமது நாட்டில் அளிக்கப்பட்டிருப்பதாக நோர்வே அரசு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெற்றோர் நீதிமன்றத்தில் முறையீடு செய்து கொள்ள தேவையான இலவச சட்ட உதவி வசதியும் உள்ளதாக நோர்வே அரசு தெரிவித்துள்ளது.





# கடலின் அடியில் சிவன் ஆலயம்

குஜராத்தின் பாவ் நகரின் அருகில் உள்ள கடற்கரை கோலியாக். இங்கு கடலுக்குள் உள்ளது உலகச் சிறப்பு மிக்க நிஷகளங் கேஷ்வர் சிவன் ஆலயம். இந்த ஆலயம் கடற்கரையில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

தினம் தோறும் பகல் ஒரு மணிமுதல் இரவு பத்து மணி வரை கடல் உள் வாங்கி கடலினுள் உள்ள சிவனை வழிபட வழி ஏற்படுத்தி கொடுக்கிறது. பாண்டவர்கள் வழிபட்டதன் நினைவாக இந்த ஆலயத்தில் ஐந்து சிவலிங்கங்கள் அமைந்துள்ளன.

இந்த ஆலயத்தின் கல் கொடிமரம் (சுமார் இருபது முதல் முப்பதடி உயரம் உடையது) இதுவரை வீசிய புயல்களினால் சேதமடையாமல் உள்ளது.

தினமும் பகல் ஒரு மணி வரை கடல் நீர் மட்டம் இந்த கொடிமரத்தின் உச்சியைத் தொடும். பின் மெல்ல மெல்ல கடலின் நீர் மட்டம் குறைய ஆரம்பித்து, இருபுறமும் கடல் விலகி சிவனை வணங்க வழி ஏற்படுத்தி கொடுக்கிறது.



நீர்மட்டம் குறைய குறைய மக்கள் மெதுவாக கடலினுள்சென்று சிவனை வணங்கி விட்டு மீண்டும் கரை நோக்கித் திரும்புகின்றனர்.



# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 31 துன்பியல் தொடர்

**நான்** அவன் கூறியபடியே, அவனுக்கு முன்னால் வெளியே நிலத்தில் அமர்ந்ததும், அவன் என்னைக் கைதுசெய்தபோது எனது கடையில் எடுத்த டயறியையும், இலங்கை வரை படத்தையும் எடுத்து மேசையில் வைத்தான். பின்னர் அந்த டயறியை எடுத்துப் பார்த்துவிட்டு, "ஏன் டயறியில் ஒண்டும் எழுதல்லை?" என வினவினான். நான் அதற்கு "நான் அதிகமாக டயறி எழுதுவதில்லை" எனப் பதிலளித்தேன்.

அவன் என்னை வெறித்துப் பார்த்துவிட்டு, "டயறி எழுதிறதில்லையோ அல்லது எங்களை ஏமாத்த எழுதாத டயறியை வைச்சிருக்கிறியோ?" எனக் கேட்டுவிட்டு, தென்னம் பாளையால் எட்டி ஒரு அடிவிட்டான். எனக்கு அவனுடைய கதையைக் கேட்கச் சிரிப்பாக இருந்தது. 'இவங்கள் என்னைப் பிடிக்க வருவாங்கள் எண்டு நான் சாத்திரம் பார்த்து, எழுதாத டயறியை வைத்திருந்தனானாம். என்னே விவேகமான சிந்தனை' என எண்ணினேன்.

பின்னர் அவன் அந்த இலங்கை வரை படத்தை எடுத்துக்காட்டி, "எங்கடை காம்புகள் எங்கையெங்கை இருக்கெண்டு இந்தப் படத்தை வைச்சுத்தானே ஆமிக்கு தகவல் குடுக்கிறனி?" என வினவினான்.

நான் அதற்கு "இது யாரோ வாங்கி வந்த ரோட் மப். எனக்கும் இதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை" எனக் கூறினேன்.

உடனே அவன் ஆவேசம் வந்தவன் போல வெளியே வந்து, அந்தத் தென்னம்பாளையால் என்னைச் சரமாரியாக அடிக்கத் தொடங்கினான். இடையிடையே "ஆமிக்கும் உனக்கும் என்ன தொடர்படா?" எனக் கத்திக் கூச்சலிட்டான்.

எனக்குத் தாங்கமுடியாத வேதனையாக இருந்தாலும், 'என்னடா இது வம்பாக இருக்குது. என்னை இராணுவத்துடன் தொடர்புடையவன் எனப் புதுக்கதையல்லவா சோடிக்கிறாங்கள். பெரிய திட்டம்தான் தீட்டியிருக்கிறாங்கள் போல' என எண்ணினேன்.

அவன் என்மீது அடித்துக் கொண்டிருக்கையில், அந்த இடத்துக்கு வந்த ஒருவன்,



"வசீகரன் இவரைக் கொண்டுபோய் உள்ளே விட்டிட்டு தன்னிட்டை வரச்சொல்ல காந்தி அண்ணை சொன்னவர்" என்று கூறினான்.

அவ்வளவுதான், ஒருவாறு நான் அவனிடமிருந்து தப்பிக்கொண்டு, மீண்டும் சிறைச் சாலைக்குள் சென்றேன். இப்போதைக்கு ஒரு சிறு நிம்மதி கிடைத்தது.

## உப்பிட்டவரை உள்ளளவும் நினை!

நான் சிறைக்குள் மீண்டும் சென்றதும் அங்கிருந்த எல்லோரும் என்னை உற்று உற்றுப் பார்த்தனர். குறிப்பாக அவர்கள் எனது முதுகுப் பக்கத்தை அவதானிப்பதை உணர்ந்தேன். அதற்குக் காரணம் என்ன என்பதைப் பின்னர் அறிந்து கொண்டேன். அதை எனக்கு விளக்கிக் கூறியவர் எனக்கு அருகில் இருந்த வயோதிபர்தான். ஆனால் அதை அவர் பல நாட்கள் கழித்துத்தான் சொன்னார்.

அவர் தெரிவித்த தகவல்களிலிருந்து, என்னை விசாரணைக்கு அழைத்துச் சென்ற வசீகரன் என்பவன், அங்கு மிகவும் பிரபலமான (கர்ணகடூரமான) ஒரு விசாரணையாளன். அவனது குறியீடு (Trade Mark) அவன் விசாரணைகளின்போது எப்போதும் வைத்திருக்கும் அந்த காய்ந்த தென்னம் பாளைதான். அந்தப் பாளையால் அவன் முதுகில் குறி வைக்காத நபர்கள் அங்கு இல்லையென்றே சொல்லலாம். வேறொரு விசாரணையாளன் விசாரணை செய்யும் கைதியைக்கூட அவனுடைய அந்தப் பாளை பதம் பார்க்கும். அவன் அவ்வாறு கட்டறுந்த காளையாக செயற்படுவதற்கான தைரியத்தை, அந்த முகாமுக்குப் பொறுப்பாக இருந்த காந்தியிடம் அவனுக்கு இருந்த செல்வாக்கு வழங்கிக் கொண்டிருந்தது.

வசீகரனுக்கு மட்டுமின்றி, அங்கு விசாரணையாளர்களாக இருந்த ஒவ்வொருவருக்கும் விசேடமான குறியீடுகள் உண்டு. சிலருக்கு இரும்புக் கம்பிகள். சிலருக்கு மரக்கட்டைகள். வேறு சிலருக்கு மின்சாரக் கேபிள்கள். மிளகாய்த்தூள் இப்படிப்பலப்பல.

எனது முதுகில் அவனது தென்னம்பாளை அடியால், சிறு சிறு கீறல் காயங்கள் ஏற்பட்டு, எரிவையும் வலியையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அதை எனக்குப் பக்கத்திலிருந்த அந்த வயோதிபர் அவதானித்துவிட்டு மிகவும் மனம் வருந்தினார். பின்னர் அங்கிருந்த ஒரு கைதியிடம் சென்று ஏதோ கதைத்தார். அந்தக் கைதி என்னைப் பின்பக்கமாக அழைத்துச் சென்று, ஒரு தேநீர்க் குவளையில் சிறிது கறி உப்பை போட்டுக் கரைத்துவிட்டு, அதை எனது முதுகில் தடவினார். உப்புப் பட்டதும் அந்த இடம் மிகவும் எரிவாக இருந்தாலும், அது அவசியம் என்பதால் பொறுமையுடன் தாங்கிக் கொண்டேன்.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்றொரு சொல் வழக்கு தமிழில் உண்டு. சிலரின் உதவியை நன்றி கூறுவதற்கு 'அவனது உப்பைத் திண்டு வளர்ந்தவன் நான்' எனவும் சொல்வதுண்டு. இந்திய சுதந்திரப் போரின் போது, பிரிட்டிஸாருக்கு எதிராக காந்தி நடாத்திய உப்புச் சத்தியாக்கிரகம் உலகப் புகழ்பெற்றது. ஆனால் இவ்வளவு அத்தியாவசியமான உப்பு எல்லா நாடுகளிலும் விளைவதில்லை. (இந்த விடயத்தில் இலங்கையர்கள் கொடுத்து வைத்தவர்கள்) உப்புக்காக முன்னைய காலங்களில் சில நாடுகளுக்கிடையில் போர் நடந்த வரலாறுகளும் உண்டு. ஆதிகாலத்திலிருந்து தெய்வ வழிபாடுகளில் உப்பும் ஒரு முக்கிய இடத்தைப் பெற்று வந்துள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த உப்புக்கு, புலிகளின் இந்தச் சிறைச்சாலையிலும் மிகுந்த முக்கியத்துவம் உண்டு. ஆனால் அந்த முக்கியத்துவம் வேறு வகையானது. இங்கு கைதிகள் மீது புலிப் புலனாய்வாளர்களால் நடாத்தப்படும் விசாரணைகளின் போது ஏற்படும் உடற் காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதானால், நிச்சயமாக விசேட முறிவு தறிவு வைத்தியர்களைக் கொண்ட ஒரு வைத்திய சாலையும், அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளும் அத்தியாவசியம். ஆனால் அந்த விதமான ஏற்பாடுகள் எதுவும் இங்கு கிடையாது என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இந்த உப்பைக் கூட, இங்குள்ள கைதிகள் மிகவும் இரகசியமாகவே பயன்படுத்தி வந்துள்ளனர். இன்னும் சொல்லப் போனால், அந்த உப்பைப் பெறவே அவர்கள் சாதுரியமாக சில தந்திரோபாயங்களைக் கையாண்டுதான் பெற்றிருக்கிறார்கள். முதன் முதலாக அவர்கள் சாதாரண முறையில் அங்கிருந்த பொறுப்பாளர்களிடம் உப்புக் கேட்டபோது, "என்ன தேவைக்கு உப்பு?" என புலிகள் வினாத் தொடுத்திருக்கிறார்கள்.

அதற்கு என்ன பதிலைச் சொல்வது என அவர்கள் தடுமாறிய நேரத்தில், ஒருவர் முன்வந்து மிகவும் சாதுரியமான முறையில், "சில வேளைகளில் எங்களுக்குத் தரும் பொங்கல் மிஞ்சிப் போகிறது. அதை நாங்கள் வீணாக்காமல் தண்ணி ஊத்தி வைச்சு, காலையில் உப்புப் போட்டுக் கரைச்சுக் குடிக்கத்தான் உப்புக் கேக்கிறம்" என விளக்கி, அந்த உப்பைப் பெறுவதற்கு வழிவகுத்துவிட்டார்.

உப்பு வைத்தியத்தை முடித்துக்கொண்டு, மதிய போசனத்தை (சீன வெள்ளையரிசி சீனிப் பொங்கல்) உண்டபின், அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன்.

'எனது குடும்பத்தினர்களின் முகங்களும், என்னுடன் நாளாந்தம் பழகும் தோழர்களின் உருவங்களும், எமக்குப் பழக்கமில்லாவிடினும் நாம் நாளாந்தம் காணும் மனிதர்களின் தோற்றங்களும் மனக்கண்ணின் முன்னால் அடிக்கடி வந்து, எனது அகவுணர்வை எங்கெங்கெல்லாமோ அழைத்துச் சென்றது.

கண்களை மூடி சிந்தனை வயப்பட்டிருந்த எனது நினைவலைகளை, 'மணியம்' என்ற உரத்த குரல் அறுத்தெறிந்தது. வாசலை நோக்கினேன். வாயிற்காப்போன் ஆதவன் இன்னொருவனுடன் சிறை வாசலில் நின்றிருந்தான். நான் அவர்கள் அருகில் சென்றேன். இரும்புக் கதவைத் திறந்து என்னை வெளியே வரும்படி அழைத்தனர். நான் சங்கிலிக் காலுடன் அவர்களுடன் தத்தி நடந்தேன்.

போகும்போதே தெரிந்துவிட்டது. காந்தியிடம் அழைத்துச் செல்கிறார்கள். என்னை முதன் முதலாகச் சந்தித்த அதே இடத்தில், அதே வேப்பமரத்தின் கீழ் காந்தி 'வீற்றிருக்கிறான்'. வழமைபோலவே அந்த இரு பொமனேரியன் நாய்களும் இரு மருங்கிலும் வளர்த்தவன் முகத்தைப் பார்த்த வண்ணம் படுத்திருக்கின்றன. அவனது நெடிதுயர்ந்த உருவமும், சுருள் தலைமுடியும், முரட்டு மீசையும், உருட்டும் விழிகளும், எப்பொழுதும் சினத்துடன் தோற்றமளிக்கும் உருவமும், அன்று சற்று மிதமாக இருப்பதாகத் தோன்றியது.

நான் அருகில் சென்றதும், என்னை உற்றுப்பார்த்த அவன், தனக்கு முன்னால் இருந்த பின்னல் கதிரையைச் சுட்டிக்காட்டி, அதில் இருக்கும்படி சைகை செய்தான். நான் சற்றுத் தயங்கிப் பின்னர் அதில் இருந்தேன்.

அவன் என்னை ஆழமாக உற்று நோக்கிவிட்டுத் தனது கையில் இருந்த உருண்டையான தடியினால் எனது தோளில் பலமாக ஒரு தட்டுத்தட்டிவிட்டு, "என்ன பயமாக இருக்குதா?" எனக் கேட்டுவிட்டு, முழிகளை உருட்டி என்னைப் பார்த்தான். நான் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தேன்

"என்னடா நான் கேட்கிறேன். நீ பேசாமல் இருக்கிறாய். நல்ல பூசை போட்டால்தான் வாய் திறப்பியள் போலை" என்று கூறிவிட்டு, எனது தலையில் அந்தக் கொட்டனால் ஒரு தட்டுத்தட்டினான். எனது மூளை ஒருமுறை கலங்கித் தெளிந்தது.

நான் அவனைக் கெஞ்சலாகவும் பரிதாபமாகவும் பார்த்தேன். ஏனெனில் அவன் அந்தக் கொட்டனால் எனது மண்டையைப் 'பதம் பார்க்க'த் தொடங்கினால், எனது கதை அதோ கதிதான். என்னை சுட்டுக் கொன்றாலும் பரவாயில்லை. அது ஒரு விநாடி வேதனைதான். ஆனால் உடலின் உயிர்நாடியான மூளையில் கொட்டனால் தாக்கி, அதன் காரணமாக நான் சிந்தனாசக்தியை அல்லது உடல் இயக்கத்தை இழந்தால், அதனால் படும் வாழ்நாள் முழுவதும் மரண அவஸ்தையை நினைக்கப் பயமாக இருந்தது. எனவே, அவனை அந்த நிலைக்குச் செல்லாதவாறு என்னவிதப்பட்டும் தடுத்துவிட வேண்டும் என எண்ணினேன்.

**(துன்பியல்கள் தொடரும்...)**




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



**ஈகை**

**பாத்தூண் மரீ இ யவனைப் பசி என்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.**

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகுத்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை.

குறள்:227

ஈஸ்வரன் ஒரு நாட்டிய கலைஞர். பரத நாட்டியம் ஆடுவதில் வல்லவர். பக்கத்தில் உள்ள எல்லா ஊர்களிலும் திருவிழா என்றால் அவரைத்தான் ஆடுவதற்கு அழைப்பார்கள். அவ்வளவு பிரபலமான நாட்டியக் கலைஞர் அவர்.

எந்த ஊருக்கு ஆடப்போனாலும், ஒரு பெரிய தொகையை தனக்கு ஊதியமாக தரவேண்டும் என்று கேட்பார். அவர்களும், ஈஸ்வரனின் நாட்டியம் இருந்தால் தான் விழாவிற்கே சிறப்பு என்று கூறி அவர் கேட்கும் பணத்தைக் கொடுப்பதோடு, மேலும் தாங்களே அழைத்துச் சென்று விருந்து படைத்து திருப்பிக் கொண்டு வந்து விட்டுவிட்டுப் போவார்கள்.

ஈஸ்வரனுக்கு அவ்வளவு செல்வாக்கு இருந்தது. எந்த ஊரிலாவது கொஞ்சம் உபசரிப்பு குறைந்தாலும், மறுமுறை அந்த ஊர் விழாவுக்குச் செல்லமாட்டார்.

தனது கலைத்திறமையால் நிறைய செல்வங்களை சம்பாதித்திருந்தார் ஈஸ்வரன். வீடு, மனை, கார், பணம் என்று சகல வசதிகளும் இருந்தன. ஆனால் அவர் கலைக்காக திருமணம் செய்து கொள்ளாமல் தனிமையில் இருந்து வந்தார்.

காலங்கள் உருண்டோடின. செல்வங்கள் இருந்தும் அன்பு காட்ட யாருமில்லாததால் வாழ்க்கையில் வெறுமையை உணர்ந்தார். உள்ளத்தில் சமாதானம் இல்லை.

வயதாகிவிட்டதால் ஆடுவதற்கும் யாரும் அழைக்கவில்லை.

ஒரு நாள் ஈஸ்வரனை சந்திக்க

# ஆத்ம திருப்தி



ஒருவர் வந்தார். ஒரு நாட்டிய கலை நிகழ்ச்சி நடத்தப் போவதாகவும், அதில் கிடைக்கும் வருவாயை மாற்றுத் திறனாளிகளின் நல்வாழ்விற்காக பயன்படுத்தப் போவதாகவும் கூறினார். நீங்கள் எவ்வளவு ஊதியம் கேட்கிறீர்கள் என்றும் விசாரித்தார்.

சிலகாலமாக எந்த விழாவிற்கும் செல்லாமல் இருந்த ஈஸ்வரன், யோசனையில் மூழ்கினார். பிறகு, தான் ஆட சம்மதிப்பதாகவும், ஊதியம் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம் எனவும் கூறினார்.

அந்த நாள் வந்தது. ஈஸ்வரன் மேடையேறி நாட்டியம் ஆடினார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஈஸ்வரன் நாட்டியம் ஆடுவதால் கூட்டம் ஏராளமாக கூடியது. பெரும்தொகை வசூலாகியது.

மறுநாள் மாற்றுத் திறனாளிகள் அனைவரும், நிகழ்ச்சி அமைப்பாளருடன் திரண்டு வந்து ஈஸ்வரனுக்கு நன்றி கூறினர்.

அவர்களையும், அவர்கள் அணுகுமுறையையும் கண்ட ஈஸ்வரனின் மனம் உருகியது.

சங்கப் பொறுப்பாளர் ஈஸ்வரனிடம் ஊதியத்தைக் கொடுத்தார். எனக்கு ஊதியம் வேண்டாம். அதையும் இவர்களின் நல வாழ்வுக்காக நான் செய்த உதவியாக வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

இப்போது அவருக்குள் ஆத்ம திருப்தி ஏற்பட்டதுபோல உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது.

வாழ்க்கையில் தனக்காக வாழ்வதில் கிடைக்கும் திருப்தியைவிட பிறரை வாழ வைத்துப் பார்ப்பதில் கிடைக்கும் திருப்தியே ஆத்மதிருப்தி எனப் புரிந்து கொண்டார் ஈஸ்வரன்.

# அம்மா எந்தன் அம்மா!



அம்மா எந்தன்
அம்மா
அருமையான
அம்மா
வம்பு
தும்பின்றி நாளும்
அன்பை நன்கு
சொரிந்திடுவாள்!

கண்ணும் கருத்துமாய்
என்றும்
கண்ணின் மணியாய்
காத்திடுவாள்
எண்ணும் எழுத்தும்
சிறந்திடவே
அருமைக் கல்வியை
அளித்திடுவாள்!


பண்பை நாளும்
சொல்லிடுவாள்
பாங்காய் பொழுதும்
வளர்த்திடுவாள்
பயனுள்ள சொல்லே
பகன்றிடுவாள்
பயனுற என்றும்
வளர்த்திடுவாள்!

நாளும் காலையில்
எழுப்பிடுவாள்
நல்லன யாவும்
தந்திடுவாள்
வாழும் முறையைச்
சொல்லிடுவாள்
வகையாய் வாழ
பழக்கிடுவாள்!

உண்ணும் போதும்
உறங்கும்போதும்
கதைகள் சொல்லி
மகிழ்ந்திடுவாள்
எண்ணும் போதும்
மகிழும்போதும்
பிள்ளைகள் எங்களை
உயிரென்பாள்!

மாலையில் வீடு
திரும்பியதும்
நன்றாய் ஆடி
மகிழ்ந்திடுவாள்
தண்ணீர்விட்ட
செடியைப்போல்
தளிர்த்து நாங்கள்
வளர்ந்திடுவோம்!

## கண்டுபிடியுங்கள்




ஐந்து மான் குட்டிகளும் ஒன்றுபோல் தெரிந்தாலும் இரண்டு மட்டுமே ஒரே மாதிரியானவை. அந்த ஜோடி எது?

## விடுகதைகள்

1. அடிமேல் அடிவாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். – அது என்ன?
2. அம்பலத்தில் ஆடும் அழகனுக்கு அங்கம் முழுவதும் ஓவியம் –அவன் யார்?
3. இதயம் போல் துடிப்பிருக்கும், இரவு பகல் விழித்திருக்கும் – அது என்ன?
4. பார்த்தால் கல்லுதான், பல்லுப்பட்டால் தண்ணிதான் – அது என்ன?
5. அப்பன் சடையன், ஆயாள் சடைச்சி, பிள்ளைகளோ சர்க்கரைக் கட்டிகள் – அது என்ன?
6. திருடன் கையில் இருக்கும்போது தீங்கு செய்யும், மருத்துவன் கையில் இருக்கும்போது நன்மை செய்யும் – அது என்ன?

## விடைகள்

1. மிருதங்கம்
2. மயில்.
3. கடிகாரம்.
4. ஐஸ்.
5. பலாப்பழம்.
6. கத்தி.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 22.10.2012

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 962**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 960**

பரிசுக்குரியவர்:
எம்.அஷ்மினா,
தில்லையடி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்

01. எவ்.இஷான்,வைத்தியசாலை வீதி, சாய்ந்தமருது – 07
02. து.அபிஷன், சீனக்குடா, திருகோணமலை.
03. கு.ஆரபி, தட்டாதெரு, வண்ணார்பண்ணை.
04. சி.சங்கவி, ஹ°னுப்பிட்டிய, வத்தளை.
05. ம.சஞ்சீவன், புன்னாலைக்கட்டுவன்.
06. R.வீவன் அன்ரானியோ, கண்டி.
07. யோ.சுபாஷினி,சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
08. ரா.உஷாந்தினி,யா /ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.

# போலோ



குதிரையில் சவாரி செய்தபடி நீளமான குச்சியால் பந்தை அடித்து விளையாடும் குழு விளையாட்டு போலோ ஆகும். வீரர்கள் நீளமான குச்சியை பயன்படுத்தி பந்தை எதிர் அணியில் கோல் பகுதிக்குள் அடிக்கவேண்டும்.

இந்த நீளமான குச்சிக்கு மல்லட்ஸ் என்று பெயராகும். போட்டியின்போது வீரர்கள் ஒவ்வொருவரும் தலா 3 குதிரைகள் வைத்திருப்பார்கள். ஒரு குதிரை களைப்படைந்தால் அடுத்த குதிரையை பயன்படுத்தி ஆடுவார்கள். பெர்சியா நாட்டில் கி.மு. 500ஆம் ஆண்டுகளில் விளையாடப்பட்டு இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இருப்பினும் போலோ விளையாட்டின் நவீன வடிவம் 19ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டது. அந்த கால கட்டத்தில் இந்தியாவை ஆண்ட இங்கிலாந்து ஆட்சியில் இராணுவ அதிகாரியாக இருந்த சிலர் இந்த விளையாட்டை மணிப்பூர் பழங்குடி இனமக்களிடம் கற்றுக்கொண்டனர். இதில் சில மாற்றங்களை செய்து அவர்கள் விளையாடினார்கள். இது இந்தியாவில் இருந்த மற்ற படைப் பிரிவுகளுக்கும் பரவியது. போலோ கிளப்புகளில் மிகவும் பழமையானது கொல்கத்தா போலோ கிளப். தற்போது உலகில் உள்ள போலோ கிளப்புகளில் மிகவும் பழமையானது இதுதான். பின்னர் இராணுவ அதிகாரிகள் இந்த விளையாட்டை இங்கிலாந்திற்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து பிறநாடுகளுக்கு இந்த விளையாட்டு பரவியது. தற்போது ஆர்ஜென்டினா, அமெரிக்கா, சிலி, பிரேசில், மெக்சிக்கோ, இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் போலோ முன்னணி விளையாட்டாக உள்ளது.

# கொள்ளை ராணி பூலான்தேவி



## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**எ**ல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங் கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

126

**'பூலான்** தேவிக்கு ஜே' என்று கோஷமிட்டபடி பாதங்களைத் தொட்டு வணங்கியதும் பூலானுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.

இதுவரை அப்படியான ஒரு மரியாதையை அவள் பெற்றதில்லை. 'பூலானுக்குரிய வரவேற்புக் கிடைக்குமோ' என்று சந்தேகப்பட்டுக் கொண்டுவந்த மன்னுவுக்கும் பூலானுக்கும் கிடைத்த மரியாதையைப் பார்க்க

> **“மான் சிங்கிடம் இருந்து துப்பாக்கியைப் பெற்றுக்கொள்ளும் முன்பாக, பாபா வின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் பூலான்தேவி. பின்னர் பூலான்தேவி செய்த காரியத்தைப் பார்த்ததும் பாபா உட்பட அங்கிருந்த அனைவருமே திகைத்துப் போனார்கள்.”**

மகிழ்ச்சியாக இருந்தது.

மான் சிங் தன் சின்னத் தாடியை வருடியவாறு புன்னகை ஒன்றை படரவிட்டான். புல்லரித்தவளாய் நின்ற பூலானை மான் சிங்கின் குரல் அசைத்தது.

"பாபா காத்திருக்கிறார் நீங்கள் உள்ளே செல்லலாம்!" என்றான்.

தனது வலது காலை எடுத்து வைத்து உள்ளே போனாள் பூலான். மன்னுவை வெளியே நிறுத்திவிட்டு, பூலான் பின்னால் சென்றான் மான் சிங்.

உள்ளே துப்பாக்கிகளைத் தோள்களில் தொங்கவிட்டபடி பாபாவின் ஆட்கள் நடமாடினார் கள். மான் சிங்கையும், பூலானை யும் கண்டதும் மரியாதையாக ஒதுங்கி நின்றனர்.

பாபாவின் அறையை நெருங்கியதும் பூலானுக்கு முன்பாக சென்ற மான் சிங், உள்ளே நுழைந்து தலை தாழ்த்தி வணக்கம் செய்தான். அவன் பின்னால் சென்ற பூலானும் மான் சிங்கைப் போலவே தலைதாழ்த்தி வணக்கம் செய்தாள்.

பாபா முஸ்தக்குவீம் இருந்த அறையில் மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று எரிந்துகொண்டி ருந்தது. பாபா திண்டுகளில் சாய்ந்த வண்ணம் பாயில் அமர்ந்திருந்தார்.

பாபாவைச் சுற்றிலும் அவரது ஆட்கள் சிலர் அமர்ந்திருந்தனர். மான் சிங்கும், பூலானும் உள்ளே நுழைந்ததும் பாபாவைத் தவிர ஏனையோர் எழுந்து நின்று கொண்டனர்.

பாபாவின் கம்பீரமான குரல் பூலானின் செவிகளை வருடியது. "வரவேண்டும் மகளே! வழியில் ஒரு சிரமமும் இல்லையே?" என்றார் பாபா.

பூலானுக்கு உடனே பதில் சொல்ல நா எழவில்லை. அவளுக்கு எல்லாமே பிரமிப்பாக இருந்தது.

நடப்பதெல்லாம் கனவாக இருக்குமோ என்று கூட சந்தேகம் வந்தது. மல்லாவுடன் சென்று சந்தித்தபோது பெண்களை வைத்திருப்பது உகந்தது அல்ல என்று கூறிய பாபா, இப்போது தன்னை ஒரு தலைவிபோல வரவேற்பதை நம்புவதற்குச் சிறிது அவகாசம் தேவைப்பட்டது.

பாபாவின் கேள்விக்குப் பதில்சொல்லத் திணறுவதை மரியாதைக் குறைவாக நினைத்து விடப் போகிறாரே என்ற பயத்தில், "இல்லை. சிரமம் ஏதும் இருக்க வில்லை." என்றாள்.

"அப்படி அமர்ந்து கொள்!" என்று எதிரே இருந்த பாயைக் காட்டினார்.

"மான்சிங் நீயும் இரு!" என்றார்.

பாபாவின் குறிப்பை உணர்ந்து ஏனையோர் அவரை வணங்கிவிட்டு வெளியே சென்றுவிட்டனர்.

பூலானுக்கும், மான்சிங்குக்கும் சுடச்சுட தேநீர் கொடுக்கப்பட்டது. சற்று நேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த பாபாவை பூலானின் உறுதியும், துணிச்சலும் கவர்ந்துகொண்டன.

தன் குழுவில் முக்கியமான ஆட்களை உள்ளே அழைத்தார். "பண்ணையாளர்களால் மல்லா கொல்லப்பட்ட கதையை எல்லோரும் அறியட்டும். மல்லா எனக்கு சகோதரன் போல இருந்தான். பண்ணையாளர் சாதியினரை



நம்பாதே என்றேன். கேட்க வில்லை. அவன் வஞ்சிக்கப்பட்ட கதையைக் கூறு பூலான்," என்றார்.

அறைக்குள் கனத்த அமைதி நிலவியது. மல்லா கொல்லப்பட்ட சம்பவத்தை மனக் கண்ணில் காணும்போது பூலானுக்கு அடக்க முடியாமல் அழுகை வந்துவிடும்.

ஆனால் பாபா முன்பாகவும், அவர் ஆட்கள் முன்பாகவும் எந்தத் தளம்பலும் இல்லாமல் அந்தச் சம்பவத்தை விபரித்து முடித்தாள் பூலான்.

ஆணியடித்தது போல அனை-வரும் அமர்ந்திருந்தனர். அமைதி யைக் கிழித்துக் கொண்டு பாபாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

" விக்ரம் மல்லாவுக்கு ஜே!"

மான் சிங் உட்பட அந்தச் சூழ்நிலை பூலானுக்கு ஆறுத லாக இருந்தது. மல்லா மறைந்த பின்னர் தனிமரமாகிவிட்டதாக தவித்த பூலானுக்கு பாபாவின் வார்த்தைகள் இதமளித்தன.

" மல்லாவைக் கொன்ற ஸ்ரீராம் குழுவினருக்கு உரிய தண்டனை தரப்படும். ஸ்ரீராம் மீது ஏராளமான குற்றச்சாட்டுக்கள் இருந்தும் அவனைப் பிணையில் விட்டிருக்கிறார்கள் என்றால், என்ன அர்த்தம்? தங்கள் கையாளாக அவனை உலாவ விட்டிருக்கிறார்கள் பொலிஸார்!"

பாபாவின் குரலில் கோபம் தொனித்தது. தன் ஆட்களை நோக்கி விழிகளைப் படரவிட்ட பாபா, " ஸ்ரீராம் பற்றிய தகவல் களைத் திரட்டுங்கள். மல்லாவையும், பூலானையும் கொடுமைப்படுத்தியவர்களுக்கு அதற்கான தண்டனை கொடுக் கப்பட வேண்டும்!"

மான் சிங்கை நோக்கிய பாபா, "அந்தத் துப்பாக்கியை எடுத்துப் பூலானிடம் கொடு மான்சிங்" என்றார். அறையின் மூலையில் சுவரோடு சாத்திவைக்கப்பட்டிருந்த துப்பாக்கி பளபளத்தது.

எழுந்து போய் அதனை எடுத்து வந்தான் மான் சிங். பூலானும் எழுந்துகொண்டாள்.

மான் சிங்கிடம் இருந்து துப்பாக் கியைப் பெற்றுக்கொள்ளும் முன்பாக, பாபாவின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் பூலான்தேவி.

பின்னர் பூலான்தேவி செய்த காரியத்தைப் பார்த்ததும் பாபா உட்பட அங்கிருந்த அனைவருமே திகைத்துப் போனார்கள்.

தன் சேலையைக் களையத் தொடங்கினாள் பூலான். சேலையைக் களைந்ததும் தான் தெரிந்தது.

உள்ளே காக்கிச் சீருடை அணிந்து அதன்மேல்தான் சேலை கட்டியிருந்தாள். மான் சிங் சேலை கட்டிக்கொண்டு வரும்படி சொன்னபோது, கையோடு கொண்டுவந்த காக்கிச் சீருடையை அணிந்துவிட்டு, அதன் மேல் தான் சேலை கட்டிக்கொண்டாள் பூலான்.

சேலையைக் களைய தொடங்கிய நொடியில் சற்றே அதிர்ந்துபோன பாபாவுக்கும் இப்போது புன்னகை தோன்றியது.

காக்கி உடையுடன் நின்று மான் சிங்கிடம் துப்பாக்கியைப் பெற்ற பூலான், அதனைத் தன்கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

பாபாவின் கண்கள் காட்டிய குறிப்பைப் புரிந்துகொண்ட மான் சிங் "பூலானுக்கு ஜே." என்று ஓங்கிக் குரல்கொடுத்தான்.

அன்றிரவு நீண்டநேரம் பூலானுடன் தனியாகப் பேசிக் கொண்டிருந்தார் பாபா.

பாபா இறுதியாகச் சொன்ன வார்த்தை தான் பூலானை தூக்கி வாரிப் போட்டது.

'எங்களுடன் சில காலம் நீ தங்கிக் கொள்ளலாம், ஆனால் நிரந்தரமாகத் தங்கமுடியாது!" என்றார் பாபா.

பூலானின் கண்களில் தெரிந்த அதிர்ச்சியைப் பார்த்துவிட்டு பாபா தொடர்ந்து, "உன்னைக் கைவிட்டுவிடுவேன் என்று நினைக்காதே! இந்த பாபா வாக்குக் கொடுத்தால் கொடுத்ததுதான். நான் ஒரு முஸ்லிம். ஆனால் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவன் என்றெல்லாம் பிரித்துப் பார்க்கிற வன் அல்ல. என் குழுவில் மதங்களுக்கு இடமில்லை. கொள்ளைக்காரனாக இருந்தாலும் நல்ல மனிதனாக இரு. நான் சொல்வது அதுதான்!"

திருப்பங்கள் தொடரும்...



# எடையைக் குறைக்க...



**கீழே** தரப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி நடந்தால், குறைந்தது, மாதம், நான்கு கிலோ எடை குறைவது மிக உறுதி.

1.தினசரி காலை எழுந்தவுடன், 1 - 2 டம்ளர் தண்ணீர் பருகவேண்டும்.

2.குறைந்தது, 35 நிமி டம் உடற்பயிற்சி, வேக நடை, ஸ்பொட் ஜாகிங், சைக்கிளிங், ஸ்கிப்பிங் போன்றவையோ அல்லது இதரபயிற்சிகளோ செய்ய வும்.

3.அப்போதே தயாரித்த வெண்பூசணிச் சாறு அல்லது வாழைத்தாண்டு சாறு ஒரு டம்ளர் குடிக்க வும்.

4.கோப்பி, டீ அருந்தும் பழக்கமுடையவர்கள், அதற்கு பதிலாக (பால் சேர்க்காமல்) கோப்பி அல்லது டீயில் எலுமிச்சை சாறு பிழிந்து அருந்தலாம். பால் சேர்த்து அருந்த விரும்புபவர்கள் பாலை, 3- 4 முறை காய்ச்சி ஆடை நீக்கிய பின் பயன்படுத்துவது நல்லது. முடிந்தவரை சீனியைத் தவிர்ப்பது நல்லது.

5. காலை சிற்றுண்டி (8.00 - 9.00 மணிக்குள்): வெண்ணெய் எடுத்த மோர் - 1 டம்ளர், அதனுடன் கொய்யா (சிறியது), பாலாடை கட்டி அல்லது வெண்ணெய் தடவாத இரண்டு (4 துண்டு) மரக்கறி ரொட்டி, சாண்ட்விச் அல்லது இட்லி இரண்டு.

6. மதிய உணவு (12.00 - 1.00 மணிக்குள்): 2 கரண்டி ஏதே னும் ஒரு வகை கீரையும், 2 கரண்டி நீர்ச்சத்து அதிகமுள்ள காய்கறிகள் (வெண்பூசணி, புடலங்காய்) பருப்பு சேர்த்து தேங் காய் சேர்க்காமல் கூட்டு, ஒரு கரண்டி சாம்பார். ஒரு கப் சாதம் அல்லது எண்ணெய் சேர்க்காத இரண்டு கோதுமை ரொட்டி, ஒரு கரண்டி வெண்ணெய் எடுத்த தயிர் அல்லது ஒரு டம்ளர் மோர்.

7. இரவு உணவு (7.00 - 8.0C மணிக்குள்): வேக வைத்த காய்கறிகள் மூன்று கப் அல்லது சூப், பப்பாளி அல்லது ஒரேஞ்சு அல்லது அன்னாசிப்பழம் (6 துண்டு) அல்லது கொய்யா 3 துண்டு.

8. பகலில் உறங்குவதை தவிர்த்தல் நல்லது. எண்ணெய் பதார்த்தங்கள் மற்றும் நொறுக்குத் தீனிகளை தவிர்க்கவும். உப்புள்ள ஆகாரங்களை (ஊறுகாய், சிப்ஸ், உப்பு பிஸ்கட்) தவிர்க்கவும். இரவில் உண்ட பின் குறுநடை செய்த பிறகு உறங்கவும். "இளைத்தவனுக்கு எள்ளு, கொழுத்தவனுக்கு கொள்ளு" என்ற பழமொழிக்கு ஏற்ப காலையில் கொள்ளுக் கஞ்சி குடிப்பது நல்லது.

# மறதியை தடுக்கவேண்டுமா?



**நினைவுத்திறன்** குறைபாடு என்பது இன்றைக்கு பெரும்பாலான முதியவர்களை பாதிக்கிறது. அல்சீமர் எனப்படும் இந்தநோயை தடுக்க இதயத்தை பத்திரமாக பாதுகாக்கவேண்டும் என்று சமீபத்திய ஆய்வு முடிவு ஒன்றில் தெரியவந்துள்ளது.

மறதி நோய் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று மறதி நோயில் இருந்து விடுபட முதலில் இதயத்தை வலுவாக, ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள் என்கிறது.

மறதி நோயால் அவதிப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதில் இருந்து விடுபட முதலில் இதயத்தை வலுவாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

உடலில் நல்ல கொழுப்புகள் அதிகம் இருந்தால் இதயத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை. அதேசமயம் கெட்ட கொழுப்புகள் அதிகமாகி அவை இரத்தநாளங்களில் படிந்து இதயநோய்களை ஏற்படுத்துகின்றன. இதனால் நோய் குறித்த எண்ணமே மூளையை பாதிக்கிறது. எனவே ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வதன் மூலம் இதயத்தை பாதுகாப்பதோடு மூளையையும் ஆரோக்கியமாக வைக்கிறது என்கின்றனர் நிபுணர்கள்.

பொதுவாகவே உடல்நலக்குறைவு ஏற்பட்டால் முதலில் பாதிக்கப்படுவது இதயம்தான். இதே நினைப்பு மூளைச் செயல்பாட்டையும் பாதிக்கும். இதயம், மூளை இரண்டும் ஆரோக்கியமாக இருந்தால் அனைத்து பாதிப்புகளுக்கும் எளிதில் நிவாரணம் உறுதி என்கின்றனர் நிபுணர்கள்.








# அம்மாவின் கைபேசிக்காக குறைந்தது எடை

இயக்குனர் தங்கர்பச்சானின் அடுத்த படைப்பாக அம்மாவின் கைபேசி படம் உருவாகிவருகிறது. முதன்முறையாக தங்கர் பச்சானின் இயக்கத்தில் சாந்தனுவும் இனியாவும் ஜோடியாக நடிக்கின்றனர். இப்படத்திற்கான படப்பிடிப்பு தொடங்கியபோது இயக்குனர் தங்கர் பச்சான், சாந்தனுவிடம் நன்றாக சாப்பிடும்படி கேட்டுக்கொண்டாராம். பின்னர் சில நாட்களில் உடல் எடையில் 10 கிலோவை குறைத்து விட்டு வா என்றுகூற சாந்தனு அதிர்ச்சிடைந்திருக்கிறார்.

தன் வீட்டில் உடல் எடையை குறைக்க தேவையான முயற்சிகளை செய்திருக்கிறார் நடிகர் சாந்தனு. இதற்காக தன் அம்மா பூர்ணிமாவை ரொம்பவும் தொந்தரவு செய்திருக்கிறார்.

பின்னர் வீட்டில் சாப்பிடாமல் இருந்தே 15 நாட்களில் உடல் எடையில் 7 கிலோவை குறைத்துக்கொண்டு தங்கர் பச்சானிடம் சென்றிருக்கிறார். பின்னர்தான் சாந்தனுவை பாக்கியுள்ள படப் பிடிப்புகளில் நடிக்க வைத்தார் தங்கர் பச்சான். அம்மாவாக எம்.ஜி.ஆர் நடிப்பில் வெளிவந்த தனிப்பிறவி படத்தில் எம்.ஜி.ஆரின் தங்கையாக நடித்த ரேவதி நடித்து இருக்கிறார். படத்தில் அம்மாவுக்கும், பிள்ளைக்குமான பாசப்பிணைப்புக்கள் தான் கதை என் கிறார்கள்.



# தனுஷின் எதிர்நீச்சல்

நடிகர் தனுஷ் தயாரிக்கும் எதிர்நீச்சல் என்ற புதிய படம் தமிழில் விறுவிறுவென வளர்ந்து வருகின்றது. கதா நாயகனாக சிவகார்த்திகேயன் நடிக்க இப்படத்தை வெற்றிமாறனின் உதவியாளர் செந்தில் இயக்குகின்றார்.

இந்நிலையில் இப்படம் குறித்து நடிகர் தனுஷ் கூறும்போது, தயாரிப்பு என்பது ஒரு திறமையாளரை ஊக்குவிப்பது போலத்தான். இப்படத்தை இயக்கும் வெற்றிமாறனின் உதவியாளர் செந்திலை மிகவும் நம்புகின்றேன். வெற்றிமாறன் இயக்கத்தில் நான் நடிக்கும்போதே இந்த வாக்குறுதியை கொடுத்ததாகவும் தெரிவித்தார். இப்படத்தில் நடிக்கும் சிவகார்த்திகேயனைப் பற்றி சொல்லவேவேண்டாம். நல்ல அழகான நகைச்சுவையான நடிகர் எனக் குறிப்பிட்டார்.

இந்த படத்தில் 180 படநாயகி ப்ரியா ஆனந்த் நடிக்கிறார். இசையமைப்பாளர் அனிருத் எனக் கூறப்படுகிறது.

# மாற்றானுக்கு 'யு' சான்றிதழ்

முதன்முறையாக ஒட்டிப்பிறந்த இரட்டையர்களாக மாற்றான் படத்தில் நடிகர் சூர்யா நடித்துள்ளார். நேஷனல் ஜியோகிராபிக் புத்தகத்தில் வந்த ஒரு இரட்டை சகோதரர்களின் வாழ்க்கையை பிரதானப்படுத்தியே மாற்றான் படத்தை கே.வி இயக்கியுள்ளார்.

இப்படத்தில் காஜல் அகர்வால் சூர்யாவுக்கு ஜோடியாக நடித்துள்ளார். இப்படத்திற்கான படப்பிடிப்புகளை ரஷ்யா, பிரான்ஸ், நோர்வே எனப் பல நாடுகளில் எடுத்துள்ளார் கே.வி. ஆனந்த்.

இந்நிலையில் இப்படத்திற்கு தணிக்கைக்குழு 'யு' சான்றிதழ் வழங்கியுள்ளது. தற்போது இறுதிக்கட்டப் பணிகளில் இருக்கும் மாற்றான், ஒக்டோபர் 12ம் திகதி திரைக்கு வருகின்றது.

# இலியானாவுக்குப் பதிலாக சமந்தா

நடிகை சமந்தாவுக்கு திடீரென்று தோல் அலர்ஜி ஏற்பட்டதால் மணிரத்னம், ஷங்கர் படங்களில் நடிக்காமல் விலகினார். அந்த வாய்ப்பு வேறு நடிகைகளுக்கு சென்றது. சிகிச்சைக்கு பிறகு தற்போது சமந்தா நடிக்க வந்துவிட்டார். இந்நிலையில் இலியானா நடிக்கும் படவாய்ப்பு ஒன்று சமந்தாவை தேடிச் சென்றிருக்கிறது.

இந்நிலையில், இந்தியில் இலியானா நடித்த பர்பி படம் சமீபத்தில் வெளியாகி ஹிட்டானது. இதையடுத்து டொலிவூட் படங்களுக்கு முழுக்கு போட்டுவிட்டு இனி பொலிவூட் படங்களில் மட்டும் கவனம் செலுத்தப் போவதாக கடந்த மாதம் இலியானா மும்பை பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.



# ஆட்டம் போடுவாரா



என்
கிடையாது.
ஆனால் இப்
ஏராளமான பள்ளிகள் உ
திரைக்குப் பின்னால் கடினமான
எனவே அப்படிப்பட்டவர்களுக்கு
தொழில்நுட்ப கலைஞர்களின் திறன







## ரா அனுஷ்கா?

தற்போது படங்களில் நடிப்பது மட்டுமல்லாமல் இசை அல்பங்கள் உருவாக்குவதிலும் கதாநாயகர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தனுஷ், சிம்புவை தொடர்ந்து இப்பட்டியலில் இடம்பிடித்திருக்கிறார் கார்த்தி. அலெக்ஸ் பாண்டியன் படத்தில் பேட் பாய் என்ற கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் கார்த்தி, அப்படத்தின் பெயரையே தலைப்பாக வைத்து இசை அல்பமொன்று உருவாக்குகிறார்.

இதுகுறித்து கார்த்தி கூறுகையில், இது என்னுடைய முதல் முயற்சி. உண்மையிலேயே த்ரில்லாக இருக்கிறது. இது அலெக்ஸ் பாண்டியன் படத்தை பிரபலப்படுத்துவதற்கான அல்பம். மேற்கத்திய பாடகர்கள் அணிவது போல் ஸ்டைலான உடைகள் அணிந்து இதில் ஆடப்போகிறேன்.

எப்படியிருக்கும் என்பதை கற்பனை செய்துகொள்ளுங்கள். தேவி ஸ்ரீபிரசாத்துடன் இணைந்து நடன இயக்குனர் ராபர்ட் இதனை வடிவமைக்கிறார். இதில் அனுஷ்கா என்னுடன் சேர்ந்து ஆடுவார்களா என்கிறார்கள். இல்லை, தேவி ஸ்ரீபிரசாத் என்னுடன் ஆடுவார். அதற்கான பேச்சு நடக்கிறது என்றார்.

## டாப்ஸியை சுற்றுகிறது பூகம்பம்

மலையாளத்தில் மம்முட்டி, நதியா, டாப்சி இணைந்து நடித்த டுவின்ஸ் படம் தமிழில் புதுவை மாநகரம் என்ற பெயரில் திரைக்கு வருகின்றது.

இந்த படத்தை விளம்பரம் செய்ய டாப்சி படங்களுடன் போஸ்டர்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் பிரபல தெலுங்கு நடிகர் மனோஜ் மஞ்சுவின் சகோதரி லட்சுமி மஞ்சு(தயாரிப்பாளர்) எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இந்த எதிர்ப்பு குறித்து அவர் ஐதராபாத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் விபரம்: ஆதி, டாப்சி நடித்த 'மண்டல்ல கோதாவரி' என்ற பெயரில் தெலுங்கு படமொன்றை தயாரித்து வருகிறேன். அந்த படத்துக்காக எடுக்கப்பட்ட டாப்ஸி புகைப்படங்களை புதுவை மாநகரம் போஸ்டர்களில் பயன்படுத்தி உள்ளனர். எனவே இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடிவு எடுத்துள்ளேன் என்றார். இதுகுறித்து டாப்ஸி கூறியதாவது, தெலுங்கு படத்தில் நடித்த எனது படங்களை 'புதுவை மாநகரம்' போஸ்டர்களில் பயன்படுத்தியது எனக்கு தெரியாது என்றார். ஏற்கனவே டாப்ஸியுடனான காதலில் மனோஜ் மஞ்சுவும் மகத்தும் மோதிக் கொண்டனர். தற்போது டாப்ஸியைச் சுற்றி புதிய பிரச்சினை ஒன்று பூகம்ப மாகக் கிளம்பி யுள்ளது.

## நடக்கிறது திருமணம்!

சயிப் அலிகானும் கரினாகபூரும் நீண்ட வருடங்களாக காதலித்து வருகின்றனர். இருப்பினும் இன்னும் முறைப்படி திருமணம் செய்துகொள்ள வில்லை. இந்த திருமணம் பற்றிய தகவல்கள் அடிக்கடி உலாவரும். அதேபோல், வரும் 17ஆம் திகதி சயிப் அலிகான்- கரினா திருமணம் நடக்க உள்ளதாம்.

இந்தியாவில் சயிப் அலிகான், பட்டோடி என்ற அரச வம்சத்தை சார்ந்தவர் என்பதால் திருமணத்திற்காக பட்டோடி அரண்மனை புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. சயிப் அலிகானின் தாயார், நெருங்கிய உறவினர்களுக்கு திருமண பத்திரிகைகள் கொடுத்து வருகின்றார் என்றும் முக்கிய நட்சத்திர விடுதிகள் வரும் 25ஆம் திகதி வரை முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சயிப் அலிகான், ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து பெற்றவர் என்பதும் பிரபல, மறைந்த இந்திய கிரிக்கெட் வீரர் மன்சூர் அலி-கான் பட்டோடியின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## இரு துருவங்கள் இணையும் காதல் காவியம்

நடிகர் சிரஞ்சீவியின் மகன் ராம்சரண் நடித்த மாவீரன், ரகளை, சிறுத்தைப்புலி போன்ற படங்கள் தமிழிலும் மிகப்பெரிய வசூல் சாதனையை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்நிலையில், தெலுங்கில் ராம்சரண் நடித்த ஆரஞ்ச் என்ற வெற்றிப்படம் ராம்சரண் என்ற பெயரிலேயே மொழிமாற்றம் செய்யப்படுகின்றது. கதாநாயகியாக ஜெனிலியா நடிக்கிறார். மற்றும் பிரபு, பிரகாஷ்ராஜ், பூஜா போன்ற நட்சத்திரங்களும் நடிக்கின்றனர். கதை, திரைக்கதை, எழுதி பொம்மரில்லு பாஸ்கர் இயக்கியுள்ளார். வசனம் எழுதி தமிழ் வடிவமைப்பு கொடுத்திருப்பவர் ஏ.ஆர்.கே.இராஜராஜன்.

காதலிக்கிறது ரொம்ப நாள் நிலைக்கிற விடயமல்ல. சீக்கிரமே தொடங்கி சீக்கிரமே முடிகிற விடயம் என நாயகன் ராம்சரண் இருக்கிறார். ஆனால் காதல் ஆண்டாண்டு காலமாக நிலைத்து நிற்கிற விடயமென நினைக்கிறார் நாயகி ஜெனிலியா. இருதுருவங்களாக எண்ணங்களைக் கொண்ட இவர்கள் இருவரும் ஒரே எண்ணங்களுடன் இணையும் அருமையான காதல் கதை தான் ராம்சரண்.






## தொழில்நுட்ப கலைஞர்ளுக்கு ஒரு பள்ளிக்கூடம்

இந்திய சினிமாவை உலக தரத்தில் உயர்த்தும் முயற்சியாக சினிமா தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் விதத்தில் உலக நாயகன் கமல், பயிற்சிப்பள்ளி ஒன்றை தொடங்க இருக்கிறார். சமீபத்தில் வெளியான விஸ்வரூபம் டிரைலரை பார்த்த ஹொலிவூட் இயக்குனர் பேரி அஸ்போர்ன், தன்னுடைய அடுத்த படத்திற்கு கமலையே தெரிவுசெய்துள்ளார். இதன் மூலம் ஹொலிவூட்டில் நுழையும் கமல், தன்னை வளர்த்து விட்ட தமிழ் சினிமாவையும் ஹொலிவூட்டிற்கு கொண்டுசெல்ல முயற்சிக்கிறார்.

இதுதொடர்பாக சமீபத்தில் இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கமல்ஹாசன் கூறியதாவது: நான் சிறு வயதில் இருந்தே சினிமாவில் நடிகராக வேண்டும் என்று விரும்பினேன். அப்போது நடிப்பு பயிற்சி எடுத்துக்கொள்ள இடங்களோ, வசதிகளோ ...ாது.

...ப்போது அதற்கான வசதிகள் பிரமிக்கத்தக்க வகையில் பெருகிவிட்டன. நடிப்பு பயிற்சிக்காக ...ர் உள்ளன. அதே சமயத்தில் சினிமா தொழில்நுட்ப கலைஞர்கள், சண்டை கலைஞர்கள் மற்றும் ...மான பணிகளை செய்பவர்கள், இவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்க பள்ளிகள் கிடையாது. ...கு பயிற்சி அளிக்கும்வகையில் ஒரு பள்ளியை தொடங்க முயற்சி எடுத்துவருகிறோம். குறிப்பாக இளம் ...றமையை மேலும் வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கும் என்றார்.

# தேன் கிண்ணம்

## ஏது நட்பு?

எதுவடா நட்பு
எம்மோடு பேசி விட்டு
பின்னால் போய் வசை பாடுவதே
அதுதான் நட்பா?

கூட இருந்தே குழிவெட்டி
விட்டு பின் எம்மோடு
நட்புறவாட வருகிறீரே
அதுதான் நட்பா?

உண்மையோடு உறவாடும்
ஒருவனை நீ உரிமையோடு
ஊர்சுற்ற மட்டுமே
அழைப்பது அதுதான் நட்பா?

அத்தனையும் இல்லை
என்னைக் கேள் ஒன்றே
ஒன்றை மட்டும் நான் சொல்வேன்.
கோபதாபங்களிலும்
கஷ்ட நஷ்டங்களிலும் உதவும்
நட்பே உண்மையான நட்பு!!!

நஸார் இஜாஸ்
கிண்ணியா - 05

## பேரர்கள்

சிலர்
பேரம் பேசிப்பேசியே
சோரம்போய்
ஓர் ஓரத்தில்
உட்கார்ந்து
காணாமல்
போகிறார்கள்.

சிலர்
சோரம் போகாமலும்
ஓரம் ஒதுங்காமலும்
பேரம் பேசியே
பெரும் பேரர்கள்
ஆகிறார்கள்.

ஆயிரம் பேரர்கள்
அவனியில் இருந்தாலும்
அவர்களையும்
எஞ்சி நிற்பார்கள்
எங்களின்
அரசியல் பேரர்கள்.

பாண்டியூர்
பொன்.நவநீதன்

## பிரியாவிடை நாள்



என்னிடம் இருந்து
எல்லாவற்றையும்
பறித்துக் கொண்ட இறைவா
கண்ணீரை மட்டும் ஏன்
விட்டு வைத்தாய் நான்
தண்ணியில் (சரக்கு)
மூழ்கி
கண்ணீரில் மிதக்கவா.


என்னவளே நான்
ஒரு இரகசியம்
சொல்கிறேன் யாரிடமும்
சொல்லிவிடாதே
நீ என் உயிர் என்பதை.

உன் பாதச்சுவடுகள்
பட்ட மண்ணை எடுத்து
பத்திரப்படுத்தியுள்ளேன்
உன்னோடு வாழாவிட்டால்
இம் மண்ணோடு வாழ்வேன்
நான் மண்ணோடு மன்னாகப்
போகும் வரை.

என்னுயிரே நீ என்னை விட்டு
நிரந்தரமாக பிரியும் நாள்
எனக்கும் என் வாழ்வுக்கும்
பிரியாவிடை நாள்.

ந.சசி
வாழையூற்று
திருமலை.

## பாவப்பட்ட பாவை



பூத்துக்குலுங்க
வேண்டிய புது மொட்டு
பார்த்திருக்கவே,
பாவப்பட்டுக்
கிடக்கிறதே!

கொல்லும் இளமை
கொடூர வறுமை!
இல்லாமையுடன்
போட்டியிட்டவள்
இதயம்
இல்லாதவர்களை
எதிர்க்க
முடியவில்லையே!

கல்வியைத்
துறந்து
கனவுகளைத்
துறந்து கற்பனையையும்
துறந்தவளுக்கு
கற்பையும் துறக்கவேண்டிய
துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிட்டதே!

சிலை செய்தவர்களுக்கு
சிந்திக்க நேரமில்லை!
நிலைமாறும் என்று
நிமிடமும் நினைக்கவில்லை!
வினை தீர்ப்பாள் - என்று
விழி காத்த பெற்றோரை
வீண் பலிக்கு ஆளாக்கி
விலையாகிப் போனவளுக்கு
வழியில் துணை இல்லை!
வாழ்க்கையிலும் சுகம் இல்லை!

நா.ஜெயபாலன்,
பிபிலை.

## சுதந்திரமாய் வாழவிடுங்கள்!



எனது கரங்களை கட்டி
விடுங்கள்!
நாவினால் மட்டும்
கவிதை நாதம் இசைக்கிறேன்
நாடித்துடிப்பு உள்ள வரைக்கும்!


பஞ்சணையில் என்னைத் துஞ்ச
விடுங்கள்!
பசியை மறந்து கவிதைக் கனவுகள்
கண்டு காலமெல்லாம்
களித்து வாழ்கிறேன்.

விண்ணில் என்னை
வீசி விடுங்கள்
தாரகைப் பூக்களைத் தாவிப்
பிடித்து நிலாமகள் ஒளியில்
தங்க முலாமது பூசி ஏழைக்
கன்னியர் வாழும்!
மனையது நோக்கி
வேகமாய் மண்ணில்
வீசிவிடுகிறேன்.

என்னை நீங்கள்
தாலாட்டுங்கள்
எல்லாம் மறந்து உறங்கிப்
போகிறேன்.

அட்டாளைச்சேனை
ஸவாஹிர்

## ஈழத்துக் கவிஞர்கள்



## துவாரகன்

துவாரகன் என்ற புனைபெயர் கொண்ட சு.குணேஸ்வரன் ஈழத்துக் கவிஞராக, விமர்சகராக, புலம்பெயர் இலக்கிய ஆய்வாளராக அறிமுகமானவர்.

துவாரகன், ஆரம்பக் கல்வியைக் கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திலும் க.பொ.த.உயர்தரத்தை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும் பயின்றார். பெற்றோர் சுப்பிரமணியம், கமலாதேவி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் (தமிழ் சிறப்பு) பட்டத்தைப் பெற்றார். 20 ஆம் நூற்றாண்டில் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் கவிதை, புனைகதைகள் என்ற ஆய்வுக்காக பேராசிரியர் அ.சண்முகதாசின் நெறியாள்கையில் 2006 இல் முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பெற்றார். தற்போது யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

கவிதைகளுடன் விமர்சனத்திலும் ஈடுபாடு கொண்டவர். இவரின் கவிதைகள் உயிர் நிழல், வார்ப்பு, பதிவுகள், திண்ணை, அதிகாலை, கொம், காற்றுவெளி, தமிழ் ஓதர்ஸ் மற்றும் பல இணைய இதழ்களில் வெளியாகியுள்ளன.

ஈழத்து இதழ்களான மல்லிகை, கலைமுகம், ஞானம், புதிய தரிசனம், வெளிச்சம், தாயகம், செங்கதிர் மற்றும் புலம்பெயர் இதழ்களான உயிர்நிழல், எதுவரை போன்றவற்றிலும் தமிழகத்திலிருந்து வெளிவரும் யுகமாயினி, உயிர்மை ஆகியவற்றிலும் வீரகேசரி, தினகரன், நமது ஈழநாடு, உதயன், வலம்புரி, தினக்குரல், சுடர்ஒளி ஆகியவற்றிலும் இவரது படைப்புக்கள் வெளியாகியுள்ளன.

### இவரது நூல்கள்

*மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்*
- கவிதைத் தொகுப்பு. வெளியீடு:
திணைப்புனம். யாழ்ப்பாணம். 2008.
*அலைவும் உலைவும்,*
புலம்பெயர் படைப்பிலக்கியம் குறித்த பார்வை
( கட்டுரைகள்). வெளியீடு: திணைப்புனம்.
முதற்பதிப்பு 2009

### இவரது கவிதைகளில் ஒன்று

## நகரம்

வண்ணமாய் மின்னும் நகரம்
அதிகமும் பைத்தியக் காரர்களால்
நிரம்பியிருக்கிறது.

ஏவி விடப்படும் இயந்திர மனிதர்கள் போல்
யார் யாரோவெல்லாம்
இந்த மனிதர்களை இயக்குகிறார்கள்.

கடமைக்கு விரைந்தவன்
கூவிக்கூவி விற்ற கடதாசிப் பூக்களை
விலை பேசிக் கொண்டிருக்கிறான்.

கழுத்துப்பட்டி சப்பாத்து அட்டைகள் பத்திரங்களுடன்
பூவரச வேலிக்குள் ஓடாகிப் போன மனிதர்களை
ஏமாற்றப் புறப்படுகிறார்கள் இன்னுஞ்சிலர்.

மூச்செடுக்க முட்டுப்படுபவனிடம்
வைத்தியசாலை வாசலில் நின்று
பிச்சை கேட்கிறான் ஒருத்தன்.

பெற்றவரும் மற்றவரும் நோயில் செத்துக்கொண்டிருக்க
கண்ணை மின்ன மின்ன
அதிசயப் பிராணிகளென படம் பிடிக்கிறார்கள்
வேற்றுக்கிரகத்தால் நேற்று வந்த மனிதர்கள்.

தனியே சிரிப்பவர்களும் வீதியில்
கனாக் காண்பவர்களும்
கண்ணாமூச்சி விளையாடுபவர்களும்
கண்டு பிடிக்கப்படுபவர்களும்
இன்னும் நவீன பைத்தியக்காரராய்
உருமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகளும் செல்லப் பிராணிகளும் கூடவே உள்ள
சொற்ப மனிதர்கள் தப்பித்துக் கொள்ள மின்னும் நகரம்
பைத்தியக்காரர்களால் நிரம்பியிருக்கின்றது!

வேலணையூர் தாஸ்

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.



# சிங்கை 07 மைந்தன் அமரசிம்மன்

'பிரபு தங்களைப் பற்றி நாம் சில நாட்களுக்குள்ளேயே எப்படிப்பட்டவர் என்று உணர்ந்து கொண்டோம். இப்போது நாம் என்ன செய்யவேண்டும்? உத்தரவிடுங்கள் பிரபு. உங்களுக்காக எங்கள் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றோம்" என்றான்.

"காராளா!" என்று அழைத்து அவன் தோளில் ஓர் கையைப் போட்டு அணைத்து "நீ என்னிடம் இவ்வளவு விசுவாசம், அன்பு வைத்திருப்பதற்கு நன்றி. நான் உன்னைத் தெரிந்து வைத்திருப்பது போல என்னையும் நீ அளந்து வைத்திருக்கின்றாய். அந்த நம்பிக்கையில்தான் உன்னிடம் உதவி கோரினேன்."

"பிரபு! உதவி உதவி என்று என்னை துன்புறுத்தாதீர்கள். உங்கள் சுண்டுவிரல் அசைந்தால் இந்த நகரமே அசையும். கேவலம் இந்த மாஜிக் கொள்ளைக்காரனிடம் உதவி என்று கேளாது கட்டளையிடுங்கள் பிரபு" என்றான்

" காராளா! கட்டளையிட்டுச் செய்வது பணிந்து செய்வது. இது அப்படிப்பட்டதல்ல. கரடியனுடைய உபதளபதி அட்டுழியமும் அவனது சகாக்கள் சிலரும் எதற்கும் பணிய மறுக்கின்றார்கள். அவர்களை நல்வழிப்படுத்தும் செயலை உன்னிடம் ஒப்படைப்பதற்கான உதவியைத்தான் உன்னிடம் கேட்டேன்"

"பிரபு! கரடியன் கூட்டத்தில் அட்டுழியம் தன்னிச்சையாகவே நடந்து கொள்வான். கரடியனும் அவனது முரட்டுத்தனமான பிடிவாதத்துக்கு விட்டுப்பிடிப்பான். அவனுக்கு அடியாட்களாயிருப்பவர்களும் அவனை விட்டுவிலகமாட்டார்கள். அவன் பெயரக்கேற்ப எப்போதும், எங்கேயும் அட்டுழியமாகவே நடந்து பழக்கப்பட்டுவிட்டான். இவர்களைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கை இல்லை பிரபு."

"அப்படி கூறமுடியாது காராளா? கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். சில வேளை நீ முயற்சித்தால்..."

"பிரபு! தங்களால் முடியாதது எது? நான் சிறியேன் எப்படிச் செய்வேன்?"

"ஒரு காலத்தில் நீயும் அவன் கூட்டத்தில் இருந்தவன் என்பதால் நீ கூறுவதில் அவனுக்குக் கூடிய நம்பிக்கை ஏற்படலாம் இல்லையா?"

"பிரபு எனக்கு என்னவோ நம்பிக்கையில்லை?"

"காராளா! இயன்றவரை நல்வழியில் அன்பால் திருத்த முயற்சிப்போம். முடியாவிட்டால் அமரசிம்மனின் மறுபக்கம் எத்தகையது என்பதையும் அவனுக்கு உணர்த்திவிடு. அட்டுழியத்தை அட்டுழியத் தால்தான் அடக்கவேண்டும் அல்லது அழிக்க வேண்டும் என்றால் அதைக் கடைசி ஆயுத மாக வைத்துக் கொள்ளலாம். உன்னால் இயன்றவரைக்கும் பணிந்து முயன்று பார்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

இளம் வயதிலேயே அவனுக்கு ஈடிணை யாருமில்லை என மற்றவர்களால் போற்றப்படும் ஓர் மாவீரன் மற்றவர்களின் உயிரைக் காப்பதற்காக எவ்வளவு தூரம் மனிதப் பண்போடு செயல்புரிகின்றான். அதற்காகத், தன் தகுதியையும் மறந்து மூன்று நான்கு தினங்களுக்கு முன் கொள்ளைக்காரனாக அதுவும் அவனைக் கொலை செய்யவந்த தன்னை ஓர் மனிதனாக்கியது மட்டுமன்றி ஓர் நண்பனைப்போல தோளில் கைபோட்டு அன்புடன் அரவணைத்து அறிவுரை கூறி விட்டுச்செல்லும் அவன் உருவம் மறையும்வரை பார்த்துக் கொண்டு நின்ற காராளன் அவன் உருவம் மறைந்துவிட்ட பின்பும் தன் மனக்கண்ணில் அவனை நினைத்துப் பெருமைப்பட்டான். எவன் ஒருவன் தன்னைத்தானே பெருமைப்படுத்த நினைக்காது மற்றவர்களை மதித்து நடக்க முற்படுகின்றானோ அவன் மற்றவர்களால் போற்றித் துதிக்கப்ப்டுகின்றான் என்ற உண்மையை உணர்ந்து மெய்சிலிர்த்தான்.

அந்த மாபெரும் வீரனின் அறிவுரைப்படி கொள்ளையர்களின் உபதலைவனான அட்டுழியம் அடைக்கப்பட்டிருக்கும் சிறைக் கூடத்தை நோக்கிச் சென்றான். சிறைக்கூடத்தின் தலைவனிடம் அனுமதிபெற்று உள்ளே சென்றவன் ஓர் சிறைக்கூடத்தில் அட்டுழியமும் அவனது சகாக்களும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அந்த அறைக் கதவின் முன் சென்று 'அட்டுழியம்' என்று அழைத்தான்.

அடுத்த விநாடியே அங்கே ஓர் அட்டுழியம் நடக்கும் என்று எதிர்பார்த்திராத காராளன் நெற்றியிலிருந்து பெருகிய குருதியைக் கையால் துடைத்துக்கொண்டே தனது எஜமானின் அறிவுரையை மனதில் நினைத்தவனாய் மீண்டும் குரல் கொடுத்தான்.

***

முதியோர், குழந்தைகள், பெண்கள், மறை முதல்வர்கள், நோயாளிகள் ஆகியோரைக் கொல்லுதல் பாவம் என்று சாஸ்திரங்கள் கூறினாலும், கொள்ளைக்காரர்கள் சாஸ்திரங்களையோ, நீதி நியாயங்களையோ பார்ப்பது கிடையாது. அவர்களது வெறித்தனம் எதற்கும் கட்டுப்பாடு கிடையாது.


கொள்ளைக் கூட்டத்தின் தலைவனுக்கு அவன் கூட்டாளிகள் கட்டுப்பட்டு நடந்துகொண்டாலும் அட்டுழியம் போன்றவர்கள் அப்படிப் பணிவதில்லை.

(தொடரும்...)

## முதலிரவில் உளறிய உண்மை

# மரணத்தில் முடிந்தது திருமணம்!!

தாயின் பேராசை காரணமாக சட்டத்தரணியை ஒரு முறை சென்று சந்தித்தார் மகள். சட்டத்தரணிக்கு வயது 44 ஐ விட மிக அதிகம் என்று உணர்ந்து கொண்டார். சட்டத்தரணி ரொம்பவே வயதான வர் என்று தாய்க்கு வந்து சொன்னார். இவரை விட்டு விட்டு இன்னொருவரை பார்க்கலாம் என்று தாயிடம் கூறினார்.



**68 வயதுச்** சட்டத்தரணி ஒருவர் 21 வயது ஆசை நாயகியால் வெலிகமவில் கடந்த வாரங்களில் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக புதிய திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

யுவதியின் பெயர் பாத்திமா. காலியில் பொத்தல பிரதேசத்தை சொந்த இடமாகக் கொண்டவர். தகப்பன் ஓட்டோ சாரதி. காலியில் முன்னணிப் பாடசாலை ஒன்றில் யுவதி படித்து இருக்கின்றார். இவருக்கு அக்காவும், தம்பியும் உள்ளார்கள்.

பாடசாலைக் காலத்திலேயே இவருக்கு பல ஆண்களுடன் தொடர்புகள். இவரது பாடசாலைக் காதலன் வெளிநாடு செல்லத் தீர்மானித்தான். புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கின்றமைக்காக பாடசாலைக் கல்வியை முடித்த பிற்பாடு இக்காதலனுடன் திருமணம் செய்யாமலேயே சீசெல்சு தீவுக்கு புறப்பட்டுச் சென்று இருக்கின்றார். ஆயினும் இவர் அங்கும் கள்ளத்தொடர்புகள் வைத்திருந்து இக்காதலனிடம் கையும்மெய்யுமாக பிடிபட்டு இருக்கின்றார். இதனால் இவரை இக்காதலன் நாட்டுக்கு திரும்பக் கொண்டு வந்துவிட்டு இருக்கின்றார்.

இந்நிலையில் மகளுக்கு மிகவசதியான ஒருவரை திருமணம் செய்துவைக்க யுவதியின் தாய் தீர்மானித்தார். மணமகன் தேவை என்று பத்திரிகை ஒன்றில் விளம்பரம் போட்டார்கள். இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற லெப்டினண்ட் ஒருவர் இவ்விளம்பரத்தின் மூலம் இவர்களுடன் தொடர்பு பட்டு இருக்கின்றார்.

யுவதியைவிட லெப்டினண்ட் மிகவும் வயதானவர். அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்று இருந்தபோதிலும் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்துவருகின்றார். ஆயினும் லெப்டினண்ட் பணக்காரர். கடவத்தையில் ஏராளமான சொத்துக்களுக்கு சொந்தக்காரர். இதனால் மகளை திருமணத்துக்கு வற்புறுத்திச் சம்மதிக்க வைத்து இருக்கின்றார் அம்மா.

திருமணம் நடந்தது. ஆனால் லெப்டினண்ட் ரொம்பவே பிஸியாக நடந்துகொண்டார். இதனால் மிக அரிதாகவே வீட்டுக்கு வருவார். இதனால் இத்திருமண பந்தம் பயனற்றது என யுவதியின் தாய் உணர்ந்துகொண்டார். மணமகன் தேவை என்று பத்திரிகையில் மீண்டும் விளம்பரம் போட்டார். ஆயினும் இதை லெப்டினண்ட் மருமகனுக்கு தெரிய வராத வகையில் இரகசியமாக மேற்கொண்டு இருந்தார்.

சட்டத்தரணி வில்சன் ஜெயவர்தன இவ்விளம்பரம் மூலமாகத்தான் எழுத்துமூலம் தொடர்புகொண்டார். இவர் கொழுத்த செல்வந்தரும்கூட. 68 வயதுக்காரராக இருந்தபோதிலும் 44 வயதுக்காரர் என்று கடிதத்தில் கூறி இருந்தார். அத்துடன் சொத்து விபரங்களையும் வெளிப்படுத்தி இருந்தார். மில்லியன்கணக்கான இவரின் சொத்துக்கள் இவரை திருமணம் செய்கின்ற பெண்ணுக்கு வந்துசேரும் என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

தாயின் பேராசை காரணமாக சட்டத்தரணியை ஒரு முறை சென்று சந்தித்தார் மகள். சட்டத்தரணிக்கு வயது 44 ஐ விட மிக அதிகம் என்று உணர்ந்துகொண்டார். சட்டத்தரணி ரொம்பவே வயதானவர் என்று தாய்க்கு வந்து சொன்னார். இவரை விட்டுவிட்டு இன்னொருவரை பார்க்கலாம் என்று தாயிடம் கூறினார்.

ஆனால் இச்சட்டத்தரணியைத்தான் மகள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தாய் மிகவும் பிடிவாதமாக நின்றார். வயது ஒரு பிரச்சினையே அல்ல, சட்டத்தரணி அதிகப்படியான சொத்துக்களுக்கு சொந்தக்காரரான கோடீஸ்வரர். இளைஞர்கள் எவரிடமும் இவ்வளவு பணம், சொத்து இராது. எனவே இவரையே திருமணம் செய்துகொள் என்று தாய் அறிவுரை வழங்கினார்.

தாயின் அறிவுரைப்படி சட்டத்தரணியை யுவதி மணந்தார். கடந்த ஜூன் 30 ஆம் திகதி வெலிகமவில் திருமணம் நடந்தது. யுவதியின் தகப்பனுக்கு இது தெரியாது. முதல் திருமணத்தைப் பற்றி சட்டத்தரணிக்கு தெரியப்படுத்துவது இல்லை என தாயும், மகளும் இணக்கம் கண்டு இருந்தனர். அதே நேரம் சட்டத்தரணியும் அவரது முதல் திருமணத்தைப் பற்றியோ, பிள்ளைகள் பற்றியோ வெளிப்படுத்தி இருக்கவில்லை.

திருமணம் பொய்களின் அடிப்படையில் நடந்தது. ஆயினும் முதலிரவில் உண்மைகள் வெளிப்பட்டுவிட்டன. இருவரும் கடந்த திருமண வாழ்க்கை பற்றி பரஸ்பரம் சொன்னார்கள். ஆயினும் புதிய மனைவி ஏற்கனவே கன்னி கழிந்தவர் என்கிற விடயம் சட்டத்தரணியை வெகுவாக கவலைப்பட வைத்துவிட்டது.

எனவே அன்றில் இருந்து புதிய மனைவிய்யை கடிந்து வந்திருக்கின்றார். கடந்த இரு மாத திருமண வாழ்க்கையில் யுவதியை ரொம்பவே சட்டத்தரணி இக்காரணத்தை முன்னிறுத்தி கொடுமைப்படுத்தி வந்திருக்கின்றார். எப்போதும் யுவதியை சந்தேகக் கண்கள் கொண்டு பார்த்தார். இவற்றின் பின்னணியில் அடிக்கடி இருவரும் சண்டையிட நேர்ந்தது. சட்டத்தரணி நீலப்படங்கள் பார்க்கின்ற பழக்கத்துக்கு அடிமையானவர். அசாதாரண பாலியல் செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்று யுவதியை வற்புறுத்தி வந்திருக்கின்றார்.

யுவதியை சங்கிலிகளால் பிணைப்பார். யுவதியின் வாயில் பிளாஸ்ரர் ஒட்டுவார். பல்கணி நிலத்தில் கிடத்துவார். துன்புறுத்தி இன்பம் காண்பார். இச்சித்திரவதைகளை பொறுக்கமுடியாத நிலையில் சட்டத்தரணியை அசாதரண செக்ஸிற்கு அழைத்து, கட்டிப் போட்டு, வாயில் துணிகளை அடைந்து, பிளாஸ்ரரை ஒட்டி, வீட்டின் கீழ்ப் பகுதிக்கு வந்து, சுத்தியலை எடுத்துச் சென்று, சாகும் வரை அடித்து இருக்கின்றார்.

பின்னர் சடலத்தை இழுத்துக் கொண்டு வீட்டுத் தோட்டத்துக்கு கொண்டுவந்து போட்டிருக்கின்றார். காருக்குள் சடலத்தை எடுத்துக் கொண்டு போய் எங்காவது வீச வேண்டும் என்பது இவரின் திட்டமாக முதலில் இருந்தது. ஆயினும் பயத்தின் காரணமாக திட்டத்தைக் கைவிட்டார். குளித்து உடுப்பு மாற்றினார். இரத்தக் கறைகளை அகற்றினார். பொலிஸாரை அழைத்தார்.

புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 20 ஆபாச டி.வி.டிகளைக் கண்டு பிடித்தனர். அத்துடன் யுவதியைக் கட்டிவைக்கப் பயன்படுத்தப்பட்டு இருக்கின்ற சங்கிலிகளில் சிலவற்றையும் கண்டுபிடித்தனர். யுவதியின் கையடக்கத் தொலைபேசியில் நீலப்படங்கள் சில சேமிக்கப்பட்டு இருந்தமையையும் கண்டுபிடித்தனர்.

மனைவியின் இரண்டாவது திருமணம் குறித்து இக்கொலைக்கு பின்னர்தான் லெப்டினண்ட் கணவனால் அறிந்துகொள்ள முடிந்தது. மகள் கொழும்பில் வேலை பார்க்கின்றார் என்றே தாய் பொய் சொல்லி வந்திருக்கின்றார்.




# லேடிஸ் ஸ்பெஷல்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

எனக்கு வீட்டில் உட்கார்ந்துகொண்டு மெகா சீரியல் பார்க்கும் பெண்கள் வேண்டாம். வேலைக்குப் போகக் கூடிய, வெளியுலக அனுபவம் இருக்கக் கூடிய பெண்ணைத்தான் நான் திருமணம் செய்து கொள்வேன் என்று சொல்லும் ஆண்கள் இப்போது அதிகரித்துவிட்டார்கள்.

அப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளை வைத்திருக்கும் சிலர், தான் தனது மனைவியின் சமையல் வேலைகளில் உதவிகள் செய்வதை பெருமையுடன் சொல்லிக் கொள்கின்றனர்(றோம்). ஆனால் ஒரு சிலர் காலை 10 மணிக்கு போயிட்டு, அதிகம் கஷ்டப்படாமல் வேலைசெய்து 6 மணிக்கு வீட்டுக்குவந்து விடும் வேலை செய்யும் பெண்களாக இருந்தால் அந்தப் பெண்ணுக்கும் வசதி, எனக்கும் வசதி என்று தன் எதிர்பார்ப்புகளை முன் வைக்கின்றனர். ஏன்னா, வருமானத்துக்கு வருமானமும் ஆச்சு. வீட்டு வேலையையும் அந்த பெண்ணே செஞ்சுக்கலாம் இல்லையா?

நம்மில் எத்தனை பேர், சமைப்பது பெண்கள் வேலை என்று சொல்லிக் கொண்டு கூடமாட ஒத்தாசை செய்வதை பெருமையாகவோ, தியாக மாகவோ நினைக்காமல், இருவருமே வேலைக்குப் போகும் குடும்பத்தில், சமைப்பது என்பதும் கூட இருவரின் வேலையும்தான், என்ற புரிதலை ஏற்படுத்திக் கொள்வோம்? 'இன்றைக்கு நீ என்ன சமைக்கப் போகிறாய்? நான் காய் நறுக்கித் தரேன்' என்பதற்கும், 'இன்றைக்கு நாம என்ன சமைக்கலாம்?' என்பதற்கும் இடையேயான, முகமூடியற்ற, போலித் தியாகங்களில்லா வித்தியாசங்களை நம்மில் எத்தனை பேர் உணர்ந்து கொள்ளத் தயாராக உள்ளோம்.

இன்னும் இது போன்று பல கேள்விகளும், கோரிக்கைகளும் எழத்தான் செய்கின்றன? இவற்றிற்கு எல்லாம் தீர்வுதான் என்ன?

குடும்பம் எனும் சமூக அமைப்பில் தன்னையும், தனது உரிமைகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு பெண் இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் நாடகங் களை நடத்திக் கொண்டிருக்க வேண்டும். அவர்களை நாடகங் களின் மூலமே தான் பெற நினைப்பவைகளை பெறமுடியும் என்ற நிலைக்குத் தள்ளிவிட்டு, சாவகாசமாய் உட்கார்ந்து கொண்டு 'பெண்களின் முக்கிய ஆயுதம் இரண்டு. ஒன்று அழுகை. இன்னொன்று கண்ணீர்' என்று வசனம் எழுதிக் கொண்டிருக்கும் நம்மில் எத்தனை பேர் ஒரு உண்மையான புரிதலுக்குத் தயாராயிருக்கிறோம்?

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பதெல்லாம் ஆண்களுக்கு மட்டும்தான். பெண்களைப் பொறுத்தவரை 'இராமன் இருக்கும் இடமே சீதைக்கு அயோத்தி'யாக இருந்து வருகிறது. மணப் பெண்கள் மகளுக்கு ஒப்பான வர்கள் என்று சொல்லி மாமியார்கள் உரிமை எடுத்துக் கொள்ளும் அதேவேளைகளில், மாப்பிள்ளைகள் இன்னும் மனைவியின் வீட்டின் கேள்வி களுக்கப்பாற்பட்ட எஜமா னர்களாக வளைய வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இன்னும் நம் குடும்ப அமைப்புகளில் நடைபெறும் இதுபோன்ற பல போலித் தனங்களை பெண்ணியத்தின் அடிப்படையிலும், உடலியலின் அடிப்படையிலும் கேள்விப்படுத் தித்தான் ஆகவேண்டும்.


முற்றும்

# எது பெண் விடுதலை?

**குடும்பம் எனும் சமூக அமைப்பில் தன்னையும், தனது உரிமைக ளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு பெண் இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கவேண்டும். அவர்களை நாடகங்களின் மூலமே தான் பெற நினைப்பவைகளை பெற முடியும் என்ற நிலைக்குத் தள்ளிவிட்டு, சாவகாசமாய் உட்கார்ந்து கொண்டு "பெண்களின் முக்கிய ஆயுதம் இரண்டு. ஒன்று அழுகை. இன்னொன்று கண்ணீர்" என்று வசனம் எழுதிக் கொண்டிருக்கும் நம்மில் எத்தனை பேர் ஒரு உண்மையான புரிதலுக்குத் தயாராயிருக்கிறோம்?**



# வேலைக்குச் செல்லும் பெண்களின் சுமை




**வேலைக்கு** செல்லும் பெண்கள் அலுவலகத்திலும், வீட்டிலும் படும் அவஸ்தைகள் ஏராளம். அதையும் தாண்டி பெண்கள் ஒரு பக்கம் அனைத்து துறைகளிலும் சாதித்து கொண்டு இருந்தாலும் மறுபக்கம் குடும்பத்தில் பிரச்சினைகளை எதிர்கொண்டு தான் இருக்கிறார்கள். பெண்களுக்கு கோபம்தான் வருகிறது.

இதை வெளியில் காட்டினால் இவர்களுக்காக நாம் படுகின்ற இந்த அனைத்துக் கஷ்டங்களும் வீணாகிவிடும். வேலைக்காரி வைத்துக் கொண்டோ அல்லது கணவன் குழந்தைகளுக்குத் தன் னிலை விளக்கித் தன்னுடன் ஒத்துழைக்குமாறு செய்வதன் மூலமாகவோ, நமது அலுவலகப் பணி, இல்லறம் என்ற இரட்டை குதிரைச் சவாரியை மிக லாவகமாகச் செய்யமுடியும்.

எல்லா வேலையும் நாம் தான் செய்யவேண்டும் என்று இழுத்துப் போட்டுக் கொண்டுசெய்து, பிறகு எரிச்சல் அடைந்து, குடும்பத்தில் மற்றவர்கள் சந்தோஷத்தையும் கெடுத்துக் கொள்வ்தைவிட வேலை களை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டால், அமைதியும் மகிழ்ச்சியும் தொடரும். இல்லறம் நல்லறமாவது இல்லத்தரசிகளின் கையில் மட்டுமல்ல வாழ்க்கைத் துணைவனின் சகிருதய மனோபாவத்திலும் உள்ளது. சகிருதய மனோபாவத்தை கணவனிடத்தில் கொண்டு வருவது கடினம். ஆண்களுக்கு அவரவர் வேலையே பெரிது.

பெண்கள் சற்று ஆயாசமாக அவர்கள் அலுவலகத்தில் நடை பெறுவதை தெரிவித்தால்கூட, அது சுவாரசியமாக இருந்தால்கூட கணவன்மார்களுக்கு எரிச்சல் ஏற்பட்டு "போதும்மா உன் அலுவ லகப் புராணம்" என்று முடித்து வைப்பதைத்தான் நாம் பார்க்கிறோம். ஆனால் கணவனுக்கு ஒரு கஷ்டம் அலுவலகத்தில் ஏற்பட்டது என்றால் அவனது புலம்பல் அத்தனையும் மனைவி கேட்க வேண்டிய கட்டாயம்!

இந்த முரண்பாடுகளைப் போக்குவது எப்படி. சும்மா விட்டுக் கொடுத்து போவது என்பதெல்லாம் பொய். ஏனெனில் விட்டுக் கொடுக்கும் பொறுப்பு எப்போதும் பெண்கள் தலையிலேயே விழு கிறது. ஆண்கள் தங்கள் வேலை, தங்கள் சம்பளம், தங்கள் நண்பர்கள், தங்கள் பொழுதுபோக்கு என்று சுயநலமிகளாக இருப்பதைத் தவிர்த்தால் அலுவலகம் செல்லும் இல்லத்தரசிகளை ஹிஸ்டீரியா மனநோயிலிருந்து காப்பற்றலாம்!



# பொடுகு தொல்லைக்கு தீர்வு

* வால் மிளகு தூளுடன் பால் சேர்த்து தலையில் தேய்த்து சில நிமிடங்கள் ஊறிய பின் குளித்தால், பொடுகு தொல்லை நீங்கும்.

* வேப்பிலை கொழுந்துடன், துளசி சேர்த்து நைசாக அரைத்துத் தலையில் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளித்தால் பொடுகு தொல்லை நீங்கும்.

* வசம்பை நன்கு பவுடராக்கி, தேங்காய் எண்ணெயில் ஊற வைத்து, அந்த எண்ணெயை தினமும் தலையில் தேய்த்து வந்தால் பொடுகு மறைந்து போகும்.

* எலுமிச்சம் பழச்சாற்றுடன், தேங்காய் எண்ணெய் கலந்து தலையில் தேய்த்து வந்தாலோ அல்லது எலுமிச்சம் பழச்சாறுடன், தயிர் மற்றும் பச்சை பயிறு மா கலந்து தலையில் தேய்த்து சில நிமிடங்கள் கழித்து சீயக்காய் போட்டு குளித்தாலும் பொடுகுநீங்கும்.

* தேங்காய் எண்ணெயில் வெந்த யத்தை சேர்த்து காய்ச்சி, தலையில் தேய்த்து வந்தால், பொடுகு பிரச்சினை நீங்கும்.


*துளசி, கறிவேப்பிலையை அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றுடன் கலந்து தலை யில் தடவி சிறிது நேரம் கழித்து குளித் தால் பொடுகு பிரச்சினை நீங்கும்.

# சமையல் குறிப்பு
## பட்டாணி சாதம்

அரிசி - 2 கப், பட்டாணி - 1 கப், கரட்- 1, சின்ன வெங்காயம் - 100 கிராம், பெரிய வெங்காயம் - 2, தக்காளி-2, பச்சை மிளகாய் -10, நெய்-100 கிராம், பட்டை-2, கிராம்பு - 4, சோம்பு - 1/2 கரண்டி, கறுவா இலை - ஒன்று, ஏலக்காய் - 3, இஞ்சி - சிறிய நெல்லிக்காய் அளவு, பூண்டு - 100 கிராம், மஞ்சள் தூள் - 1 கரண்டி, மல்லித்தூள்- 11/2 கரண்டி, கடுகு - தாளிக்க, உப்பு , எண்ணெய் - தேவையான அளவு மல்லி இலை, கறிவேப்பிலை - சிறிது

### செய்முறை

முதலில் சின்ன வெங்காயம், இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய், பட்டை, கிராம்பு, சோம்பு, ஆகியவற்றை சிறிது தண்ணீர் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ளவும். அடுப்பில் குக்கரை வைத்து நெய்யையும், எண்ணெயையும் ஊற்றி காய்ந்ததும் கடுகு, கறுவா இலை, ஏலக்காய், கறிவேப்பிலை போட்டு தாளித்து அதனுடன் வெங்காயத்தை சேர்த்து வதக்கவும். அதனுடன் தக்காளி சேர்த்து நன்கு வதக்கிய பின் பட்டாணி, கரட், சேர்த்து நன்கு வதக்கி. அதனுடன் அரைத்த மசாலா, மஞ்சள் தூள்,மல்லித்தூள், உப்பு போட்டு நன்கு வதக்கிய பின்பு அரிசி யையும் சேர்த்து ஒரு கிளறு கிளறிய பிறகு இரண்டு கப் அரிசிக்கு 4 கப் தண்ணீர் ஊற்றி ஒரு கொதி வந்ததும் மேலாக சிறிது நெய்விட்டு வேகவைத்து எடுக்கவும்.



# பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-337

**கேள்வி : பெண்களுக்கு மனச்சுமை காரணமாக ஏற்படும் மனநோய் எது?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-22.10.2012

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 337
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 335 இற்கான விடை :-
நம் மீது தன்னம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- ம.விஜயலட்சுமி, சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

337

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

..............................

கையொப்பம் : ..............................


**பெரும்பாலான** ஆண் களுக்கு இந்தக் கவலை இருக்கும். 'எல்லாத்தையும்' நாமதான் ஆரம்பிக்கணும்! உறவின்போது பெரும்பாலான ஆண்களின் மனதில் தோன்றும் சலிப்புதான் இது. நான்தான் தொடங்கவேண்டும். அவங்க பாட்டுக்கு கம்முன்னு இருப்பாங்க, என்னிக்காச்சும் அவங்க ஆரம்பிச்சு வச்சுருக்காங்களா என்ற சலிப்பும் பல ஆண்களிடம் உள்ளது.

ஆனால் இதெல்லாம் இந்த அளவுக்கு குழம்பிப் போக

மாறிவரும் கால மாற்றத்தில் அந்தரங்க உறவுகள் பற்றிய புரிதல் வக்கிரங்களைத் தடுக்கும் - ஒட்டி நின்று பார்த்து. ஆர்வ மிகுதியால் ஒழுக்கம் மீறாமல் தடுக்கும். ஆயி னும் அதை வழங்குவதில் தினமுரசு என்றும் நாகரிகமான முறையையே கடைப்பிடிக்கும்.




# சிக்னல் கிடைத்தால் போதும்...



வேண்டிய பெரிய விடயமில்லை. சாதாரணமா-னவைதான். பெண்கள் எதையும் ஆரம்பிப்பதில் தயக்கம் காட்ட சில காரணங்கள் உள்ளன. நாமே தொடங்கினால் நம்மவருக்கு ஏதாவது ஈகோ பிரச்சினை வந்துவிடுமோ என்று பல பெண்கள் முதல் அடி எடுத்து வைக்க தயக்கம் காட்டுகிறார்களாம்.

நாமே முந்திக் கொண்டுபோனால் நம்மைப் பற்றித் தவறாக நினைத்துவிடுவாரா என்ற சந்தேகமும் பல பெண்களுக்கு எழுகிறதாம். நாம் தான் சரியான 'சிக்னல்' கொடுத்தாச்சே, புரிந்து கொண்டு களம் இறங்க வேண்டியதுதானே என்று பலர் நினைக்கிறார்களாம்.

நான் சரியான முறையில்தான், உறவுக்கு ரெடி என்பதை மறைமுகமாக உணர்த்துகிறேன். அவர்தான் சரியாக புரிந்துகொள்ளாமல் இருக் கிறார் என்று பல பெண்கள் புகார் பட்டியலுடன் உட்கார்ந்திருக்கிறார்கள். பட்டவர்த்தனமாக எப்படி பளிச்சென சொல்வது என்ற தயக்கம் ஏற்படுவதாக பல பெண்கள் சொல்கிறார்கள்.

ஆரம்பிப்பதில் அவர்தான் கில்லாடி, எக்ஸ்பேர்ட், அதனால்தான் நான் மௌனம் காக்கிறேன் என்பதும் பல பெண்கள் சொல்லும் வாதமாக இருக்கிறது.

எனவே காதல் மற்றும் உறவில் ஈகோ என்பது பார்க்கப்படக்கூடாத ஒன்று. யார் ஆரம்பித்தால் என்ன, முடியும்போது அது சிறப்பாக, சந்தோஷமாக இருக்கிறதா என்பதுதான் முக்கியம்.

அந்த நான்கு சுவருக்குள் தனிமையில் இருக்கும்போது இருவருக்கும் இடையே எந்தவித மான தயக்கமோ, வெட்கமோ, கௌரவம் பார்ப்பதோ இருக்கக்கூடாது. ஆடைகளுடன் சேர்த்து அவற்றையும் தூரப்போட்டு விடவேண்டும். அப்போதுதான் உறவு இனிக்கும், சிறக்கும்.

மேலும், வரும் 'சிக்னலை' சரியாக புரிந்து கொள்ள வேண்டியது இருவரின் கடமையுமாகும். சிக்னல் வந்துவிட்டால், அடுத்தவர் வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான். அதை விட்டு விட்டு, இல்லை, இல்லை வாயைத் திறந்து கேட்டால்தான் ஆச்சு என்று வறட்டுப் பிடிவாதமாக இருக்கக் கூடாது.

ஒரு வேளை கணவர் பிசியாக இருந்து கொண்டிருப்பார். அப்போது பார்த்து மனைவி அருகே வந்து கன்னத்தில் முத்தமிடலாம், கொஞ்சலாம். அதல்லாம்தான் உறவுக்கு அழைப்பதற்கான 'சிக்னல்'கள். எனவே பிசியாக இருந்தாலும்கூட அந்த சமிக்ஞைகளை சரியாகப் புரிந்து கொண்டு செயற்பட்டால் பிரச்சினை இல்லை.

மனைவி ஆரம்பிக்கட்டும், அவரே எல்லாவற் றையும் தொடங்கட்டும் என்று நீங்கள் விரும்பினால் அதை தாராளமாக அவரிடம் வெளிப்படையாக சொல்லிவிடலாம். அடுத்த முறை உங்களை அசத்த அவரும் தயாராக இருப்பார்.

மொத்தத்தில் அன்பைக் காட்டவும், அருகாமையை இனிமையாக்கவும் வெளிப்படையான மனதும், செயற்பாடுகளும் முக்கியம் என்பதைப் புரிந்து கொண்டால், 'ஸ்டார்ட்டிங் டிரபுள்' இருக்கவே இருக்காது.



# முதல் பார்வையிலேயே காதல் வந்துவிடுமா?

**ஒருவரது** தோற்றம்தான் நம்மை முதலில் ஈர்க்கும். ஏனெனில் நமது பார்வைக்கு முதலில் தோன்றுவது அவரது உருவம்தான். அவரது அழகு, நடை, உடை, பாவனைகள் இவற்றைத்தான் நாம் முதலில் பார்க்கிறோம். அது பிடித்திருந்தால் பார்த்த மாத்திரத்திலேயே அவர் நம்மை ஈர்த்துவிடுவார்.

அப்படி பிடித்து போய்விட்டால் உங்கள் பார்வை அவரைத் துரத்துவதுபோல ஆர்வத்தோடு பார்க்கும். குளுமை வீசி கவர்ந்தி ழுக்க முயற்சிக்கும். இந்த பார்வையை எதிர்கொள்ளும் ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் அவர்களுக்குள்ளும் உங்களை பற்றிய ஒரு அபிப்பிராயம் எழுவதும் இயல்பே. அதை அவர் எடுத்துக் கொள்ளும் விதத்தில்தான் உங்களது காதல் அரும்புவதும், கருகுவதும் இருக்கிறது.

பார்வையில் பலவிதம் இருக்கிறது. நீங்கள் பார்க்கும் பார்வைக்கும், அவர் பார்க்கும் பார்வைக்கும் பொருள் என்ன என்பதை புரிந்து கொள்வதில் தான் காதலின் வெற்றி இருக்கிறது. ஒருவரை மீண்டும் மீண்டும் ஆவலோடு பார்க்கிறோம் என்றால் அது காதல், காமம், அன்பு எதுவாகவும் இருக்கலாம்.

முதல் பார்வையில் உங்களுக்குள் ஆர்வம் வந்துவிட்டாலும் அது காதலா, இல்லையா என்பதை அறிய சில காலம் பிடிக்கும். காதலில் நேரத்தை பற்றி சிந்திக்க வேண்டியதில்லை. தொடர்ந்து காட்டும் நேசப் பார்வையும், அன்பு புன்னகையும், கனிவான நடவடிக்கைகளும் நீங்கள் விரும்புபவருக்கு உங்கள் மீது காதலை மலரச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்படி பார்வையில் பல நாட்கள் கடந்தாலும் சிலருக்கு 'காதல் இதுதானா? நாம் காதலில் விழுந்துவிட்டோமா' என்பது தெரிவதில்லை. அதைக் கண்டுபிடிக்கவும் வழி உண்டு.

உங்கள் நடவடிக்கையில் முன்பைவிட மாற்றம் ஏற்பட்டிருப்பதாக உணர முடிகிறதா? ஒரு செயலைச் செய்யும்போது அம்மா, அப்பா உள்பட அருகில் இருப்பவர்கள் தலையில் தட்டி 'உனக்கு என்ன ஆச்சு, ஒழுங்கா வேலையப் பாரு' என்று சொல்லித் தெரியவேண்டிய அளவில் உங்கள் கவனம் சிதறுகி றதா? அப்படியானால் அந்த நேரத்தில் உங்கள் சிந்தனையை யார் ஆக்கிரமித்திருக்கிறாரோ அவர் மீது உங்களுக்கு விருப்பம் வந்துவிட்டது என்று பொருள். அவரது பார்வைதான் உங்களுக்குள் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதும் உண்மை.

காதல் தவறென்றும், அதை ஒரு பலவீனமான எண்ணமாக கருதுபவர்களும் உண்டு. அவர்கள் பெற்றோரின் தீவிர கண்காணிப்பில் வளர்ந்தவர்களாகவும், பாச உணர்ச்சி அதிகம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

'மிகுந்த பாசம் காட்டி வளர்க்கப்படுபவர்களே எளிதில் காதலில் விழுவார்கள்' என்பார் உளவியலின் தந்தை பிராய்டு. இப்படிபட்டவர்கள் தான் முதல்பார்வையில் தங்களுக்குள் காதலை அரும்ப விட்டுவிட்டு, அப்பா கண்டிப்பாரோ, எதிர்ப்புகளை சந்திக்க வேண்டி இருக்குமோ, காதலிப்போமா, வேண்டாமா? என்று குழப்பிக் கொண்டிருப்பார்கள்.

இவர்களுக்கு தன்னை விரும்புபவர் பார்க்கும்போது சந்தோசமாக இருந்தாலும், கண்டும் காணாமலும் இருக்க முயல்வார்கள். அவர் தன் அருகில் இருந்து நீங்கியதும் அவரைத் தேடி விழிகளை அலைபாய விடுவார்கள். தங்களுக்குள் தாமே கண்ணாமூச்சி ஆடிக்கொள்வதுபோல் இருக்கும், இவர்களது நினைப்பும், நடத்தையும். எது, எப்படியோ முதல் பார்வையில் காதலில் விழுந்தவர்கள் ஏராளம். அது சரியா? தவறா? என்பது அவர்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். மற்றவர்களுக்கோ சரியென்றால் சரி, இல்லையென்றால் இல்லை.




# வேட்கை

**ஒரு** பெண், ஒரு மாத காலத்தில், இயல்பாகவே உடலுறவு கொள்ளவேண்டும் என்ற வேட்கை அதிகம் உள்ள குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட சில நாட்கள் உள்ளன. இத்தகைய உடலுறவு கொள்ள வேண்டும் என்ற வேட்கை அதிக மாக உள்ள கால கட்டத்தை. அவள் கருப் பையில் ஊறும் பெண்மைச் சுரப்பி நீர் ஏற்படுத்தித் தருகின்றது.

பெண்ணின் கருப்பையி லிருந்து, மாதம் ஒரு நாள் கரு முட்டை ஒன்று வெளியாகின்றதல்லவா? அந்தக் கால கட்டத்தில் ஒரு பெண்ணுக்கு உடலுறவு கொள்ளவேண்டும் என்ற வேட்கை இயல்பாகவே அதிக மாக இருக்கும். அந்தக் கால கட்டத்தில், எந்தப் பெண்ணுமே உடலுறவுகொள்ள விரும்புவாள். பெண் கருமுட்டை வெளியாகும் காலத்தில், அவள் ஓர் ஆணோடு உடலுறவு கொண்டால், அந்த உடலுறவு நேரத்தில், ஆணிடமிருந்து வெளியாகின்ற ஆண் விந்தில் உள்ள கரு முட்டையும் இணைந்து குழந்தை உருவாகிவிடும்.

ஆம், உயிரின உற்பத்திக்காக உடலுறவை ஏற்படுத்திய ஆண்டவன், ஒரு பெண்ணிடம் இத்தகைய நிலையை உருவாக்கி, இன உற்பத்தியில் அவளைச் சிக்க வைக்கச்செய்த சதிதானோ இது!

# உங்களை நேசிக்கும் பெண், கண்டுபிடிப்பது எப்படி?



**உங்களை** நேசிக்கிற பெண் நேருக்கு நேர் பார்க்கமாட்டாள். கடைக்கண்ணால் நோக்குவாள். நீங்கள் பாராத சமயமாய்ப் பார்த்து மகிழ்வாள். உங்கள் மீது அக்கறையற்றவள்போல் பாசாங்கு செய்வாள். அவசியமில்லாத நிலை யிலும் அளவுக்கு மீறி இழுத்து போர்த்திக் கொள்வாள்.

நீங்கள் ஏதாவது கேட்டு வைத்தால் புன்முறு வலுடன் தலை குனிவாள். பொருளற்ற வார்த்தை களை உதிர்ப்பாள். ஆனால், உங்கள் அருகாமையை விரும்புவாள் மணிக்கணக்கில் மௌனமாய் அமர்ந்திருப்பாள்.

அவள் தொலைவில் உங்களை கண்டதும் தனது தோழிகளிடம் அவர் என்னைப் பார்த்தானா சொல்றீங்.. என்று கேட்டு உங்கள் கவனத்தை ஈர்ப்பாள். உங்களை போகவிட்டு சிரிப்பாள். உங்கள் முன்னிலையில் யாருடைய குழந்தையையும் எடுத்துக் கொஞ்சுவாள், முத்தமிடுவாள்.

அவளுடைய உடம்பினை ஒவ்வோர் அங்கமும் உங்கள் மீது அவள் கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்தும்.

ஏதாவது ஒரு சாக்கு வைத்துக்கொண்டு உங்கள் வீட்டுக்கு வருவாள். தன்னை விஷேசமாய் அலங்கரித்துக் கொண்டிருப்பாள். அவளுடைய கைக்குட்டை சூடிய மலர், மோதிரம் போன்ற சின்னச் சின்னப் பொருள்களில் ஒன்றை உங்களுக்கு தரும்படி விரும்பிக் கேளுங்கள். முதலில் சற்றுத் தயங்கினாலும் பிறகு மறுக்க மாட்டாள்.

அவளுக்கு நீங்கள் வாங்கிக் கொடுத்த ஆடை, அணிகளை எப்போதும் பிரியமாய் அணிந்து கொள்வாள். ஒரு பெண்ணின் காதலை உறுதி செய்துகொள்ள இப்படி அநேக வழிகள்.






# கிண்ணத்தை நோக்கி

**இருபதுக்கு** இருபது 2012 முதல் அரை இறுதி ஆட்டத்தில் டில்ஷான் உட்பட இலங்கை அணியின் அநேகமானனோர் வேகமாக ரண் குவிக்கக் கஷ்ரப்படுகிறார்கள் என்பது புரியாத புதிராக இருந்தவேளை, அது அப்படித்தான் என்பது போல பாகிஸ்தானும் பெரும் துன்பப்பட்டுத் தோற்றே போய்விட்டார்கள். இப்பிராந்தியத்தைச் சேர்ந்த அணிகளாக இரண்டும் இருந்ததால், மந்தமான ஆட்டத்துக்கு இருதரப்புமே புதிய காரணங்கள் எதையும் கூறமுடியாது. அதேவேளை வீழ்த்தப்பட்ட மொத்த விக்கெட்டுக்கள் பத்து. இதில் பாகிஸ்தான் 3 விக்கெட்டுக்களையும் இலங்கை 5 விக்கெட்டுக்களையும் சுழல் பந்துவீச்சின் மூலம் பெற்றுக் கொண்டன. அப்படியானால் சுழல் பந்துவீச்சுக்கு இலகுவாக முகம் கொடுக்கக்கூடிய இப்பிராந்திய வீரர்களையே சுழல் பந்துவீச்சு கட்டிப் போட்டுவிட்டது என்று சொல்லலாமா?

இன்னொருபுறம் இந்த ஆட்டத்தில் திருப்புமுனை என்று சொல்வதற்குப் பெரிதாக எதுவுமில்லை என்றாலும், ஆட்டத்துக்கு முந்திய மஹேலவின் மதிநுட்பம் இந்த வெற்றிக்கு வழிவகுத்தது என்று சொல்லலாம். அதாவது சின்னப் பையன் அகில தனஞ்ஜயவிற்கு ஓய்வுகொடுத்து ரங்கன ஹேரத்தை அணிக்குள் கொண்டு வந்தது அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாயிற்று. அதேபோல் மறுபுறம் பாகிஸ்தான் சஹீட் அப்ரிடிக்கு ஒய்வுகொடுத்து அப்துல் ரசாக்கை அணிக்குள் கொண்டு வந்திருந்தால் சில வேளை முடிவில் மாற்றம் ஏற்பட்டிருக்குமோ என்று எண்ணுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஏனெனில் இருவருமே சகல துறை வீரர்கள், அதோடு அப்ரிடி துடுப்பாட்டத்தில் எங்கேயும் சோபிக்கவில்லை. இதைவிட இந்த அரையிறுதி ஆட்டத்தில் தலையைக் குழப்பிக் கொள்ளும் வகையில் எதுவுமில்லை. (சில அணிகளில் சிலர் இடம் பெறாவிட்டால் அணியே இல்லை என்கிற மாயை எப்போது மாறப் போகிறதோ).



இரண்டாவது அரையிறுதி ஆட்டம் அவுஸ்திரேலியா எதிர் மே.இந்தியத் தீவுகளுக்கு இடையே நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் வெஸ்ட் இன்டீஸ் விஸ்வரூபம் எடுத்ததே முக்கிய செய்தி. இவர்களிடம் என்ன எதிர்பார்க்கப்பட்டதோ – குறிப்பாக கெய்ல், மற்றும் பொலார்ட் – அதனைச் செய்தார்கள். நம்பிக்கையோடு களம் இறங்கிய அவுஸ்திரேலியாவின் கனவுகள் தகர்ந்தன. மிக நீண்ட இடைவெளியின் பின் ஒரு கிண்ணத்தைப் பெறும் சந்தர்ப்பத்தை நோக்கி வெஸ்ட் இன்டீஸ் முன்னேறியது. அதேவேளை இறுதிப்போட்டியில் இவர்களைச் சந்திக்கப்போகும் இலங்கை அணிக்கும் நிம்மதியற்ற இரவுகளைக் கொடுத்துவிட்டது.

# கனவு தகர்ந்தது

**இருபதுக்கு** இருபது 2012 இறுதிப்போட்டி இலங்கை, வெஸ்ட் இன்டீஸ் அணிக்கு இடையில் நடைபெறுவதற்கு முன்னதாகவே இரு அணிகளுக்கும் தனித்தனியான பெரிய தொரு ஆதங்கம் இருந்தது. வெஸ்ட் இன்டீஸ் 1983 உலகக்கிண்ண ஒரு நாள் போட்டியின் இறுதிப்போட்டியில் இந்தியாவைச் சந்தித்து தோல்விகண்டிருந்தது. அதன்பின் 1996, 2009ஆம் ஆண்டு அரையிறுதிவரை முன்னேறியது. இதைவிட 1979ஆம் ஆண்டின் உலகக் கிண்ணத்தின் பின் வேறு எதையும் பெறவில்லை.

மறுவளமாக இலங்கை 2007, 2011 உலகக்கிண்ணப் போட்டிகளில் இறுதிப்போட்டியில் தோல்விகண்டது. மேலும் 2009 இருபதுக்கு இருபது இறுதிப் போட்டியிலும் தோல்வி கண்டது. எனவே நான்காவது முறையில் கிண்ணம்வெல்லும் நம்பிக்கை இலங்கைக்கு இருந்தது. ஆனால் அந்தக் கனவைத் தகர்த்தது 33 வருடங்களின் பின் மேற்கிந்திய அணிகள் சாதித்தது. இலட்சக்கணக்கானோர் பார்த்த ஆட்ட விவரணம் தேவையற்றதாயினும், இலங்கைக்குக் கிண்ணம் நிச்சயம் என்ற ஆட்டத்தில் பரிதாபதாகத் தோற்றது ஏன் என்கிறபோது பல கேள்விகள் எழுகின்றன. முதலாவது, அனுபவ வீரரான ரங்கன ஹேரத் ஒதுக்கப்பட்டு, சிறுபையன் தனஞ்ஜய இந்தப்பெரிய களத்திற்கு கொண்டு வரப்பட்டது ஏன்?

அடுத்தது. மார்லன் சாமுவெல்ஸ் மலிங்கவின் பந்து
வீச்சைப் பின்னி எடுக்க (4-54-0-0) தொடர்ந்தும்
அவரையே நம்பி அவலப்பட்டது ஏன்?
அந்தவேளையில் கை கொடுத்திருக்கக்கூடிய
திஸரபெரேராவை
பயன்படுத்தும் எண்ணம்
ஏற்படாமல் போனது ஏன்?
அதேவேளை மஹேல
விற்கு இலகுவில்
கைவராத ரிவேஸ்



சுவீப் பாணியைக் கையாண்டு அநியாயமாக விக்கெட்டைப் பறிகொடுத்தது ஏன்? இவ்வாறான கேள்விகளுக்கு மஹேல விடை அளித்தால் நிச்சயம் என்றிருந்த கிண்ணம் கைதவறிப் போனமைக்கு ஏதாவது நியாயம் கற்பிக்கமுடியும். இல்லாவிட்டால் மே.இந்தியத் தீவுகள் அணி இலங்கைக்குத் துடைத்தெறிந்த அவலத்துக்கு எந்தக் காரணமும் பொருத்தமற்றதாகவே இருக்கும்.

இதேவேளை கிண்ணத்தை வென்ற மே.இந்தியத் தீவுகள் அணியின் திறமை மிக உயர்ந்தே இருந்தது. அவர்களது தன்னம்பிக்கை, விடாமுயற்சி அவர்களுக்குக் கிண்ணத்தை வென்று கொடுத்தது. குறிப்பாக மார்லன் சாமுவெல்ஸ் என்ற அற்புதமான வீரரின் செயற்பாடு இங்கு சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

# எதிர்பாராதது



**இங்கிலாந்துக்கு** எதிரான சுப்பர் 8 ஆட்டத்தில் இலங்கை அணியின் தலைவராகக் களம் இறங்கியவர் குமார் சங்கக்காரா. இதேவேளை மஹேலவும் அணியில் இடம் பெற்றிருந்தார். இது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஆனால் காரணம் வேறானது. அதாவது மெதுவான ஓவர் விகிதம் என்ற வகையில் தண்டிக்கப்பட்ட மஹேல, அடுத்த ஆட்டத்திலும் தண்டிக்கப்பட்டால் முக்கியமான பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் ஆடுவதில் தடைசெய்யப்படுபவார். இதனைக் கவனத்திற்கொண்டே ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகத் தான் விலகிக் கொண்டு சங்கக்காரவை அணித் தலைவராக்கினார்.

ஆனால் இது விளையாட்டு விதிகளுக்கு முரணானது என்றே கருதப்படுகின்றது. அதாவது ஒருவகையில் ஐ.சி.சியின் காதில பூ சுற்றிய கதையாக மாறிவிட்டது. ஆனால் மஹேல பேசும்போது. நான் எந்த அணிக்கும் எதிராகச் செயற்படவில்லை, ஒரு வீரருக்கோ, தனி நபருக்கோ எதிராகச் செயற்படவில்லை. ஒரு துடுப்பாட்ட வீரரை மாற்றுவதுபோல, அல்லது பந்துவீச்சாளரை மாற்றுவதுபோல அணித் தலைமையை மாற்றிக் கொண்டோம். முக்கியமான சந்தர்ப்பத்தில், எனது தலைமைச் சந்தர்ப்பம் பாதிக்கப்பட்டு ஆடமுடியாது நிலை ஏற்டக்கூடாதென்பதற்காகவே இதனைச் செய்தேன் என்று கூறியிருக்கிறார். மேலும் இப்படி ஒரு மாற்றம் என் மனதில் இருப்பது பற்றி ஏற்கனவே இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ருவட் புரோட்டுடனும் கலந்துரையாடி இருந்தேன் என்ற கூறியுள்ளார்.

இந்த விடயம் பற்றிச் சாதக பாதகமான கருத்துக்கள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எல்லா நாணயத்துக்கும் இரண்டு பக்கம் உண்டென்பது போல, இந்த விடயத்துக்கும் இரண்டு பக்கக் கருத்துக்கள் வெளிவருகின்றன.

ஆனால் மஹேல எந்த விதி முறைகளையும் மீறாமல் புத்திசாலித்தனமாக முடிவொன்றை எடுத்தது விவேகமானதென்றே சொல்லத் தோன்றுகின்றது. பொதுவாகவே சர்வதேச கிரிக்கெட்டின் சட்டதிட்டங்கள் மிகக் கடுமையானவை. சட்டதிட்டங்கள் கடுமையாகக் கடுமையாக அதிலிருந்து தப்பும் வழிகளும் புதிதாகத் தோன்றுமல்லவா? அதுதான் இது. இதில் ஒழுக்க விழுமியங்கள் பற்றிப் பேசுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை.



# தட்டுகிறார்கள் திறக்கப்படுமா?



**சுப்பர்** எட்டு ஆட்டங்களுக்கு அப்பால் இந்திய இருபதுக்கு இருபது அணியைக் கொண்டு செல்ல முடியாமல்போன அணித் தலைவர் டோனியின் மீது விலகிப்போ என்ற குரல்கள் ஆக்ரோஷமாக மேலெழும்புகின்றன. இதற்கான காரணங்களை ஒன்றன்பின் ஒன்றாக பட்டியலிடுகின்றன ஊடகங்கள். அதில் முக்கியமானது நான்கு விக்கெட்டுக்களை பன்னிரண்டு ரன்கள் மட்டும் கொடுத்து அபாரமாக ஆடிய ஹர்பஜன் சிங்கை ஒதுங்கியது ஏன் என்ற கேள்வி. சுழல் பந்துவீச்சாளர்கள் சாதிக்கக் கூடிய களத்தில் ஹர்பஜன் ஒதுக்கப்பட்டது ஏனென்ற கேள்வி பெரிதாக எழும்பியுள்ளது.

இதற்கப்பால் மொத்தம் ஐந்து ஆட்டங்களில் டோனி அடித்த அதிரடி ஓட்ட எண்ணிக்கை 23. ஷேவாக், கம்பீர் எதுவுமே செய்ததாக இல்லை. இன்னொன்று விராட் கோஹ்லி தவிர வேறெந்த வீரரும் ஐம்பது என்ற எண்ணிக்கையை எட்டிப் பார்க்கவில்லை.


இப்படியாகப் பல குற்றச் சாட்டுக்கள் டோனி மீது குவிக்கப்படுகின்றன. களைத்துப்போன ஷாகீர்கான் அணிக்குத் தேவையா என்ற கேள்வியும் எழுகின்றது. எனவே மிகுந்த அதிருப்திக்குள்ளான அணியாக இந்திய அணியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

டோனியை மட்டுமல்ல, இன்னும் பலரும் இந்திய அணியில் இருந்து ஓய்வு என்று ரவிசாஸ்திரி போன்றோரின் குரல்கள் எழும்பும்வேளையில் இன்னும் ஒரு கேள்வி எழுகிறது. இளைஞர்களான அம்பாத் திராயுடு முரளி விஜய், றொபின் உதப்பா, அஜின்சியா ராஹ்னே மற்றும் இஷாண்ட் சர்மா, உமேஷ்யாதேப் போன்ற இன்னும் பலர் ஏன் கண்டுகொள்ளப்படவில்லை என்ற கேள்விக்கணை டோனியை நோக்கி வேகமாகப் பாய்கிறது. இதற்கு இவர் என்ன பதில் சொல்லப் போகிறார். மேலும் மனோஜ் திவாரி. டிண்டா போன்றவர்களையே பார்வையாளர் அந்தஸ்தில் வைத்திருந்த டோனி மிகத் தைரியமானவர். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அவரா பயப்படுவார்? எல்லாம் போக தெரிவாளர் சபையில் இருந்து ஸ்ரீகாந்த் காலம் முடிந்து வெளியேற, றொஜர் பின்னி அந்தப் பதவியை ஏற்கப் போகிறார். இனியாவது விளம்பரக் கதாநாயகர்களாக வலம்வரும் வயதான வீரர்கள் ஒதுங்கிக்கொள்ள வாசலில் நின்று கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் இளைய தலைமுறைக்கு கதவு திறக்குமா?



"கோழையே, சுடு! நீ சுடுவது 'சே'வை அல்ல ஒரு சாதாரண மனிதனைத் தான்!" இதயம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இதுதான்!

மணி 1.10மணிக்கு மனிதகுல விடுதலைக்காகத் தன் வாழ்நாளெல் லாம் போராடிய மாமனிதனை நோக்கி துப்பாக்கி திறக்கிறது. ஒன்பது தோட்டாக்களில் ஒன்று, அவரது இதயத்துக்குள் ஊடுருவியது. இனம், மொழி, தேசம் என எல்லை கள் கடந்து பாடுபட்ட உலகின் ஒரே வீரன் இதோ விடைபெறுகிறான்.



தன்னை நிற்க வைத்துச் சுடுமாறு 'சே' கேட்க, அதை 'மரியோ ஜேமி' அலட்சியப்படுத்துகிறார். "கோழையே, சுடு! நீ சுடுவது 'சே'வை அல்ல ஒரு சாதாரண மனிதனைத்தான்!" இதயம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இதுதான்!

மணி 1.10மணிக்கு மனித குல விடுதலைக்காகத் தன் வாழ்நாளெல்லாம் போராடிய மாமனிதனை நோக்கி துப் பாக்கி திறக்கிறது. ஒன்பது தோட்டாக்களில் ஒன்று, அவரது இதயத்துக்குள் ஊடுருவியது. இனம், மொழி, தேசம் என எல்லைகள் கடந்து பாடுபட்ட உலகின் ஒரே வீரன் இதோ விடை பெறுகிறான்.'சே' இறந்த தகவல் உலகத்தை உலுக்கியது.





மக்கள் எழுப்பிய குவேராவின் சிலையை இராணுவத்தினர் உடைப்பதும் மக்கள் மீண்டும் சிலையை நிறுவுவதுமாக தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு இருந்தது.

santa_clara என்ற இடத்தில்

பங்களிப்புக்கு தலைவணங்கி போற்றுகின்றனர்.


குவேராவின் நினைவாக நிகழ்வு களும், கியூபாவின் அரசு தரப்பில் இருந்து வெளிவரும் நாளேடான 'கிரான்மா' வில் நினைவஞ்சலியாக பல பக்கங்கள் ஒதுக்குவதும் ஒவ் வொரு வருடமும் நடக்கின்றன. ஒவ்வொரு வருடமும் குழந்தைகள் இயக்கமான 'பயனீயர்ஸ்' என்ற இயக்கத்தில் ஆறு வயது சிறுவர் கள் சேர்ந்து சத்தியப் பிரமாணம்


# மாமனிதன் சே குவேரா

ஒக்டோபர் 18. கியூபா ஹவானா-வில் வரலாறு காணாத கூட்டம் 'சே'வின் அஞ்சலிக்காக காஸ்ட்ரோவின் தலைமையில் கூடியிருந்தது.

அவர்கள் முன் தலைமை உரையாற்றுகிறார் காஸ்ட்ரோ. "வரலாற்றின் மகத்தான பக்கங்களில் இடம்பெற்று விட்ட 'சே' நம் காலத்தின் ஒப்பற்ற தலைவர். கியூபா மக்கள் அந்த மகத்தான தலைவனை முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண் டும்" என வேண்டுகோள் விடுக்கிறார்.

அந்த மகத்தான தலைவனை முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டும்" எது எப்படி ஆயினும் சே குவே ராவை இன்றும் போற்றும்





மக்கள் அவனைப் பற்றி இழிவாக வெளிவரும் செய்திகளை முற்றிலுமாகப் புறக்கணிக்கிறார்கள் என் பதே உண்மை. சே குவேரா வின் சிந்தனையும் இலட்சி யங்களும் இன்றைக்கும் பொருந்தக் கூடியவை. இன்றும் மக்களில் பலர் சுதந்திரத்திற் காகக் கதறுகின்றனர் என்று மிட்டராண்ட் கூறினார்.

இன்றும் மக்களில் பலர் சுதந்திரத்திற்காகக் கதறு கின்றனர். குவேராவுக்கு மரணதண்டனை நிறை வேற்றிய 'லா ஹிகுஏரா' (La Hihuera) என்ற இடத்தில்

மக்கள் எழுப்பிய குவேராவின் சிலை ஆர்ஜென்டீனாவின் அதிபர் ஃபிடெல் காஸ்ட் ரோவை கடுமையாக எதிர்த் தாலும் சே குவேராவின் உருவம் பதித்த தபால் தலையை வெளியிட்டார். அப்போது அவர் குவேராவை ஒரு உலகத்திற்கே உரிய நபர் என்று புகழ்ந்தார்.

குவேரா உண்மையில் இறந்தது ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதியாகயிருப்பினும், கியூபாவில் இன்றும் ஒவ் வொரு ஒக்டோபர் 8ஆம் திகதியன்று சே குவேராவின் நினைவு நாளாக அவரது

எடுத்துக் கொள்கின்றனர். அப்போது அவர்கள் சுயநல மில்லாமல் சமுதாயத்திற்கே தங்களை அர்ப்பணிக்க உறுதி எடுத்துக் கொள்கின்றனர்.

அலைடா குவேரா மார்ச் கூறியது போல், ஒருவன் தன் வாழ்க்கையாலும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியதாலும் பல்லாயிரக் கணக்கானவர்களை தன் வழிப் படுத்தினால் அவன் என்றைக் குமே சாவதில்லை. கம்யூனிஸம் என்ற தீ அதன் முழுதாக்கத்தை இழந்த போதும் புரட்சிக்கும் அதன் கவர்ச்சிக்கும் சே குவேரா ஒரு சின்னமாக விளங்கினார் என்று கூறினார். எப்பேர்ப்பட்ட உண்மை இங்கு சாதிச் சண்டை களிலும், மதப்பாகுபாடுகளிலும், எல்லைச் சண்டைகளிலும் எண்ணற்ற 'மனிதர்கள்' தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டி ருக்க நமது புரட்சியாளனோ எந்த மண்ணிலோ பிறந்து எந்த மண்ணிலோ போராடி எந்த மண்ணிலோ உதிர்ந்தவன்.

ஒருவன் தன் வாழ்க்கையாலும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியதாலும் பல்லாயிரக்கணக்கானவர்களை தன் வழிப்படுத்தினால் அவன் என்றைக்குமே சாவதில்லை 'சே'தான் இந்த யுகத்தின் மனித வடிவமாகத் திகழ்கின்றார்.

**முற்றும்**

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 491

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| ■ | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | ■ | 24 |
| 25 | ■ | 27 | ■ | 29 | ■ |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **22.10.2012** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 491
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 489- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நி | 2 யூ | 3 யோ | 4 ர் | 5 க் | ■ |
| 7 ய | ■ | 9 கி | ■ | 11 கு | 12 வி |
| 13 தி | 14 ப | ■ | 16 க | 17 த | 18 ர் |
| ■ | 20 மு | 21 ல் | 22 கி | ■ | 24 க |
| 25 வா | 26 க | 27 வி | 28 ண | 29 ர் | ■ |
| 31 சி | 32 ல | ■ | 34 ண் | ■ | ■ |

**இடமிருந்து வலம்**

01. ஒரு மணித்தியாலயம் 60 நிமிடம் என்று நிர்ணயித்த வர்கள்.
07. இது உயர கோன் உயர்வான்.
10. ஒரு பண்.
14. இராக்கதன் அல்லது பிசாசு.
17. அழகு அல்லது நீர் (திரும்பியுள்ளது)
19. உலகில் உள்ள பல கணிப் பொறிகளை ஒன்றாக்கி இணைப்பது இவ்வாறு அழைப்பர்.
31. இராசிகளில் ஒன்று.
35. குலம் அல்லது இனம்.

**மேலிருந்து கீழ்**

01. குழப்பான உணவு அல்லது சர்க்கரை.
02. தப்பித்த குற்றவாளிக்கு நீதிபதி இது பிறப்பிப்பார்.
04. வளையம் உள்ள கிரகங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது)
05. உடம்பில் அடிபட்டால் உண்டாவது. (குழம்பியுள்ளது)
06. கல்நார் (குழம்பியுள்ளது)
15. மன மயக்கத்தை இப்படியும் அழைப்பர்.
19. சந்திரன் அல்லது கற்பூரம்.
29. உயரமான கோபுரங்களில் ஒன்று.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.489 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ம.பானுஜா, பிரதான வீதி, காலி.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. து.சங்கவி, உப்புக்குளம், மன்னார்.
02. க.சிவானந்தம், முள்ளியவளை, முல்லைத்தீவு.
03. கு. ஆதர்ஷா, அக்கரைப்பற்று, திருகோணமலை.
04. எஸ்.நிதர்சன், தர்ஹா நகர்.
05. சி.மயூரி, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை - 06.
06. த. நளபாலசிங்கம், பூவரசங்குளம், வவுனியா,
07. மா. அங்கயன், மாதகல், யாழ்ப்பாணம்.
08. அ.துஷாந்தினி, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
09. த.வந்தனா, ஆலங்கேணி, கிண்ணியா.
10. கு.ரமேஷ், அல்வாய் வடக்கு, அல்வாய்.



இராமசாமி ரமேஷ், அளம்பில்

வறுமைக்குள்ளேயும் இவனது போராட்டம் மிகுந்த வாழ்வில், இலக்கியத்துக்காகவும் தன் வியர்வைத்துளிகளை சிதறிக் கொண்டிருந்தான்.
ஒரு எழுத்தாளன் அடையாளப்படுத்தப்படுவது அவனது எழுத்துக்கள் நூலுருப்பெறும் போது தான்!

# வலிகளின் சன்மானம்

*ஆம்! வலிகளையும், சுமைகளையும், தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலக பயணம் இங்கே தொடர்கின்றது.*

இளைய வயதிலேயே இலக்கியத்தில் நம்பிக்கையான வரவென, எழுத்துலக ஜாம்பவான்களிடம் மோதிரவிரல் குட்டு வாங்கியவன் நட்சத்திரன்.

சாதீயத்தை சரித்துக் கட்டவும், இனபேதத்தை இல்லாதொழிக்கவும், பெண்ணியத்தின் பெருமை பாடவும் இலக்கியத்தில் இவனால் பல அதிகாரங்கள் எழுதப்பட்டன.

இன்றுள்ளவர்களில் சிலருக்கோ எழுத்தென்பது பொழுதுபோக்கு; இன்னும் சிலருக்கு வியாபாரம்; ஆனால் இவனுக்கோ அதுவொரு தெய்வீகவரம். எழுத்தையும்



இலக்கியத்தையும்நேசித்தான். இதனாலேதான் நட்சத்திரனுக்குள் இருக்கும் எழுத்தாளன் கண்டு கொள்ளப்பட்டான். வீட்டிலே தேநீர் குடிக்க பணம் இருக்காது. ஆனால், இவன் கையில் எப்படியாவது அந்த வாரம் வெளிவந்த பத்திரிகை படபடக்கும். வறுமைக்குள்ளேயும் இவனது போராட்டம் மிகுந்த வாழ்வில், இலக்கியத்துக்காகவும் தன் வியர்வைத்துளிகளை சிதறிக் கொண்டிருந்தான்.

இன்றும் அவன் எதிர்ப்பார்ப்போடு பதிப்பகத்தை நோக்கிப் பயணிப்பது, ஒரு பலநாள் கனவை நிறைவேற்றத்தான். பல கவிதை, சிறுகதைகளை படைத்துவிட்டவனுக்கு வருத்தம் இருக்கத்தான் செய்தது. எத்தனை ஆக்கங்களை பிரசவித்திருந்தாலும், ஒரு எழுத்தாளன் அடையாளப்படுத்தப்படுவது அவனது எழுத்துக்கள் நூலுருப்பெறும் போதுதான்! அந்த மனவருத்தம் நீண்ட நாட்களாக இவன் நெஞ்சுக்குள் தீயாய் புகைந்து கொண்டிருந்தது.

இந்த நேரத்தில்தான், அண்மையில் ஒரு பத்திரிகையில் குறித்த பதிப்பகத்தார் ஒரு விளம்பரம் செய்திருந்தார்கள். அது நட்சத்திரனின் பார்வையில் சிக்கியது. இறந்துபோன தன் தாயின் நினைவாக எழுத்துருவாக்கப் போட்டியொன்றினை அந்த லக்ஸ்மி பதிப்பகம் அறிவித்திருந்தது. எழுத்தாளர்கள், படைப்பாளிகள் தமது சிறந்த படைப்புக்களின் கையெழுத்துப் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும். அவற்றில் தெரிவாகும் ஒரு படைப்பு நூலாக அப் பதிப்பகத்தினரால் இலவசமாக அச்சிடப்பட்டு அதை எழுதியவருக்கு வழங்கப்படும். இந்த சங்கதியைக் கண்ணுற்றதிலிருந்து நட்சத்திரனுக்கு சரியான தூக்கமில்லை. உணவுக்கும்கூட விருப்பமில்லை. தன்னிடம் குவிந்து இருந்த சிறுகதைகளில் மிகவும் சிறந்த, தரமானதான பன்னிரெண்டு கதைகளை தெரிந்து அவற்றுக்குத் தன் வாழ்க்கையின் பாடுகளை நினைவுகூற 'வலிகளின் சன்மானம்' எனத் தலைப்பிட்டு, கீழே சிறுகதைத் தலைப்பு எனவும் செம்மைப்படுத்தி, பதிப்பகத்தார் சொன்ன நாளான இன்று புறப்பட்டதன் உள்நோக்கம் இதுதான்.

தன் கையெழுத்தும், கதைகளின் தரமும் கண்டிப்பாய் இந்தப் போட்டியில் தெரிவாகும் என்ற நம்பிக்கை, நிலத்தில் ஆழவிழுந்த விழுதாய் அழுத்தமாக பதிந்திருந்தது. இருந்தாலும், இடைக்கிடையில் எங்கிருந்தோ சிறுசலனமும் எட்டிப் பார்க்கத் தவறவில்லை.

"ஏய் நட்சத்திரா!! உன் எதிர்பார்ப்பு ஏமாற்றமானால்..." சாத்தானின் குரலாய் அவனது மனச்சாட்சியும், நம்பிக்கையோடு நகர்கின்றவனை சீண்டிக் கொண்டிருந்தது.

தன்மீது நம்பிக்கை கொள்ளாதவன், எந்தவொரு தேர்விலும் முன்னேறமாட்டானென, முன்னோர் சொல்லி வைத்ததை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டான். உடலையும் உள்ளத்தையும் தேர்வுக்கு தயார்ப்படுத்தியவன், தூரத்தே தெரியும் 'லக்ஸ்மி' பதிப்பகத்தை கண்ணுற்றதும், தன்னில் ஒரு தடவை பார்வையால் மேய்ந்தான். செய்வது கடற்றொழில் தான்!

ஆனாலும், ஆண்மைக்கும் அழுகுக்கும் பஞ்சமில்லாத மிடுக்கான வாலிபன். அடுத்தவரை சுடாத வார்த்தைகளும் பழக்க வழக்கங்களும் இவனுடையது. நேர்த்தியான தோற்றத்தோடு பதிப்பகத்தின் வாசலை அண்மித்த நட்சத்திரன், உள்ளே நோட்டமிட்டான். கிட்டத்தட்ட பதினைந்து பேர் இருக்கலாம். ஆண்கள், பெண்களென அனைவரின் விழிகளிலும் எதிர்பார்ப்புகளின் கீறல்கள். 'வலிகளின் சன்மானம்' நேர்த்தியாக பையினுள் கிடக்க கரங்களின் இடைக்குள் செருகிக் கொண்டே, அனுமதியோடு உள்நுழைந்து இருக்கையில் சாய்ந்தான். இருப்பவர்களில் இவன்தான் இறுதி. எப்போது தன்முறை வருமென,

ஒவ்வொரு படைப்பாளி முகத்திலும் பரபரப்பு. தேர்வாளர்களிடம் சென்று படைப்பாளி முகத்திலும் பரபரப்பு. தேர்வாளர்களிடம் சென்று வெளியேறுகின்றவர்களில் சிலர் புன்னகை கலந்த பெருமிதத் தோடும், வேறு சிலர் மௌனத்தைப் போர்த்தியபடியும் இவனைக் கடந்து கொண்டிருக்க, நட்சத்திரனின் இதயத்தினுள் மெல்லியதாய் துடித்த "லப்டப் லப்டப்" சத்தம் இப்போது பெரியதாகியதாய் ஓர் பிரமை. அந்த பதற்றத்தை கட்டாயப்படுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த போது, சட்டென அந்த நினைவு வந்து இவனுள்ளே ஒட்டிக் கொண்டது.

(வலிகள் தொடரும்...)

# சாத்தான்!

**அவன்** அந்த நடைபாதையில் இருந்த இருக்கை ஒன்றில் வானத்தை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். அவனுடைய மனதிற்குள் ஆயிரம் கேள்விகளும் அச்சங்களும் கலகம் செய்து கொண்டிருந்தன.

அவனிடம் நிரந்தர வதிவிட அனுமதி இல்லை. நிரந்தர வதிவிட அனுமதி இல்லை என்பதால் நிரந்தர வேலை இல்லை. நிரந்தர வேலை இல்லை என்பதால் வருவாய் போதுமானதாக இல்லை. வீட்டில் மனைவியுடன் அடிக்கடி சண்டைகளும் வர ஆரம்பித்து இருந்தன. ஊரில் இருந்து வருகின்ற கடிதங்களும் அவனுடைய மனச்சுமையை கூட்டுவதாகவே இருந்தன.

இந்தப் பிரச்சனைகளில் இருந்து வெளிவருவதற்கு அவனுக்கு எந்த வழியும் தென்படவில்லை. எதிர்காலத்தை நினைக்க அச்சமாக இருந்தது. யாரவாது வந்து தன்னை இந்தப் பிரச்சனைகளில் இருந்து கைதூக்கி விடமாட்டார்களா என்று அவன் ஏக்கத்தோடு நினைத்துக் கொண்டான்.

அப்பொழுதுதான் அவர்கள் அவனிடம் வந்தார்கள். அவர்கள் மிகவும் அழகாகவும் நாகரீகமாகவும் உடை அணிந்திருந்தார்கள். கையில் கறுப்பு அட்டையைக் கொண்ட ஒரு தடித்த புத்தகத்தை வைத்திருந்தார்கள். அவர்கள் அவனிடம் மெதுவாகவும் அன்பாகவும் பேச ஆரம்பித்தார்கள். அனைத்து துன்பங்களிடம் இருந்து விடுவிக்க தங்களிடம் வழி உண்டு என்று சொன்னார்கள். தேவனை சரணடையுங்கள், உங்களை துன்பங்களில் இருந்து அவர் விடுவிப்பார் என்றார்கள்.

அவன் பிடிவாதமாக மறுத்துவிட்டான். ஆனால் அவர்கள் மீண்டும் மீண்டும் வந்தார்கள். ஒரு முறை பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வாருங்கள் என்று வற்புறுத்தினார்கள். அவனும் அரை மனத்தோடு போனான். எல்லோரும் அவனை அன்பாக வரவேற்றார்கள். "சகோதரன்" என்று அழைத்தார்கள்.

என்ன ஆச்சரியம்?! அடுத்த நாள் அவனுக்கும் அவனது குடும்பத்திற்கும் நிரந்தர வதிவிட அனுமதி தருவதாக கடிதம் வந்திருந்தது. அவன் மெய்சிலிர்த்துப் போனான். தேவனின் செயலை எண்ணிப் புரித்துப் போய் நின்றான். சில வாரங்களில் அவன் ஒரு நல்ல வேலையையும் பெற்றுக் கொண்டான். சில மாதங்கள் கழித்து அவனுடைய பல பிரச்சனைகள் குறைந்து போயிருந்தன.

இப்பொழுது அவன் தேவனின் பெயரை மட்டும் உச்சரிக்கின்ற ஒருவனாக மாறிப் போயிருந்தான். அவனுடைய நண்பர்கள் வட்டமும் மாறிப் போயிருந்தது. கையில் எப்பொழுதும் கறுப்பு அட்டையைக் கொண்ட அந்த தடித்த புத்தகத்தை வைத்திருந்தான். அதை மட்டும்தான் அவன் வாசித்துக் கொண்டிருந்தான்.

தமிழ் பத்திரிகைகளை படிப்பதை நிறுத்தினான்.



திரைப்படங்களும், திரை இசைப் பாடல்களும் குப்பைக்குள் போயின. சுருதி கொஞ்சமும் இல்லாமல் தேவனே என்று அலறுகின்ற சத்தங்கள் அவனுக்கு இசையாகிப் போனது. அவைகளை கேட்கின்ற பொழுது மன அமைதி பிறப்பதாக நம்பினான். செய்து கொண்டிருந்த பங்களிப்புக்களையும் நிறுத்தினான். தேவனால் மட்டுமே விடுதலை கொடுக்க முடியும் என்றான். வீடு முழுவதும் தேவனின் வசனங்கள் நிறைந்திருந்தது.

பத்திரிகைகள், திரைப்படங்கள், யுத்தங்கள் அனைத்தும் சாத்தானின் படைப்புக்கள் என்றான். தேவனை ஏற்காத அனைவரும் சாத்தான்கள் என்றான். தேவனைப் பற்றிப் பேசுகின்ற போது பிரகாசமாகத் தெரிகின்ற அவனுடைய முகம், சாத்தானையும், சாத்தானின் படைப்புக்களையும் பற்றிப் பேசுகின்றபோது விகாரமாக தெரியத் தொடங்கியது.

அவன் தேவனை நோக்கி ஜெபிக்கின்ற போதும், தேவனின் வசனங்களை வாசிக்கின்ற போதும் தொலைபேசி எடுத்தும், நேரில் வந்தும் தொல்லை கொடுத்தவர்கள் அவனுக்கு சாத்தான்களாக தெரிந்தார்கள். மனைவியும் பிள்ளைகளும் கூட சாத்தான்களாக மாறியிருந்தார்கள்.


ஒரு நேரத்தில் அவன் தனித்துப் போனான். ஆனால் தேவன் தன்னுடன் இருப்பதாக சொன்னான். தேவனைக் கண்டதாகவும் பேசியதாகவும் சொன்னான். பிரார்த்தனைக் கூட்டத்தில் மனிதர்களை சந்திப்பதாக சொன்னான். இப்பொழுது அவன் தனக்கத்தானே பேசவும் தொடங்கியிருந்தான்.


ஒரு நாள் அவன் தனக்குதானே பேசியபடி வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்பொழுது வேகமாக வந்த ஒரு கார் அவன் மீது பயங்கரமாக மோதியது. தூக்கி வீசப்பட்ட அவன் சிறிது நேரம் துடிதுடித்து விட்டு இறந்து போனான். அதுவரை அவனைப் பீடித்திருந்த சாத்தான் ஒரு வெற்றிப்புன்னகையோடு வெளிக்கிளம்பி கறுப்புப் புத்தகத்தை தூக்கியபடி அடுத்த இலக்கை நோக்கிச் செல்வதற்கு ஆயத்தமானான்.

(யாவும் கற்பனை)

## சிரிப்பதற்கு

## ராசியான டாக்டர்





தருவது கே.வி.குணசேகரம்




"கடுகி அதர் அவைக்கும்
கல் சூழ் பதுக்கை
விடுவில் எயினர்தம் வினை
ஒர்த்து ஓடும்
நெடுவிடை அத்தம் செலவு
உரைப்பக் கேட்டே
வடுவிடை மெல்கின கான்."

மேலே உள்ள பாடல் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான 'கைந்நிலை' என்ற நூலில் உள்ளது. கை என்பதற்கு ஒழுக்கம் என்பது பொருள். ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் இந்நூலின் ஆசிரியர் புல்லாங்கடனார். இந்நூலில் எத்தனை பாடல்கள் உள்ள என் பதில் இலக்கியவாதிகளிடையே குழப்பம் உண்டு. இப்போது அழிந் தவை போக நிலைத்திருப்பவை இருபத்தியிரண்டு பாடல்கள். இந்த இருபத்தியிரண்டு பாடல்களும் ஒழுக்கத்தைப் பற்றியே கூறுகின்றன. தமிழ் இலக்கியங்கள் அகம் என்ற காதலையும், புறம் என்ற போரைப் பற்றியுமே விதந்து கூறுகின்றன. அந்நாளில் அரசர்களுக்கிடையே பேராசையால் அடிக்கடி போர் மூண்டன. இன்று போல போர் செய்வது பெரும் வீரம் என்று புலவர்கள் பெருமை யாகக்கூற இளைஞர்கள் அதனால் கவரப்பட்டுப் போர் என்பது உயிர்நீத்தனர். அங்க வீனங்களாகினர். இதனால் விபச்சாரம் பெருகியது. புலவர்கள் போரைப் புகழ்ந்தும், காதலைப் போற்றி யும், விபச்சாரத்தைக் கண்டித்தும் பல பாடல்களைப் பாடினர். அவைதான் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று குறிப்பிடப்பட்டுப் பெருமை பெற்றன.

கைந்நிலை காதலைப் பற்றியும், காதலரின் ஒழுக்கத்தைப் பற்றியும் அவர் களின் பிரிவுத்துயர் பற்றியும் அழகாக எடுத்துக் கூறும் ஒரு நூல். சங்க காலத்தில் நிலத்தை ஐந்தாக வகுத் திருந்தனர். பாலை நிலம் அதில் ஒன்று அது வளமில்லாத நிலம். அந்த நிலத்தில் உழைக்க முடியாது அதனால் அங்குள்ள இளைஞர்கள் வேறு ஊர்களுக்குச் சென்று உழைத்து வந்து குடும்பத்தைப் பராமரிப்பர். அதனால் குடும்பத் தலை வர்களைப் பிரிந்திருக்க வேண்டிய நிலை இளம் பெண்களுக்கு உண்டு.

காதலித்து அதன் பயனாகக்கூடி மகிழ்ந்த காதலனும் காதலியும் பிரிவால் மிகவும் வருந்தினர். அந்த வருத்தத் தைப் புல்லாங்கடனார் அனுபவித்துச் சொல்கின்றார். அதனால் காதலனைப் பிரிந்து துன்பப்படும் பெண்ணோடு சேர்ந்து இரண்டாயிரம் ஆண்டுகளாக அதைப் படிப்போரும் துன்பப்படுகின்றனர்.

காதலன் தனது காதலிக்குத் தான் வெளியூர் செல்வது பற்றிச் சொன்னால் தன்னைச் செல்லவிடமாட்டாள் என்று அஞ்சி அவளது தோழிக்குத் தான் வெளியூருக்குச் சென்று பணம் சம்பாதிக் கப் போவதாகச் சொல்லி அதை அவளுக்குக் கூறுமாறு சொல்கிறான். தோழிவந்து அவளுக்கு அதைக் கூறுகிறாள். அதனால் பெரும் துன்பப் பட்ட தலைவி அவனைப் போகவேண்டாம் என்று கூறுமாறு இரக்கின்றாள். அதனால் மனம் வருந்திய தோழி அவளது காதலனைச் சந்தித்துச் சொல்கிறாள். உனது காதலி உன்னைப் பிரிவதை எண்ணிப் பெரும் துன்பமடைந்து கண்களில் அருவி போல நீர்பாய அழுகிறாள். அவளது துயரத்தை என்னால் போக்க முடிய வில்லை. அதனால் நீவந்து அவளது துயரத்தைப் போக்கு.

இல்லாவிட்டால் வேற்றூருக்குச் செல்லும் நினைவை மாற்று. பாலை வனத்தினூடாகப் பயணம் செய்வது மிகவும் பயங்கரமானது. பாலைவனத்தின் ஊடாக வணிகர்கள் வியாபாரத்திற்காக வண்டில்களில் பொருட்களை எடுத்துச் செல்வார்கள்.வேற்றூருக்குச் செல்வோர் பொருட்களுடன் செல்வார்கள். அதனால் அவற்றைக் கொள்ளையடிக்கப் பல கள்வர்கள் காத்திருப்பார்கள். பாலை நிலத்தில் வாழும் மக்களின் பிரதான தொழில் வழிப்பறிக் கொள்ளைதானே. அதனால் கள்வர் கூரிய கொடிய ஆயுதங்களுடன் காத்திருப்பர். அவர்கள் பயணிகளைக் கண்டால் கொலையும் செய்யத் தயங்கமாட்டார் கள். அதைவிடக் யானைகளைப் போல உருண்டு திரண்ட பெரிய கற்பார் களின் இடையே கூறிய அம்புகளுடன் ஈட்டிகளுடன் வேடர் மறைந்திருப்பர். அவர்கள் பயங்கரமானவர்கள். வணிகர்கள் பொருட்களை ஏற்றி வரும் வண்டிகளை இழுக்கும் காளைகளுக்குக் குறிவைத்து அம்பு எய்வார்கள். இறந்தவை போக மிகுதியான எருதுகள் உயிருக்கு அஞ்சி ஓடும். அப்போது வேடர் ஆரவாரம் செய்து சீழ்க்கை ஒலி எழுப்புவார்கள். அதோடு குடிக்க நீர் இல்லாமல் இறந்தவர் பலர். வெயில் கொடுமையால் இறந்தவர் பலர். இந்தநிலையில் உனக்கு ஏன் வெளியூர்ப் பயணம் என்று கேட்டு அழுகிறாள். மாவடுவைப் பிளத்தாற் போன்ற அழகிய கருவிழிகள் துன்பத்தால் கண்ணீர் விடுகின்றன. ஆகையால் செல்லாதே என்கிறாள்.

கைந்நிலையில் உள்ள இருபத்தியிரண்டு பாடல்களும் இளம்பெண்களின் துன்பங்களை இயல்பாக வெளிப்படுத்திக் கலங்க வைக்கின்றன. மனிதன் முதன் முதலில் பிறந்த காலத்திலிருந்து இன்றுவரை பணம் தேடுவதற்காக உயிரை மதிக்காது பல கொடுமை களைத் தாண்டிச் செல்கிறான். அப்படியான வேளைகளில் காதலிகள் படும் துன்பத்தைப் பற்றி அந்நாளில் வாழ்ந்த புலவர் கள் உணர்ச்சிபூர்வமாக எழுதி யுள்ளனர். அந்தநிலை இன்றும் தொடர்கிறது அதுபோல அன்றைய துன்பமும் தொடர்ந்து கொண்டே யிருக்கின்றது என்று நீங்கும் இந்த இடம்பெயரும் துன்பம் என்று கலங்கிய வண்ணம் மக்கள் இருக் கிறார்கள்.அது பேகுமா. இல்லை. இன்றும் இரண்டாயிரம் வருடம் தொடருமா என்று சிந்திக்க முடியவில்லை.

# கருத்துக் களம்

தனிநபர், சமூகம், நாடு மீதான அக்கறை ஒரு தலைவருக்கு இருக்கவே செய்யும். அந்தவகை யில் இனமத மொழி பேதமின்றி ஜனாதிபதி அவர் கள் எல்லா மக்களுக்குமே முழுப்பங்களிப்பையும் செய்துவருகின்றார்.

இதை சீர்குலைக்கும் வகையில் தமிழ் நாட்டு முன்னாள் முதலமைச்சர், ஏனைய அரசியல்வாதி களின் அரசியல் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டிக் கொள்ளுவதற்கு தங்களாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவில் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி கொடுக்கக் கூடாது என்ற தமிழ் நாட்டின் கோரிக்கை இப்போது உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. அன்று புலிகளுக்கு பயிற்சி கொடுத்தபோது இங்கே பயிற்சி அளிக் கக்கூடாது எனக் கூறியிருக்கலாமே. அதை விடுத்து இப்போது இனபேதத்தை மேலும் மேலும் தூண்டுபவர்களாக தமிழ் நாடு இருப்பது கவலைக்குரிய விடயமே. இதை அவர்கள் சிந்திக்கும் மனநிலையிலும் இல்லை.

தமிழர்களுக்கு உரிமை வேண்டுமென நியாயங் களை முன்வைப்பதால் அதனால் ஏதேனும் விளைவு கள் ஏற்படுகின்றதா. இல்லையே. ஆர்ப்பாட்டங் கள், தீக்குளிப்புகள் என்பவை நடந்தும் பலன்கள் ஏதுமில்லை.

இவ்வாறு இனபேதங்களை தூண்டிவிடாது சிலவற்றை விட்டுக்கொடுத்து நாம் இலங்கையர் என்ற எண்ணத்தோடு செயற்பட்டாலே எல்லோருக் கும் வெற்றிதான்.

எஸ்.ஆதர்ஷா,
ஹட்டன்.

கருத்துக்களம்,
தினமுரசு, வாரமலர்,
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


## மலையாள மாந்திரீக



காலம் கடந்த திருமணம் ஒன்று கூட, ஓடிப்போனவர் தேடி வர, நினைத்த காதல் நிச்சயம் நிறைவேற, கல்வியில் சித்தி பெற, மனப்பயம் அகல, நிம்மதியான தூக்கம் பெற, பிரிந்தவர் ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, குழந்தை பாக்கியம் கிட்ட, குடிபோதையை நிறுத்த, நினைத்தது நினைத்தவாறு நடக்க என்னைச் சந்தியுங்கள்.



இது 48 வருட காலம் சேவை செய்யும் நிறுவனமே!
ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
தொ.பே: 011 2342463, 011 2342464, 011 2470615
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி - இல்லம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508
இது ஒரு அரச வரிகள் செலுத்தும் நம்பிக்கையான முன்னோடி நிறுவனமே!


# சிந்தியா பதில்

❁ சிந்தியா! த.தே.கூட்டமைப்பிற்குள் இடம்பெறும் உள்முரண்பாடுகளால் ஏற்படப்போகும் தாக்கம் என்ன?

எஸ்.பரமலிங்கம், திருகோணமலை.

புத்திஜீவிகள் என்போர் சித்து விளையாட்டுக் காட்டப் போகிறார்கள். சம்பந்தனைத் தலைவர் என்று தூக்குகிற வர்கள்தான் பிரபாகரனையும் அந்த ஏணியில் ஏற்றி வீழுத்தியவர்கள்.

இந்த யதார்த்தத்தை சம்மந்தரும் தமிழரசுக் கட்சியினரும் புரிந்து சககட்சிகளோ கட்டமைப் புரீதியாக உடன்பாடு ஒன்றைக் காணாவிட்டால் தேசியத்தின் சிறகுகள் பலமிழந்து போகும்.

அவ்வாறான நிலையானது தமிழ் மக்களுக்கு பாதிப்பு எதையும் தந்துவிடாது. அரசியல் தளத்தில் சில பின்னடைவுகளை ஏற்படுத்துவ தோடு புதிய தலைமைத்துவங்களை உருவாக்க வும் செய்யும்.

❁ சிந்தியா! இந்தியாவில் இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கத் தடைவிதிக்க முடியாது என்ற இந்திய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புப் பற்றி?

திருமதி.அ.பானுஜா, சுண்ணாக்குளி

நாடுகளுக்கு இடையிலான உறவுகள், பிராந்தியப் பாதுகாப்பு, பிராந்திய வர்த்தகம், இராஜ்ஜிய உறவுகள் என்பவற்றை வெறும் உணர்ச்சி பெருக்கால் மட்டும் தடுத்து விடமுடி யாது என்பதை இந்திய உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு தெளிவுபடுத்தியிருந்தது.

துரதிர்ஷ்டவசமாக யதார்த்தங்களை மீறி சிந்திப்பதும் செயல்வடிவம் கொடுக்க முற்படுவதும் தோல்வியிலேயே முடிகின்றது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் இவற்றைப் புரிந்துகொண்டால் நல்லது.

❁ சிந்தியா! விரிவுரையாளர்களின் போராட்டத்தால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றதே?

எம்.யூடிற்லொசியா, நுவரெலியா.

பிரச்சினைகள் தொடர்பாக எப்போதும் ஆழமாகச் சிந்திக்கப்படல் வேண்டும். அடிப்படைப் பிரச்சினைகள், அன்றாடப் பிரச்சினைகள் என அவை இனங்காணப்படுதல் அவசியம்.நீங்கள் கூறுவது இன்றைய பிரச்சினை. விரிவுரையாளர் கள் கூறுவது அடிப்படைப் பிரச்சினை.

ஆகவே விரிவுரையாளர்களின் பிரச்சினையாக பார்க்கப்படுவதை விடவும் எதிர்காலக் கல்வி தொடர்பான பிரச்சினை என்று புரிந்து கொள்ளப்படுவதோடு நியாயமான வகையில் தீர்வு காணப்படவும் வேண்டும்.



❁ நீதித்துறை மீது நடக்கும் தாக்குதல் பற்றி சிந்தியாவின் அபிப்பிராயம் என்ன?

த.வதனன், திருநெல்வேலி.

மன்னாரில் நீதித்துறை சார்ந்த வர்கள் வீதியில் இறங்கிப் போராடிய போது 'நீதியே வீதியிலா' என்று ஆச்சரியப்பட்டோம். இப்போது தென்னிலங்கையிலும் அதேநிலை உருவாகியிருக்கிறது.

எது எப்படியாக இருந்தாலும் நீதித்துறை மீதான கண்ணியமும், கட்டுப்பாடும் எல்லோராலும் மதிக்கப்படவேண்டும். நீதிச்சேவை கள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீதான தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

நமது நாட்டில் நீதித்துறையை கௌரவம்மிக்கதாகப் பாதுகாப் பதற்கு நாம் அனைவரும் ஒத்து ழைக்கவேண்டும். இவ்வாறான தாக்குதல்கள் மற்றும் நீதியே நீதி கேட்டு வீதியில் இறங்கும் போராட்டங்கள் இலங்கையர்கள் அனைவரினதும் மதிப்பைக் குறைத்துவிடும்.

இவ்வாறான சூழல்கள் தவிர்க் கப்படுவது நல்லது.

❁ சிந்தியா! இன்றைய அரசியல் வாதியின் அரசியல் இலட்சணம் என்ன?

எவ்.இர்ஷாத், தர்ஹாநகர்.

சுயநம்பிக்கையும் இல்லாமல், சமூகம் மீதான நம்பிக்கையும் இல்லாமல் அதிகாரம் இருக்கும் வரை நானே தலைவன் என்று நடந்து கொள்கின்ற அவலட் சணமே இன்றைய இலட்சணம்.

❁ சிந்தியா! அடுத்தவர் துன்பத்தில் இன்பம் காண்பவர்கள் பற்றி?

நி.ரேவதி, கொழும்பு - 03

தற்காலிக மகிழ்ச்சியில் சந்தோசங்களைப் புதைக்கும் மூடர்கள்.

நாளை தனக்கெதிரே வீசிய ஒன்று தன்னை நோக்கியே திரும்பிவிடும் என்கின்ற உண்மை தெரியாதவர்கள்.

❁ இலங்கை அணி அதிர்ச்சித் தோல்வி அடைந்துவிட்டதே சிந்தியா?

எஸ்.ரகுவரன், ஹற்றன்.

இறுதிப்போட்டியில் இலங்கை அணியை புரட்டி எடுத்து விட்டது மே.இந்தியத் தீவுகள். இறுதிப்போட்டியிலும் சுழல் பந்துகள் ஜாலம் போட இரு அணிகளுமே சிக்கிச் சின்னா பின்னமாகியது என்னவோ உண்மைதான்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மே.இந்தியத் தீவுகளுக்கு இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் மத்தியூஸ், குலசேகர அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர். தொடர்ந்து வந்த மெண்டிஸின் பந்தில் விக்கெட்டுக்கள் எகிறின. ஆனால் எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது போலவே லசித்மாலிங்க அன்றைய தினமும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

ஆனால் அதிர்ச்சியடைந்தது இலங்கையின் ரசிகர்கள் என்பதுதான் சோகம். மாலிங்க வின் பந்துகளை சாமுவேல்ஸ் சிதறடித்துக் கொண்டிருக்கையில் தொடர்ந்தும் அவரையே பந்துவீச அழைத்த மஹேல வின் சூட்சுமம் இலங்கை ரசிகர்களுக்கு எரிச்சலை ஊட்டியிருக்கும். ஆனைக்கும் அடி சறுக்கும். அவ்விடத்தில் மஹேலவும் கொஞ்சம் சறுக்கி விட்டார்.

இலகுவான வெற்றி இலக்கை நோக்கித் துடுப் பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணியின் முக்கிய விக்கெட்டுக்கள் அவசரப்பட்டு ஆட்டமிழந்ததால் மத்திய வரிசையில் துடுப்பெடுத்தாட வந்த அனுபவமற்ற வீரர் களுக்கு தொற்றிக் கொண்ட பதட்டம் இலங்கையின் தோல்விக்கு முக்கிய காரண-மாக இருந்தது.

டில்சான், சங்கக்கார, மஹேல இவர்களில் யாரே ஒருவர் ஒருமுனையில் நிலைத்து நின்றிருப்பார்களாயின் ஜீவன், மெண்டிஸ், திஷர, மத்தியூஸ், குலசேகர ஆகிய மத்திய தரவரிசை வீரர்கள் அணியை வெற்றிநோக்கி அழைத்துச் சென்றிருப்பார்கள் என்ற ஆதங்கம் இலங்கை ரசிகர்கள் மத்தியில் இருக்கின்றது.

எது எப்படியோ சகல துறைகளிலும் விஸ்வரூபம் கொண்ட மே.இந்தியத் தீவுகள் வெற்றிக் கிண்ணத் தைத் தூக்கிச் சென்று விட்டது. ஒரு காலத்தில் கிரிக்கெட் ஜாம்பவான் களாக திகழ்ந்த கரீபியன் சிங்கங்கள் மீண்டும் தமது இருப்பை உரக்கச் சொல்லி இருக்கின்றது.

( 08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# கற்றுக்கொண்ட பாடங்கள்...

மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள அரசு மக்களுக்கு என்ன செய்யவேண்டும் என நாம் நினைக்கின்றோமோ அதனைச் செய்விப்பதற்கு நாம் அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்." என்றார் தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா.

சமாதானமும் சமூகப் பணிக்குமான அமைப்பின் தேசிய இணைப்பாளர் த. தயாபரன், எல்.எல்.ஆர்.சி யில் என்ன சொல்லப் பட்டிருக்கின்றது என்பதை மக்கள் விளங்கிக் கொள்வது பெரிய விடயம். இது ஒரு மட்டத்தில் மாத்திரம் பேசப்படும் ஒன்றாக மாறிவிட்டிருப்பதால் மக்கள் இதில் பங்காளர்களாக இல்லாமல் பார்வையாளர்களாகத் தூரவிலகி நிற்கவேண்டிய ஒரு நிலைமை காணப்படுகின்றது. மக்களுக்கு எதுவுமே தெரியாமலுள்ளது.

அரசாங்கம் தந்த அறிக்கையில் என்னென்ன விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றது, அரசு என்னென்ன விடயங்களைச் செய்யவேண்டும் என்று விரும்பியிருக்கின்றது என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அதேவேளை மக்களும் அரசாங்கம் அர்ப்பணிப்பதாகச் சொன்ன கருமங்கள் நடைபெறுகின்றதா என்பதை உற்றுக் கவனித்து அது நடைபெறாவிட்டால் அதனைத் தட்டிக் கேட்கக் கூடிய அழுத்தங்களை பரவலான முறையில் அரசுக்குக் கொடுக்கவேண்டும் இதனைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய பலம் சிவில் சமூகத்திற்கு இல்லாமல் போனாலும்கூட அதனை அமுல்படுத்தக் கூடிய அரசியல்வாதிகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்கலாம்.

அரச நிறுவனங்களும் அதற்குத் தலைமை தாங்கும் அதிகாரிகளும் எல்.எல்.ஆர்.சி விடயத்தில் முக்கியமானவர்கள். ஏனெனில் எல்.எல்.ஆர்.சி யில் சொல்லப்பட்ட பல விடயங்களை அமுல்படுத்தும் பொறுப்பு அரச அதிகாரிகளைச் சார்ந்ததாகும். அதனால் அவர்கள் உள்ளூர் மட்டத்தில் இந்த விடயங்களை அமுல்படுத்தாமல் தட்டிக் கழிக்கின்றார்களா என்பதையும் கூர்ந்து கவனித்து அது விடயமாகவும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

இது மக்களது பிரச்சினையாக இருக்கின்றபடியால் மக்களே தங்களுக்கான தீர்வுகள் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அதற்காக அமைப்புரீதியாக அல்லது ஏதாவதொரு கட்டமைப்புக்குக் கீழாவது மக்கள் அணிதிரண்டு செயற்பாட்டில் இறங்க முன்வரவேண்டும் என்றுதான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

முதலாவது கருத்தரங்கு அம்பாறையில் நடந்தது. அதில் 30 பேர் பங்குபற்றியிருந்தனர். ஆயுதப்படைகளோடு சம்பந்தப்பட்டிருந்தவர்களைத் தவிர அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூகம், மதத் தலைவர்கள், உள்ளூர்த் தலைவர்கள் இவ்வாறு எல்லோரும் இந்தச் செயலமர்வுகளிலே உள்வாங்கப்படுகின்றார்கள். மட்டக்களப்பில் 30 பேர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 50 பேர் வருகை தந்திருந்தார்கள்.

அடுத்தது மாத்தறையில் இடம்பெறவிருக்கின்றது. எல்.எல்.ஆர்.சி யில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் சிங்கள மக்களுக்கும் தெரியவரவேண்டும். அதேவேளை அரசு இப்படியானதொரு அறிக்கையை வைத்திருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்வதோடு சிங்கள மக்களும் இந்த விடயத்தில் இணைந்து கொண்டு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

அம்பாறை, மட்டக்களப்பு, மாத்தறை, புத்தளம் , திருகோண-மலை, யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துள்ளோம்.

"எல்.எல்.ஆர்.சி யின் அறிக்கை ஏனைய ஆணைக்குழுக்களின் அறிக்கை போன்று கிடப்பில் போடப்படாமல் இது செயற்பாட்டுக்கு வருகின்ற ஒரு ஆவணமாக இருக்கவேண்டும் அதனைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கமும் தனது உண்மையான அர்ப்பணிப்பைச் செய்யவேண்டும் அதேவேளை மக்களும் தங்களது உளப்பூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும்.

இந்த அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பை அரசு இன்னமும் அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை. அதேவேளை அதன் ஆங்கிலப் பிரதி கிடைக்கக்கூடியதாக உள்ளது. அரசு கட்டாயம் தமிழ் மொழிபெயர்ப்பையும் வெளியிடவேண்டும்." என்றார் தயாபரன்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எல்.எல்.ஆர்.சி யின் தமிழ் மொழியெர்ப்பை வெளியிட்டுள்ளது. சீட், யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம், தேசிய சமாதானப் பேரவை, தென்னாசிய பங்காளி அமைப்பு, சமாதானமும் சமூகப்பணிக்குமான அமைப்பு ஆகிய நிறுவனங்கள் கூட்டாக இணைந்து வி.எஸ்.ஓ சர்வதேசத் தொண்டர் நிறுவனத்தின் அனுசரணையோடு எல்.எல்.ஆர்.சி பற்றிய தெளிவுபடுத்தல்களை பொதுமக்கள் மத்தியில் நடத்திவருகின்றன. கலந்துரையாடல்கள் எல்.எல்.ஆர்.சி யின் சிபார்சுகளை அரசு அமுல்படுத்துவதற்கு அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்க இது நல்லதொரு சந்தர்ப்பத்தை வழங்குமென்று இந்த நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.

ஜனாதிபதி சட்டத்தரணி, தவிசாளர் திரு. சீ.ஆர்.டீ. சில்வாவைத் தலைவராகக் கொண்ட எல்.எல்.ஆர்.சி ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக கலாநிதி திரு. ஏ. ரொஹான் பெரேரா, பேராசிரியர் திரு. கருணாரத்ன ஹங்கவத்த, திரு. சீ. சண்முகம், திரு.எச்.எம்.ஜீ. ஸ்ரீபால பல்லி ஹக்கார, திருமதி. மனோஹரி இராமநாதன், திரு. எம். பராக்கிரம பரணகம (செயலாளர்) திரு.எச்.ரீ. எம்.பஃபீக் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

( 07ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# பல்கலைக்கழக...

நீண்ட நாட்களாக நடைபெற்று வரும் பல்கலைக்கழக ஆசிரியர்களது போராட்டமானது மக்கள் மத்தியில் சரியாகச் சென்றடையாமைக்கு போராட்டமானது சாதாரண மக்களுக்கு சரியான விளக்கங்களுடன் சென்றடையவில்லை என்பதே காரணமாகும்.

இந்தக் காரணத்துக்கான தீர்வினை மேற்கொள்ள வேண்டிய நிலையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனமானது உள்ளது என்பதே இப்போதைய நிலையாகும். ஆனாலும், இவ்வாறான தொரு போராட்டத்தினை கல்வியாளர்கள் தரப்பில் உயர் நிலையில் உள்ள பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேற்கொண்டு வருவதானது, மிகவும் முக்கியமானதும் காலத்தின் தேவையானதும் ஆகும்.

யுத்தகாலத்தில் யுத்தத்துக்கென செலவிடப்பட்ட பெருமளவான நிதி தற்போதைய காலத்தில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட வேண்டியதே என்ற வகையில், கல்விக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படுவதில் எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்தப் போவதில்லை.

இலங்கையில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் நடத்தி வருகின்ற தொழிற்சங்கப் போராட்டமானது, அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமும், பல்கலைக்கழகங்களைப் பாதுக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்திட்டங்கள், பத்து லட்சம் கையெழுத்துக்களைப் பெறும் வேலைத்திட்டம் எனத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

எதிர்ப்புப் போராட்டம் அரசாங்கத்தின் அரசியல் பிரச்சினைகளை தீவிரமாக்கியுள்ள நிலைமைகளிலும், அரசாங்கத்திற்கு எதிரான .அரசியல் போராட்டம் இன்றி, சம்பள உயர்வு கோரிக்கையை வென்றெடுக்க முடியாதென்பது மென்மேலும் தெளிவாகியுள்ள நிலைமைகளின் கீழேயே, இந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத் தலைமைத்துவம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதை தொடர்ச்சியாக நிராகரித்து வந்துள்ளதாகவும் யுத்தகாலத்தில் சம்பள உயர்வு கோரிய வேளையில், யுத்தத்தைக் காரணம் காட்டியதாகவும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கச் சம்மேளனம் அரசாங்கத்தினைக் குற்றம் சாட்டுகிறது.

வெறுமனே இப் போராட்டங்களை அரசியல் காரணங்களுக்கானவையாக வெளியில் காட்டுவதனால் உண்மைநிலையை மறைத்துவிட முடியாது எனப் பல்கலைக்கழக ஆசிரியர்களது நிலைப்பாடாக இருக்கிறது.

ஒரு அமைப்பு போராட்டத்தில் இறங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையைப் பார்த்து அரசாங்கம் கரிசனை எடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டும். அதனை விடுத்து காலம் அறியாது செயற்பாடுகளில் ஈடுபடுவது போராட்டத்தின் தோல்வியையே கொண்டுவரும்.

ஆனாலும் அரசாங்கத்துடன் சமரசம் செய்துகொண்டு போராட்டத்தை நிறுத்துவதற்கான பொறுப்பை அங்கத்தவர்கள் மீது திணித்து அரசால் மேற்கொள்ளப் படும் எதிர் நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழக ஆசிரியர்களை பலியாக்க முடியாத நிலையிலும் இப்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் உள்ளது என்பதும் தற்போதைய சூழ்நிலையாகும்.

ஆனாலும் சிலவேளைகளில் சில போராட்டங்களின்போது தமது தோல்வியை மறைத்துக் கொண்டு அரசாங்கத்துடன் சமரசத்துடன் செயற்படுவதே சிறப்பானதாகவும் இருக்கும். ஆனால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அரசாங்கத்துக்கு எதிரான ஒரு அரசியல் போராட்டம் இன்றி சம்பளம் மற்றும் ஏனைய கோரிக்கைகளை வெற்றிகொள்ள முடியாது என்பதையே மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளுடன் ஆரம்பத்தில் இருந்தே வெளிக்காட்டியுள்ளனர் என்பதும் உண்மையாகும்.

2006ஆம் ஆண்டு அதற்கு முன்னரும், பின்னர்கூட பல தடவைகளிலும் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து நிறைவேறாத நிலையிலேயே தாம் தம்முடைய போராட்டத்தினை மிகக் கடுமையாக தற்போது முன்னெடுத்து வருவதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தும் இருக்கின்றனர்.

இந்த இடத்தில் அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பினை மேற்கொள்வதில் கடைப்பிடித்து வரும் வழிமுறைகள் குறித்தும் குறைகள் ,தெரிவிக்கும்நிலை உருவாகிவருகிறது. இது போராட்டங்கள் பல எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையைத் தான் தோற்றுவிக்கப் போகிறது. அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வை கொடுக்காதிருப்பதுதானாம். வாழ்க்கை செலவுக்கு சமனற்ற விதத்தில் வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டியநிலைக்கே அரச ஊழியர்களைத் தள்ளிவருகிறது. இது எதிர்காலத்தில் கடன் சுமையினால் பல்வேறு பாரதூரமான பிரச்சினைகள் ஏற்படுவதற்குக் காலாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. கடந்த காலத்தில், தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிய போது அரசாங்கத்தினால் கூறப்பட்ட காரணங்களை தற்போது கூறமுடியாது என்பதே இதன் கருவாகும். ஆனாலும் பொருள்களின் விலையேற்றத்தில் எந்த மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. அது மாத்திரம் தொடர்ந்தும் ஏறிக்கொண்டே செல்கிறது என்பது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிகின்ற விடயமாகும். ஆனாலும் அது தொடர்பில் எதிர்க்கட்சிகள் சரியான நடவடிக்கை எதனையும் இதுவரை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் எழ ஆரம்பித்திருக்கிறது என்பதும் இதில் மறைந்திருப்பதாகும்.

நாட்டில், யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டின் வருமானங்கள் அதிகமாக அபிவிருத்திகளுக்காகச் செலவு செய்யப்படுகின்றன, ஒதுக்கப்படுகின்றன. இந்த அபிவிருத்திக்கான செலவு மாத்திரம் பெருந்தொகைக் கணக்கில் இருந்தாலும், பொருள்களின் விலையேற்றத்தால் ஏற்படும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினை எவ்வாறு சீர்செய்வது என்பதே இப்போது நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையாக இருக்கிறது.

இந்த இடத்தில்தான் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளான இலங்கையின் கல்விக்கான நிதியொதுக்கீட்டை அதிகரிக்கவேண்டும், தேசிய கல்விக்கொள்கையை உடன் அமுல்படுத்த வேண்டும், பல்கலைக்கழகங்களில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது.

வெளிநாட்டவர்களுக்கான புலமைப்பரிசில்களுக்காக ஒதுக்கப்படும் அதிகளவான நிதியினை, எமது நாட்டு மாணவர்களுக்குப் பயன்படுத்தலாம், பல்கலைக்கழக கல்வி சார் ஊழியர்களின் சம்பள அதிகரிப்புகள் உள்ளிட்ட கோரிக்கைகள் மீண்டும் ஒருமுறை ஞாபகப் படுத்தப்பட வேண்டியவைகளாக மாறுகின்றன.

மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்தல் என்பது சாதாரணமானதொன்றல்ல என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தாலும் இலவசக் கல்வி என்ற பெயரில் சகல பாடசாலைகளுக்கும் ஒவ்வொரு பெற்றோரும் செலவு செய்யும் செலவீனங்கள் எந்த வகைக்குள் செல்லும் என்பதும் கேள்வியாகிறது.

இவ்வாறு பலவாறும் பல வகைகளிலும் விவாதங்களைக் கொண்டு செல்லமுடியும். ஆனாலும், மக்களின் நலன் பேணும் திட்டங்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் ஏற்படப் போகும், க.பொ.த உயர்தரப் பரீட்சைத்தாள் கணிப்பீடு, காலம் தள்ளிப் போகப்போகின்ற பல்கலைக்கழக மாணவர்களின் பட்டப் படிப்புகள் எனப் பல பிரச்சினைகளையும் சிந்தித்து அர் சாங்கம் விரைந்து தீர்வினைக் கொடுத்தாக வேண்டும் என்பதே தற்போதைய நிலைப்பாடாகும்.

இதேநேரம் கல்வியாளர்கள் ஒருபோதும் முட்டாள்கள் அல்ல. அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் மக்கள் நலனுக்கும் பயனுடையவைகள்தான் என்ற உண்மையை சாதாரண மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்வதன்மூலம் மாத்திரமே இப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஊடாக மேற்கொள்ளப்படும் போராட்டத்தின் வெற்றி தங்கி இருக்கிறது.

( 03ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# ஆட்டம் காண்கிறது...

இது ஆரம்பத்தில் அனைத்து அங்கத்துவக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல் திணைக்களம் வரை சென்றுவிட்ட நிலையில் தமிழரசுக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் எதிர்ப்புக் காட்டியதைத் தொடர்ந்து கிடப்பில் போடப்பட்டது.

கடந்த வருடம் வடக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கு அதிக இடஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றது என்ற பிரச்சினை உருவாகியிருந்த நிலையில் அண்மையில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு வெற்றியும் பெற்றுள்ளனர்.

இதன்மூலம் தமிழரசுக் கட்சி கூட்டமைப்புக்குள் பலமாகி வருவதையும் தாங்கள் ஓரங்கட்டப்படுவதையும் உணர்ந்த ஏனைய கட்சித் தலைவர்கள் வடமாகாண-சபைத் தேர்தலுக்கு முன்னர் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் வடக்குக் கிழக்கு முழுவதிலும் தாங்கள் ஓரங்கட்டும் சூழல் ஏற்படுத்தப்படும் என்பதை உணர்ந்து பிரச்சினையை மூர்க்கமாக வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

இதன்மூலம் கூட்டு, ஒற்றுமை, என்பவை எல்லாம் வெறும் கட்டுக்கதைகள். சுயநலன்களை மட்டும் உள்நோக்கமாகக் கொண்டு மக்களை ஏமாற்றும் வெற்றுக் கோஷங்கள் என்பதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தக் கூட்டமைப்பானது உருவாக்கப்படுகின்றபோது அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கொள்கைகள், அரசியல் இலக்குகள் என்பவை கணக்கில் எடுக்கப்படாமல் வெறு-மனே தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டு கட்டப்பட்டதனால் இப்போது ஆட்டங்காண ஆரம்பித்திருக்கின்றது.

இந்நிலை கூட்டமைப்பை நம்பி வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் உண்டு பண்ணியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நிலையில் கூட்டமைப்பைச் சிதறடித்து தனிப் பயணம் மேற்கொள்வதன் மூலம் மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொள்ளமுடியாது என்பதினால் கருத்து வேறுபாடுகளை மனதுக்குள் பூட்டி வைத்துக்கொண்டு தொடர்ந்தும் கூட்டமைப்பாக இருப்பதையே சம்பந்தப் பட்ட அனைவரும் விரும்புவார்கள் என்ற எதிர்பார்ப்பும் இருக்கின்றது.

அரசியல் சுயநலன்களுக்காக அதில் இருப்பவர்கள் அவ்வாறு சிந்திப்பினும் கொள்கைரீதியான ஒற்றுமைகள், சமூகம்சார்ந்த அரசியல் வேலைத் திட்டம் எதுவும் அற்ற கூட்டமைப்பின் மீது தொடர்ந்தும் மக்கள் தமது நம்பிக்கையை வைத்துக் கொள்வார்களா என்பது சந்தேகம்தான்.




# காதிலை பூ கந்தசாமி

**கூத்தணியை பதிவுசெய்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவேணுமென்கிறதில கூத்தணியில இருக்கிற சகபாடிகள் விடாப்பிடியா இருக்கினம். ஆனாலும், தாய்க்கட்சி என்று சொல்லிக் கொள்ளுறவை ஒண்டா இருந்தாலும் சகபாடிகளை வித்தியாசமா வைச்சுக் கொள்ளாட்டி தங்கட இமேஜ் ஸ்பொயிலாயிடும் எண்டு நினைக்கினம். உந்தப் பிடுங்குப்பாடு உச்சத்துக்குப் போகியிருக்கிற நிலைமையில சகபாடிகள் எல்லாருமாச் சேர்ந்து தலைமைப் பொறுப்பில இருக்கிற பம்மாத்துக்காரருக்கு ஒரு றிக்குவெஸ்ற் கடிதம் அனுப்பி இருக்கினம்.**

**அதுபற்றிக் கேள்விப் பட்டதும் நேராய் பம்மாத்துக்காரரைத் தேடி காதில பூ கந்த சாமியார் பறந்து போயிட்டார்.**

**கா.பூ.க:** வணக்கம்! தலைவர்களுக்கு எல்லாம் தலைவரே உங்களுக்கே சோதனையா?

**பம்:** சோதனையா! விளங்கவில்லை கொஞ்சம் விளக்கமாகச் சொல்லலாமே.

**கா.பூ.க:** உங்க சகபாடிகளே உங்களுக்கு கடிதம் எழுதி இருக்கிறார்களாம். உங்கள்மீது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தியின் வெளிப்பாடாக அல்லவா இதனை வெளியிலே பேசிக்கொள்கிறார்கள்.

**பம்:** அவர்கள் தங்கள் இஷ்டத்துக்கு என்னை இழுத்துச் செல்லப் பார்க்கிறார்கள். தங்களது இருப்பை உறுதிப்படுத்த பொதுவான கட்சியாக எங்கள் கூத்தணியை உறுதிப்படுத்த வேண்டுமாம் அந்த கபட நோக்கக்காரர்கள். அவர்களின் விருப்பத்துக்கெல்லாம் வாலாட்டுவதற்கு நானென்ன அவர்கள் வீட்டு நாய்க்குட்டியா?

**கா.பூ.க:** இல்லைத் தலைவரே! ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்று படித்த ஞாபகம் அதைத்தானே அவர்களும் சொல்கிறார்கள். இதில் சமூகம் சார்ந்த கருத்து இருப்பதாக நீங்கள் கருதவில்லையா?

**பம்:** சமூகமாவது, சாம்பிராணியாவது...? எனக்கு றிக்குவஸ்ற் அனுப்பியவர்களில் சமூகநலன் பற்றிச் சிந்திக்கக் கூடிய ஒரு முகத்தை உம்மால் காட்ட முடியுமா? கூத்தணிக்குள் குந்திக்கொண்டிருந்தால்தான் புள்ளடி கிடைக்கும் என்பதால் புளுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**கா.பூ.க:** அது சரியாக இருந்தாலும் பொதுவான கட்சி ஒன்றை பதிவுசெய்து கொள்வதில் பிரச்சினை என்னதான் இருக்கிறது. சட்டச் சிக்கலா? இல்லை உங்கள் கட்சிக்குள் சிக்கலா?

**பம்:** சட்டத்தில் சிக்கலா? (சிரிக்கிறார்) அங்கே சிக்கல் வந்தால் அதில் இருக்கின்ற ஓட்டைகளுக்குள் புகுந்து வேட்டை நடத்துவது எமக்கொன்றும் புதியதல்ல.

**கா.பூ.க:** அப்படியானால், கட்சிக்குள் சிக்கல் என்று எடுத்துக்கொள்ளலாமா?

**பம்:** ஆம். பிணவாடை மாறாத கொலைகாரர்களையும் கடத்தல் பேர்வழிகளையும் கட்சி உறுப்பினர்கள் என்று இணைத்து அவர்களுக்கும் சமபந்திப் போஷணம் செய்யச் சொல்லிச் சொல்கிறீர்களா? அப்படிச்செய்தால் நாங்கள் கட்டிக் காத்துவரும் மேலோர் என்ற கீர்த்தியும் மாண்பும் கேலிக்குரியதாகிவிடாதா?

**கா.பூ.க:** இப்போதும் சமபந்திப்போஷணம் தானே செய்கிறீர்கள்.

**ப.ம்:** இல்லை.. இல்லை. பக்கதில் அமர அனுமதித்தாலும் எல்லைமீற அனுமதிப்பதில்லை. அதிகாரமானவர்ளை சந்திக்கும் போதெல்லாம் கை நனைக்காத இந்தக் கூட்டத்தினரை கைகழுவி விட்டுத்தான் செல்வேன். நீங்களும் அவதானித்திருப்பீர்கள்தானே.

**கா.பூ.க:** அப்படியாயின் ஏன் அவர்களோடு உறவு இருப்பதுபோன்று ஊருக்குக் காட்டி அப்பாவிகளின் தலையில் மிளகாய் அரைக்கிறீர்கள்?

**பம்:** அவர்களோடு நாங்கள் இருப்பதாக காட்டிக்கொண்ட காலம் நந்திக் கடலோடு கரைந்துவிட்டது. இப்போதெல்லாம் எம்மைப் பொறுத்தவரையில் அவர்கள் எல்லாம் அநாவசிய இணைப்புக்கள்தான். நாகரிகமான முறையில் விலத்துங்கள் என்று சொல்லிப்பார்க்கிறோம். ஆனால் விளங்காதவர்கள்போன்று ஒட்டிக்கொண்டே இருக்கிறார்கள். வீட்டைவிட்டு வெளியேறினால் வோட்டுக் கிடைக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் சமூக அக்கறை ஒருமித்த பலம் என்றெல்லாம் கதைகள் பலகூறி வீட்டுச் சின்னத்தை தங்களுக்கும் சொந்தமாக்கிக் கொள்ள நினைக்கிறார்கள் சுயநலவாதிகள்.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# அச்சுக் கலையின் தந்தை






அப்படி உருவாக்கிய உலோகத்துண்டை, சுத்திக் கொண்டு தட்டியோ, அல்லது காய்ச்சியோ, அதனால் அதில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு மகிழ்வான். உருகிய உலோகக் குழம்பை அச்சுக்களில் ஊற்றி, அது குளிர்ந்ததும் உண்டாகும் உருவ அமைப்பைப் பார்த்துக் குதூகலிப்பான். மற்றும் கோப்பை, அணிகலன்கள் ஆகியவற்றில் நகாசு வேலைசெய்து, அது பளபளப்பதைக்கண்டு அகமும் முகமும் மலர்ந்துபோவான்.

ஜோனின் பெற்றோருக்குத் தங்கள் மகன் ஏன் இப்படி உடல் உழைப்பில் ஆர்வம் கொண்டவனாக இருக்கிறான் என்பது புரியவேயில்லை. ஜோன் இப்போது நன்றாக வளர்ந்து வாலிபனாக விளங்கினான். மெயின்ஸ் நகரின் மற்ற பிரபுக்களின் பிள்ளைகளைப் போலவே கம்பீரமாகக் காட்சியளித்தான். ஆனால் அவர்களைப் போலக் கட்டுப்பாடின்றி வேட்டைகளிலோ, விருந்து முதலிய கேளிக்கைகளிலோ கலந்துகொள்ளுவதில்லை. பொழுதெல்லாம் பட்டறையிலேயே பழியாகக் கிடப்பான், "உலோகங்கள் என்னிடம் எத்தனையோ இரகசியங்களைக் கூறுகின்றன" என்பான்.

ஒரு நாள் வீட்டுக்கு வந்த ஜோன், மிகவும் பரபரப்புடன் காணப்பட்டான். "ஹாலந்து தேசத்திலிருந்து வந்திருக்கும் ஒரு பிரயாணி எங்களிடம் ஒரு அதிசயமான பொருளைக் காட்டினார். அதைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் இதற்குமுன் அதைப் பார்த்ததில்லை" என்று பெற்றோர்களிடம் சொல்லிச் சொல்லி வியந்து போனான்.



ஹாலந்து தேசத்துப் பிரயாணி பொற்கொல்லரின் பட்டறைக்குக் கொண்டுவந்து காட்டியது அப்படி என்ன அதிசயமான பொருள்? பரமபிதாவைப் பற்றிய பிரார்த்தனைப் பாடலின் கொப்பி செய்யப்பட்ட ஒரு காகிதம்! அது அதிசயமான காகிதம்தான். ஏனென்றால் அந்தப் பிரார்த்தனை கையால் எழுதிப்பிரதி செய்யப்பட்டதல்ல. அச்சடிக்கப்பட்டது! ஒரு பலகையில் எழுத்துக்களைச் செதுக்கி, ஒரு பக்கத்தைத் தயாரித்து, அதன்மீது மசியைத் தடவி காகிதத்தை அதன்மேலே வைத்து அழுத்தி – எடுக்கப்பட்ட பிரதி அது.

(தொடரும்....)

# இந்தவாரம் உங்கள் பலன்

(11.10.2012 தொடக்கம் 17.10.2012 வரை)

## மேடம்

தன்னிடம் பணிசெய்யும் அடிமை ஆட்களால் பிரச்சினைகளும் பொருள் இழப்பும் வாஇருப்பதால் கவனம் தேவை. பழைய இரும்பு இயந்திரம் இரசாயனம் போன்ற துறை சார்ந்தவர்கள், அணு ஆராய்ச்சித் துறையில் பணி ஆற்றுபவர்கள், அரசியல் அறிஞர்கள், மீன், முட்டை மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள், கம்பியூட்டர் மற்றும் நாடகத்துறை சார்ந்தவர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். தந்தை, மகன் உறவுகளில் இருந்து வந்துள்ள பிரச்சினைகள் குறைந்து ஒற்றுமை உண்டாகும். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான நற்பலனையே செய்யும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். ஆடம்பரச் செலவுகளைச் செய்ய எண்ணி புதிய கடன்கள் வாங்குவீர்கள்.

## இடபம்

மனைவிக்கு திடீரென நோய் வாய்ப்பட்டு மருத்துவச் செலவுகள் வந்துசேர இருப்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். தந்தையின் உடல்நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் சற்றுக் குறைவதன் மூலம் மருத்துவச் செலவுகள் குறைய வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்புள்ளது. பொதுத் தொண்டுகள் மற்றும் அநாதை இல்லங்களை நடத்துபவர்களுக்கு நற்பெயரும் புகழும் உண்டாகும். பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திர பாக்கியம் உண்டாகும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்கும். ஒரு சிலருக்குப் புதியவீடு மாற்றம் ஏற்படலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் உறவினர்களின் மூலமான நல்ல செய்திகள் வந்துசேரும்.

## மிதுனம்

புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்காக முயற்சிப்பீர்கள். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். கணவன், மனைவி உறுகள் சுமாராகக் காணப்படும். தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களை நாடுவது நல்லது. காரணமற்ற மனச்சஞ்சலங்கள் வர இருப்பதால் புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது உகந்ததாகும். வீடு வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் உண்டாகலாம். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்து போகலாம். ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் வீண் பிரச்சினைகள் உருவாகி பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கடகம்

தடைப்பட்டுப் போன சகோதர சகோதரிகளின் சுபகாரிய சம்பந்தமாக நல்ல தகவல்கள் வந்து சேரும். கண், காதுகளில் கவனம் தேவை. வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து வந்த பண உதவித்தொகைகள் கிடைக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்றுக் கால தாமதமாகவே நடத்துவது சிறந்ததாகும். நீண்டகாலமாக திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியங்கள் நிறைவேறும். உற்றார் மற்றும் உறவினர்களால் எந்தவிதமான ஆதாயமும் இல்லை. விடுபட்டுப் போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ளது. மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும்.

## சிங்கம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதன் மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும் காலமாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண்சிக்கலில் மாட்டிக் கொள்ளவேண்டாம். குடும்பச் சொத்துக்களில் வெகுகாலமாக இருந்து வந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்குவதற்காக எதிர்பார்த்த வங்கிக் கடன்கள் கை வந்துசேரும். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்து கடன் உதவித்தொகைகள் நண்பர்களின் உதவியால் கிடைக்கும் புதிய ஆடை, அணிகலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சற்றுப் பின்னடைவுகள் உண்டாகும்.

## கன்னி

வேலையாட்களால் எதிர்பார்த்த ஆதாயம் இல்லை. யாத்திரையின்போது சம்பந்தம் இல்லாத நபர்களுடைய தொடர்புகளால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்க்கவும். பூர்வீக சம்பந்தமான சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள்தீர இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் வரக்கூடுமாகையால் கவனமுடன் இருக்கவும். வராத பணம் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. குலதெய்வ வழிபாடுகளைச் செய்துவருவது நல்லது. உடல்நிலையில் சுரம் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சிகளைச் சற்றுத் தள்ளிப் போடுதல் நல்லது.

## துலாம்

வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்களது தாய்நாடு சென்று திரும்புவதற்கான வாய்ப்புகள் உள்ளது. நண்பர்களால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். புதிய கடன் வாங்கினால் திரும்பிச் செலுத்த இயலாமல் போகுமாகையால் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். பொருளாதாரத்தில் சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். தாயின் உடல்நிலையில் இருந்து வந்துள்ள பாதிப்புகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். கணவன், மனைவிக்குள் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் தொடர்புகள் ஏற்படக் கூடிய காலமாகும். சகோதர சகோதரர்களின் சுப காரியங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

## விருச்சிகம்

உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளிடம் மனக் கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட இருப்தால் முன்கோபத்தை தவிர்த்துப் பணி ஆற்றுதல் சிறந்ததாகும். ஒரு சிலருக்கு வீடு மற்றும் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடவும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல செய்திகள் கிடைக்கும். புதிய வீடு, நிலம் மற்றும் வாகனங்களை வாங்குவதற்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பேசப் பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

## தனுசு

மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தை வெற்றிகாமாகச் செய்துமுடிக்க வாய்ப்பு உள்ள காலமாகும். படித்த வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். தாயின் உடல்நிலையில் வெகுநாட்களாக இருந்து வந்துள்ள உடல்நிலை பாதிப்புகள் குறைந்து காணப்படும். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்களின் மூலமாக நல்ல லாபம் பெறுவார்கள். புதிய ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்குவதைச் சற்றுத் தள்ளிப் போடுதல் நல்லது. திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப கிடைக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மகரம்

வெகுகாலமாகப் பிரிந்துபோன கணவன், மனைவி இருவரும் ஒன்று சேருவார்கள். நீண்ட நாட்களாக வராத கடன் கொடுத்து இருந்த பணம் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். உடல்நிலையில் வாயு மற்றும் வாத சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. பழுதுபட்ட பழைய வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்காக பொருட்செலவுகள் வந்து சேரும். புதிய ஆடைகள் மற்றும் அணிகலன்களை வாங்குவதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்


புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த வங்கிக் கடன்கள் கை வந்துசேரும் காலமாகும். பொதுநலத் தொண்டுகளில் மிகவும் பிரியமுடன் ஈடுபட்டு நற்பெயர் புகழ் அடைய வாய்ப்பு உள்ளது. சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறைவேறும் காலமாகும். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும். ஒரு சிலருக்கு பணிசெய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்வீர்கள். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும்.

## மீனம்

மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். வெளிநாடு சென்று வருதல் போன்ற புதிய முயற்சிகளில் வேற்று மதத்தவரால் ஆதாயமும் நற்செய்திகளும் வந்து சேரும். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலைகள் காணப்படும். உடம்பில் கண், காது, தலை போன்ற பாகங்களில் சிற்சில உபாதைகள் வருவதன் மூலம் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். விபரீதமான எண்ணங்களை கைவிட்டுக் காரியத்தில் கவனமாய் இருப்பது நல்லது. உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் எதிர்பாராத பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)


# வாழ்வு எழுச்சி
# திவி நெகும
## குடிசைக் கைத்தொழில்






நீங்களும் சிறிய கைத்தொழிலை அல்லது வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க நினைக்கிறீர்களா?
அல்லது தங்களது சிறிய கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கிறீர்களா?



**இதோ அதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம் . . .**

மாவட்ட தொழில்நுட்ப கண்காட்சி மற்றும் அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் கீழ் உள்ள மாவட்டங்களில் நடைபெறுவதுடன் அதற்காக

## உங்கள் எல்லோருக்குமான அழைப்பு



**களுத்துறை மாவட்டம்**
**ஒக்டோபர் 13 - 14**
திஸ்ஸ தேசிய பாடசாலை,
களுத்துறை வடக்கு.

**மாத்தறை மாவட்டம்**
**ஒக்டோபர் 20 - 21**
புனித தோமஸ் ஆண்கள் கல்லூரி,
மாத்தறை

**இலகு கைத்தொழிலை ஆரம்பிக்கத் தேவையான.**

- தகுந்த கைத்தொழிலுக்கான அறிவுரை
- கைத்தொழிலுக்கு தேவையான இயந்திரங்களை அறிமுகப்படுத்தல் சந்தைப்படுத்தல்
- நிதி வசதிகளுக்கான அறிவுறுத்தல்கள்
- தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் வங்கிக்கடன் வசதிகள்

**இவ் எல்லா சேவைகளும் இலவசம்**

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழி காட்டல்களின் கீழ்**

- தொழில்நுட்பவியல் ஆராச்சி அமைச்சு
- கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
- இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு
- அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
- தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு

என்பவற்றுடன் இதர வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இணைப்பு - பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
அனுசரணை - பொருளாதார அபிவிருத்தி அமைச்சு